ISSN 2424-7111

# கலைக்கோபுரம்

கலை இலக்கிய சமூக சஞ்சிகை

இதழ் 03 வைகாசி - கார்த்திகை 2016

இதழாசிரியர்: விஸ்ணுராஜ் விஜயகுமார்



நான்காம் வருட மாணவர்கள்
சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம்
கிழக்குப் பல்கலைக்கழகம்

வி.விஜயகுமாரின்

கலைக் கோபுரம்

"எழுத்தின் செதுக்கல் வலி
தேசத்தின் செதுக்கலின் தூண்"

"கலைக்கோபுரம்"
ஆளுமை கொள்ள எமது
கழகத்தின் மனப்பூர்வமான
வாழ்த்துக்கள்

தமிழ் தேசிய இளைஞர் கழகம்

தலைமை இளைஞர் செயற்பாட்டு அலுவலகம்
இல.58, 5ம் ஒழுங்கை, கோவில்குளம், வவுனியா.
0766644059 0775058672 0770788719

# கலைக்கோபுரம்

## கலை இலக்கிய சமூக சஞ்சிகை

இதழ் : 03 வைகாசி - கார்த்திகை 2016

**இதழாசிரியர்**
வி.விஜயகுமார்

**பொறுப்பாளர்**
ச.பிரபா

**அட்டை வடிவமைப்பாளர்,**
அ.அருள் சஞ்ஜுத்

**சஞ்சிகை குழு**
செ.மோகனா
ப.றொக்சவதி
சி.சாமந்தி
ந.ஜெயப்பிரியா
த.அமல்ராஜ்
வி.சுதர்சன்
சோ.தினேஸ்குமார்

**கணனி பிரயோகம்**
சு.விஷ்ணுகா

**கணனி வடிவமைப்பு**
ஷெரோனி பிரிண்டர்ஸ்
கூளாவடி, மட்டக்களப்பு.
065 2228660

**விளம்பர ஒருங்கமைப்பாளர்**
செ.ஐங்கரன்
க.அகிலன்
வ.இளங்கோ

**வெளியீடு**
மாணவர் ஒன்றியம்,
சு.வி.அ.க.நிறுவகம்
கிழக்குப்பல்கலைக்கழகம்.

**விலை : 150/-**

**தொடர்புகளிற்கு**
இதழாசிரியர் - வி.விஜயகுமார்
சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம்
கிழக்குப்பல்கலைக்கழகம்.
Mobile : 077-0321209

| | | |
|---|---|---|
| 01. | பொருளடக்கம் | 01 |
| 02. | வாழ்த்துச் செய்தி – திரு.சி.மௌனகுரு | 02 |
| 03. | வாழ்த்துச்செய்தி – கலாநிதி.சி.ஜெயசங்கர் | 03 |
| 04. | வாழ்த்துச் செய்தி – செல்வி.ச.சுப்ரமணியம் | 04 |
| 05. | வாழ்த்துச் செய்தி – திரு.S.சிவராஜன் | 05 |
| 06. | மாணவர் ஒன்றியம் – திரு.பொ.சுரேந்திரன் | 06 |
| 07. | இதழாசிரியர் உரை – திரு.வி.விஜயகுமார் | 07 |
| 08. | பொறுப்பாளர் உரை – திரு.ச.பிரபா | 08 |
| 09. | இலவச கல்வியின் இன்றைய நிலை | 09 |
| 10. | பெண்களுக்கான மருத்துவம் | 13 |
| 11. | இசை நாடகமும் கர்நாடக இசையும் | 14 |
| 12. | சார்லிசாப்ளினின் வாழ்க்கை | 21 |
| 13. | மீண்டும் நான் குழந்தையாக..... | 25 |
| 14. | தமிழர்களின் பழமை | 26 |
| 15. | சிவ தாண்டவங்களுள் சப்த தாண்டவம் | 30 |
| 16. | காலத்தின் போக்கில் நான் பார்த்தது | 33 |
| 17. | தியானம் | 36 |
| 18. | பரதக்கலையில் ஆண்கள் | 38 |
| 19. | அரையர் சேவை | 44 |
| 20. | கும்மி | 47 |
| 21. | வானொலி நாடகம் எழுதும் முறை | 54 |
| 22. | கர்நாடக இசை வரலாறு | 58 |
| 23. | எச்ஐவி | 60 |
| 24. | ஓவியமும் ஒளிப்படவியலும் | 66 |
| 25. | பனைமரத்தோட்டத்து பச்சைக்கிளியே... | 69 |



# வாழ்த்துச் செய்தி

எனக்கு மிகுந்த ஆச்சரியம்தரும் செயற்பாடுகளில் கலைக்கோபுர வெளியீடும் ஒன்று. எந்தவித பொருளாதார வளமுமின்றி தம் சுயமுயற்சியிலும், சொந்த உழைப்பிலும் காலூன்றி நின்று அனைவரையும் வளைத்துப்பிடித்து ஆக்கங்களைப் பெற்று கலைக்கோபுரத்தின் மூன்றாவது இதழை வெளிக்கொணர்ந்த வி.விஜயகுமாரும் அவரை முன்னின்று இயக்கிய ச.பிரபாவும் என்னை ஆச்சரியப்பட வைத்த இரண்டு மாணவர்கள். விஜயகுமார் விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவக நாடகத்துறை மாணவர். அதேவேளை அரங்க ஆய்வுகூட தீவிர உறுப்பினர்களாய் இருந்தவர்களில் ஒருவர். ஒவ்வொரு முறையும் பயிற்சிகள் முடித்து அன்றைய படைப்புச் செயற்பாடுகளை நிறைவு செய்த பின்னர் மாணவர்களோடு நான் உரையாடுவது வழமை. மாணவர்கள் தம் கருத்துக்களை ஒளிவுமறைவின்றி பயமின்றி வெளிப்படுத்துவதற்கான சூழ்நிலை அங்கு உருவாகியிருக்கும். எல்லா மாணவர்களும் கருத்துக்கள் கூறி முடிந்த பின்னர் விஜயகுமார் தன் கருத்துக்களை கூற முன் வருவார். ஒரு சின்ன கதையோடு அன்று நடந்த நிகழ்வுகளை இணைத்து ஒரு தத்துவக்குறிப்போடு தன் உரையை முடிப்பார். நாம் அனைவரும் அவருக்கு அன்று செல்லமாகச் சூட்டிய பெயர் 'தத்துவம்' என்பதாகும்.

அந்த தத்துவம் பல்கலைக்கழக வாழ்க்கையில் செயற்படும் விதம் ஏனைய மாணவர்களில் இருந்து அவரை வேறுபடுத்திக் காட்டுகின்றது. இரவு நேரத்தில் உழைப்பும், பகல் முழுவதும் படிப்பு. படிப்பினிடையே கலைக்கோபுரம் போன்ற காத்திரமான சஞ்சிகை வெளியீடுகள். என் பார்வையில் இவன் ஒரு அசாதாரண மனிதன். சாதாரண மாணவர்களே வரலாற்றின் திசைகளைத் திருப்புவார்கள். கலைக்கோபுரத்தின் முதலாவது இதழைவிட இரண்டாம் இதழில் கோபுரத்தின் வளர்ச்சி தெரிந்தது. மூன்றாம் இதழில் முன்னயதைவிட பெரும் வளர்ச்சி தென்படுகிறது. இது மாணவர்கள் சஞ்சிகையானபடியால் மாணவர் குறித்தான வளர்ச்சி காணப்படினும் சில இடங்களில் மீறல்களையும் காணுகின்றேன். இதன் சிறப்பு யாதெனின் அங்கு கற்பிக்கப்படும் சகல பாடநெறிகளையும் பயிலும் மாணவர்கள் இதில் எழுதுவதுதான். விஜயகுமார் நாடகத்துறை மாணவன் அவர் இச்சஞ்சிகையை தான்சார்ந்த துறையோடு மட்டுப்படுத்திக்கொள்ளாமல் ஏனைய துறைகளிற்கும் விரித்துள்ளார். இது அவரது பரந்த சிந்தனையினதும் அனைவரையும் அரவணைத்துப் போகும் பரந்த மனப்பாங்கினதும் வெளிப்பாடாகும். இந்த பண்புகளை இங்குள்ள அனைவரும் பெறுவாராக. விஜயகுமாருக்கும் அவரோடு சேர்ந்து இயங்கும் தளரா மனம் கொண்ட இளைஞர் குழாமிற்கும் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்

சி.மௌனகுரு



# வாழ்த்துச் செய்தி

சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக நான்காம் வருட மாணவர்களின் கூட்டு முயற்சியின் பயனாக 'கலைக்கோபுரம்' எனும் கலை – இலக்கிய – சமூக சஞ்சிகை வருடந்தோறும் வெளியிடப்பட்டு வருகிறது. இதன் அடுத்த இதழ் தற்போது உருவாகியுள்ளது. இதுவொரு பாராட்டத்தக்க விடயமாகும்.

பெருகிப் பரவுக ஆக்கபூர்வ முன்னெடுப்புகள் பேச்சுக்கள், எழுத்துக்கள் என்பவை எங்களது சிந்தனைப் போக்குகளை வெளிப்படுத்துபவை. எங்களது பலங்கள் பலவீனங்களை அடையாளப்படுத்துபவை.

எனவே எங்களது எழுத்துக்களையும் பேச்சுக்களையும் மதிப்பீடு செய்வதும் மீள்மதிப்பீடு செய்வதும் மிகவும் அவசியமாகின்றது.

இதற்கு பல்வேறு கருத்தாக்கங்கள், எண்ணக்கருக்கள், விடயங்கள் பற்றிய தொடர் உரையாடல்கள் தேவையாகி இருக்கின்றன.

அதற்கான ஒரு களமாக கலைக்கோபுரம் சஞ்சிகை அமைந்திருக்கின்றது. மாணவரது முயற்சியில் உருவாகி வெளிவரும் கலை இலக்கிய சமூக சஞ்சிகையான கலைக்கோபுரம் புலமைத்துவ உரையாடலுக்கும் சமூக செயற்பாடுகளுக்கும் தூண்டியாக அமைவதோடு கருத்து நிலைத் தெளிவிற்கும் வழிப்படுத்துவதாக இருக்க வேண்டும்.

மாணவரது ஆர்வமும் அர்ப்பணிப்பும் ஆக்கபூர்வமான முன்னெடுப்பாகப் பெருகிப் பரவ வழிசெய்தல் எம் எல்லோரதும் பொறுப்பாகும்.

**கலாநிதி சி.ஜெயசங்கர்**
பணிப்பாளர்
சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்
கிழக்குப் பல்கலைக்கழகம்.



# வாழ்த்துச் செய்தி

சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் கலை இலக்கிய வட்டத்தினர் ஆண்டுதோறும் வெளியிடும் 'கலைக்கோபுரம்' சஞ்சிகையின் ஆசிரியர்க்கும், அவரது குழுவினருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.

இச்சஞ்சிகையினை வெளியிடுவதால் மாணவர்களின் அறிவு விருத்தியடைகின்றது, கலை உணர்விற்கு வலுச்சேர்க்கின்றது, சிந்தனைகள் ஒன்று திரட்டப்பட்டு வெளிப்படுத்தப்படுகின்றது. பலதரப்பட்ட குண இயல்புகளைக் கொண்ட மாணவர்களிடையே, ஆக்கபூர்வமாக, அறிவுக்கூர்மையுடன் செயற்படும் மாணவர்களின் செயற்பாடே இக்கலைக்கோபுரத்தின் வெளிப்பாடு. இக் கலைக்கோபுரத்தின் பிரதிநிதிகளாக மாணவர்கள் தமது படைப்புக்களை வெளி உலகிற்கு எடுத்துக்காட்டும் உந்துசக்தியாக இது உள்ளது என்றால் மிகையாகாது.

கலைக்கோபுரம் எதுவித தடையுமின்றி தொடர்ச்சியாக வெளியிடவும், நிறுவக மாணவர்களின் கலைக்கோபுரம் இலட்சிய கோபுரமாய் வளரவும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**ச.சுப்ரமணியம்**
(செல்வி. சரஸ்வதி சுப்பரமணியம்)
ஓய்வு நிலை விரிவுரையாளர்.

# NORTH CEYLON ORIENTAL MUSIC SOCIETY

## வட இலங்கைச் சங்கீத சபை

Established : 1931

Phone : 021 - 222 9719
021 - 222 2647
021 - 222 2449

Ref No : ..............................

Chemmany Road,
Nallur,
Jaffna.
.............200.....

*President:*
Mrs A. Vedanayagam
Zonal Director of Education,
Jaffna

*Vice Presidents:*
Mr. Y. Raveendran
Deputy Director of Education,
Jaffna

Mr S. Kanapathippillai
Retd. Deputy Director of Education,
Chulipuram

Miss. T. Sellathurai
Retd. Music Teacher,
Jaffna

*Secretary:*
Mr A. Dhatparanandhan
Retd. Divisional Director of Education
Kandarodai, Chunnakam,

*Treasurer :*
Mr. V. Sivagnanachekaram
Music Teacher, Kondavil

*Executive Committee:*
Mr. L. Thiloganayagam Paul
Retd. Asst Director of Education,
Aanaikoddai

Mrs. Shanthini Sivanesan
Teachers Training College
Lecturer Dance,
Kolavil

Mr. S. Balachchandran,
Music Teacher,
Chulipuram

Miss. T. Saroja
Retd. Music Teacher
Point - Pedro

Mrs. V. Kunchithapatham
Dance Teacher,
Jaffna.

Mr. S. Sivarajan
Principal
Uduvil, Chunnakam

Mr. K. pathmanathan
Music Teacher,
Jaffna

Miss. K. Mylvahanam
Asst. Director of Education
Jaffna

Mrs. V. Rajeendran
Music Teacher
Nallur

*Administrative Secretary:*
Mr. M. Arulaiah
Mallakam

கலை, விஞ்ஞான ஆக்கங்களைக் கொண்ட
"கலைக்கோபுரம்" சஞ்சிகைக்கான

# வாழ்த்துச் செய்தி

**க**லை என்பது ஓர் உணர்வினை அல்லது பெறுமானத்தினை வெளிப்படுத்துவதிலும், தொடர்புபடுத்துவதிலும் மனிதத்திறன் வெளிப்படும் முறையாகும். **"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர் திண்ணியராகப் பெறின்"** என்ற திருக்குறள் ஞாபகத்திற்கு வருகின்றது. சமுதாய வைராக்கியம் கொண்டோர் சமூகத்தின் பலதரப்பட்ட ஏற்றத் தாழ்வுகளைச் சமச்சீருடன் நோக்குபவர் இவர்கள் மொழி, கலை, கலாசார, பண்பாடுகளை முன்னேற்றுவதில் அரும்பெரும் தொண்டாற்றுபவர்கள்.

இந்த வகையில் சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவக கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் விதிவிலக்கானவர்கள் அல்ல. **"கலைக்கோபுரம்"** என்ற கலை, இலக்கிய, சமூக சஞ்சிகை மூலம் சமூகத்தின் தேவைகளை ஈடுசெய்ய முனைகின்றமை பெரும் வரவேற்புக்குரிய விடயம். எழுத்துத்துறையிலும், ஆவணப்படுத் – தலிலும் முத்திரை பதிக்க முயல்வதை பாரட்டுகின்றோம். கலையும், விஞ்ஞானமும் இணையும் போது புதிய வளர்ச்சிப்பாதை தோன்றும். மருத்துவம், விஞ்ஞானம், கலைக் கட்டுரைகள் இணைந்திருப்பதும், இதற்கு சிறந்த சுட்டியாகும். இக் கூட்டுமுயற்சியை பாராட்டுவதுடன் விசேடமாக இதழாசிரியர் திரு.வி.விஜயகுமார் பொறுப்பாளர் திரு.ச.பிரபா விசேட பாராட்டுக்குரியவர்கள். கிழக்குப்பல்கலைக்கழக மாணவர்களினது முயற்சியாக விளங்கும் **"கலைக் கோபுரம்"** இதழுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைந்து வாழ்த்துகின்றேன்.

**S.சிவராஜன்** - செயலாளர்
வட இலங்கைச் சங்கீத சபை



# மாணவர் ஒன்றியத் தலைவர் உரை

எமது பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் மத்தியில் இருந்து ஒரு சஞ்சிகை வெளிவருவது என்பது உண்மையிலேயே சந்தோசப்பட வேண்டிய ஒரு விடயமாகும். அந்த வகையில் 'கலைக்கோபுரம்' எனும் கலை, இலக்கிய, சமூக சஞ்சிகை வெளிவருகின்றது. இதன் ஆசிரியராக வி.விஜயகுமார் அவர்களும், பொறுப்பாளராக ச.பிரபா அவர்களும் சஞ்சிகை குழுக்களாக 4ம் வருட மாணவர்களும் அச்சாணியாக இருந்து சஞ்சிகைகளை வெளியிட்டு வருகின்றனர். அவர்களின் செயற்பாட்டை மாணவர் ஒன்றியம் சார்பாக மனப்பூர்வமாக பாராட்டுகின்றோம்.

இனிவரும் காலங்களிலும் இவர்களுடைய இலக்கியப் படைப்புகள் வெளிவர வேண்டும் என்பது எங்களது அவாவாக உள்ளது. மேலும் இந்த சஞ்சிகையில் மாணவர்கள், விரிவுரையாளர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தும், கலைஞர்களை கௌரவிக்கும் முகமாகவும், அவர்களிடம் மறைந்திருக்கும் திறமைகளை வெளிக் கொண்டு வருவதற்கும் தக்க இடமாக 'கலைக்கோபுரம்' விளங்குகின்றது. இனிவரும் காலங்களில் எமது மாணவர்களும் இவ்வாறான கலைச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு உந்துசக்தியாக இருப்பார்கள். இதற்கு மாணவர் ஒன்றியத்தின் ஒத்துழைப்பு எப்பொழுதும் இருக்கும் என்பதுடன், கலையினை வளர்ப்பதற்கு முயற்சி செய்பவர்களுக்கு எப்பொழுதும் மாணவர் ஒன்றியம் முன்னிற்கும்.

**பொ.சுரேந்திரன்**
மாணவர் ஒன்றியம்,
சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்.



# இதழாசிரியர் உரை

சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம் கிழக்குப்பல்கலைக்கழகம் நான்காம் வருட மாணவர்களின் ஒத்துழைப்பின் பிரகாரம் கலைக்கோபுரம் எனும் சஞ்சிகையினை உருவாக்கி வருகிறேன். இக்கலைக்கோபுரத்தின் வளர்ச்சி தற்போது இதழ் மூன்றாக பரிணமித்துள்ளது என்று தான் கூறவேண்டும். இதன் வளர்ச்சிப்பாதையில் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் போன்றோரே ஏணிப்படிகளாய் நின்று வழிநடத்தியுள்ளனர் என்றால் மிகையாகாது.

காலம் பல்வேறு மாற்றங்களைக் கண்டு பரிணமித்தபோதும் அதனை ஆவணப்படுத்த வேண்டும், எங்களுடைய கலை, கலாசார, விழுமியங்கள் பேணப்பட வேண்டும் என்ற நோக்கிலும், சமூக மட்டத்தை வழிநடத்த வேண்டியவர்களாய் பல்கலைக்கழக மாணவர்கள் இருப்பதனாலும் தான் இன்னும் மங்காது மூன்றாவது இதழாக உருவாகியுள்ளது இக் கலைக்கோபுரம். ஆரம்பத்தில் இதற்கான அடித்தளத்தை போடுவதும், இதற்கான விளம்பரங்களை தந்து உதவுவதும் அரிதாக இருந்தது. தற்போது அந்த நிலைமாறி விளம்பரதாரர்களே கல்வியினை மேம்படுத்த வேண்டும், சமூகத்திற்கு இக் கருத்துக்கள் தேவை என்கின்ற வகையில் ஒத்துழைப்பினை வழங்குகின்றார்கள் இது பாராட்டத்தக்க விடயமாகும்.

மேலும் எமது படைப்புகளிற்கு சில ஆலோசனைகளை தந்து எங்களை வழிநடத்தியவராக கி.செந்தூரன் அவர்கள் திகழ்கின்றார். அதுமட்டுமன்றி துவண்டுபோய் நிற்கும் வேளையில் "உன்னால் முடியும்" என்று எனக்கு நம்பிக்கை கொடுத்த நண்பன் ச.பிரபாவை இவ்விடத்தில் அடையாளம் காட்டியே தீரவேண்டும். வெறுமனே தனிப்பட்ட முறையில் இதனை உருவாக்க முடியாது. இதற்கு துணையாய் நின்ற சஞ்சிகை குழுவிற்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

எல்லோருக்கும் தன்னை அடையாளப்படுத்திக்கொள்ள ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும் அது எனக்கு இங்கு கிடைத்தது. இதுவரை மூன்று இதழினை வெளியிட்டுள்ளேன். இனியும் என் பயணம் தொடரும். நண்பர்களே! உங்கள் ஆளுமைகளை வளர்த்துக் கொள்ள நல்ல களம் இது பயன்படுத்தி கொள்ளுங்கள்.... சகோதரர்களே!

**இதழாசிரியர் – வி.விஜயகுமார்**
நான்காம் வருடம் நாடகத்துறை,
சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்.



# பொறுப்பாளர் உரை

அன்பிற்குரிய கலைக்கோபுர வாசகர்களிற்கு அன்பின் பணிவு இந்த 'கலைக்கோபுரம்' சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம் கிழக்குப் பல்கலைக்கழகம், நான்காம் வருட மாணவன் வி.விஜயகுமார் தலைமையில் உருவாகி வருகிறது. தற்போது இதழ் மூன்றில் காலடி எடுத்து வைத்துள்ளது. இதன் வளர்ச்சியில் விரிவுரையாளர்கள், ஆசிரியர், மாணவர்களின் பங்களிப்பே உறுதுணையாக நிற்பதனைக் காணலாம்.

இக் கலைக்கோபுரம் கலை இலக்கிய சமூக மட்டங்களை உள்ளடக்கிய வண்ணம் கட்டுரைகளைக்கொண்டு வெளியிடப்பட்டு வருவதனைக் கண்டுகொள்ளகூடியதாய் உள்ளது என்றால் மிகையாகாது. இங்கு இசை, நடனம், நாடகம், கட்புலனும் தொழிநுட்பவியலும் போன்ற கற்கைகள் சார்ந்தும், மாணவர்களிற்கு கல்வி நடவடிக்கைக்கு துணைபுரியும் வகையிலும் இது புனையப்பட்டுள்ளதைக் கண்டுகொள்ளக்கூடியதாய் உள்ளது.


மேலும் எமது வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் விளம்பரதாரர்களிற்கும் இவ்விடத்தில் நன்றிகளை கூறவேண்டும். இவர்கள் தங்களது அடையாளத்தை மக்களிடம் கொண்டுசெல்லும் நோக்கில் விளம்பரங்களைத் தந்தாலும் அவர்களது நோக்கம் கல்வி செயற்பாட்டை முன்னேற்ற வேண்டும் என்று கூறுவதனைக் கண்டுகொள்ளக்கூடியதாய் உள்ளது. மேலும் நாங்கள் தளர்வுகொள்ளும் போதெல்லாம் ஏணிப்படியாய் இருந்த LG முகாமையாளர் சம்சுதின முஹமட் அவர்களுக்கும் இவ்விடத்தில் நன்றியைக் கூறிக் கொள்கின்றோம்.

மேலும் எமது நிறுவக பணிப்பாளர் அவர்களுக்கும் எங்கள் சஞ்சிகைக்கு ஆலோசனைகளை தந்து திறம்பட எமது படைப்பை வெளிக்கொணர உதவிபுரிந்த வாசகர்களிற்கும் நண்பர்களிற்கும் எமது படைப்பிற்கு துணைநின்ற அனைத்து நெஞ்சங் – களிற்கும் எமது கலைக்கோபுர சஞ்சிகை சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பொறுப்பாளர் – ச.பிரபா**
நான்காம் வருடம் நாடகத்துறை,
சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

ஊர்க்குருவி
மட்டக்களப்பு

# இலவசக் கல்வியின் இன்றைய நிலை



வளர்ச்சியடைந்துவரும் நாடுகளுடன் ஒப்பிடுகையில் எமது நாடு உயர்ந்த கல்விதரமுடைய நாடாகும். இதற்குக் காரணம் எமது நாட்டில் இலவசக் கல்வி முழுமையாக நடைமுறையில் உள்ளமையினைக் குறிப்பிடலாம். தற்போதைய பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளை ஆராய்கின்ற போது இலவசக்கல்வியின் குறிக்கோள்கள் முழுமையாக எய்தப்படுகின்றனவா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. நாட்டிற்கேற்ற நற்பிரஜைகளை உருவாக்குதல் எனும் கல்வியின் உயர்ந்த குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு நாட்டின் சகல பிரஜைகளும் வறியோர், செல்வந்தர் என்ற ஏற்ற தாழ்வுகளின்றி கல்வியை சமமாக பெறவேண்டும் என்ற உயர்ந்த நோக்கில் மறைந்த எமது மதிப்பிற்குறிய C.W.W.கன்னங்கரா அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இலவசக்கல்வி திட்டமானது மாணவர்களிற்கு முழுமையாக பயன்கொடுக்கும் நிலை மாறிவருகின்றது. ஆண்டு தோறும் நடைப்பெற்று வருகின்ற பொதுப்பரீட்சைகளில் எமது மாணவர்கள் போட்டிபோட்டுக்கொண்டு உயர்ந்தபட்ச பெறுபேறுகளைப் பெறுகின்றபோதிலும் அதன் பின்னணியில் மாணவர்களும் பெற்றோரும் படும் சிரமங்கள் எண்ணிக்கையற்றது. அரச பாடசாலையில் கற்பித்தலின் தரம் குறைந்து தனியார் கல்வி நிலையங்களின் பக்கம் மாணவர்களின் கவனம் திரும்புவதற்கு காரணம் என்ன? அதனால் மாணவர்கள் உடல், உள, சமூக ரீதியாக எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்ன? தனியார் கல்வி நிலையங்களின் போக்கு எவ்வாறிருக்கின்றது? இது முற்றுமுழுதாக மாணவர்களுக்கு பொருத்தமானதா? பாடசாலைகளில் தரம்வாய்ந்த கற்பித்தல் ஏன் அவசியம்? பாடசாலைகளில் எத்தகைய மாற்றம் வரவேற்கத்தக்கது? என்பனவற்றை சற்று இங்கே எடுத்துக்கூறுவது காலத்தின் தேவையாகும்.

இலவசக் கல்வியின் நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டு பாடசாலைக்கு ஆசிரியர்கள் அரசினால் நியமிக்கப்பட்டு அவர்களுக்கு பொருத்தமான சம்பளமும் வழங்கப்படுகின்றது இலவசப் பாடநூல், இலவச சீருடை, இலவச மதிய உணவு, பாடசாலையிலே கற்றல் உபகரணங்கள் அனைத்தும் அரசினால் வழங்கப்படுகின்றது. ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் தமது பாடத்துறையிலே தேர்ச்சியும் பயிற்சியும் பெற்றவர்கள் ஒவ்வொரு ஆசிரியரும் தனது மனசாட்சிக்கும் தான் வழிப்படுகின்ற இறைசாட்சிக்கும் பொருத்தமாக தனது கற்பித்தல் பணிகளை மேற்கொள்வார்களாயின் மாணவர்கள் மிக திருப்தியான முறையிலே தமது கற்றல் தேவைகளைப் பூர்த்தி செய்து பயன் பெற முடியும். தமது பணத்தையும் நேரத்தையும் வீண்விரயம் செய்யத் தேவையில்லை.

முன்னைய காலத்தில் குறிப்பிட்ட கட்டாய பாடங்கள் சிலவற்றை மீளக் கற்பதற்காகவே வசதி படைத்த மாணவர்கள் மாத்திரம் பிரத்தியேக வகுப்புகளுக்கு சென்றனர். ஆனால் இன்று சமயம் முதல் சித்திரம் வரை அனைத்துப் பாடங்களுக்குமே அனைத்து மாணவர்களும் பிரத்தியேக வகுப்புகளுககு செல்ல வேண்டிய நிலை உருவாகியுள்ளது இதற்கு காரணம் பாடசாலைகளிலே கற்பித்தல் நடவடிக்கைகள் மிக மந்தமாக காணப்படுவதே. பாடத் திட்டங்கள் உரியமுறையிலே முழுமையாக கற்பிக்கப்படுவதில்லை போட்டியிலே நானும் முன்னிலையில் வரவேண்டும் என்ற நோக்கில் மாணவர்கள் டியூசன் வகுப்புகளுக்கு செல்கின்றனர். பெற்றோரும் பெருந் தொகைப் பணத்தை செலவிடுகின்றனர்.

கடமை உணர்வுடனும் அர்ப்பணிப்புடனும் கற்பித்து வழிக்காட்டக்கூடிய பல நல்ல ஆசிரியர்கள் சமூகத்தில் இருந்தபோதிலும் பின்னடைவுகளையும் இங்கு குறிப்பிடவேண்டியுள்ளது. நகர்ப்புற பாடசாலைகளுக்கும் தேசிய பாடசாலைகளிற்கும் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் அனுமதி பெற்று மாணவர்கள் செல்கின்றபோது அங்கு எதிர்பார்த்த பலன் கிடைக்காமல் போவது கவலைக்குரிய விடயமாகும்.

பாடசாலைகளிலே தமது கற்பித்தலை முழுமையாக ஆசிரியர்கள் நிறைவேற்ற முடியாமைக்கு பின்வரும் காரணங்களைக் குறிப்பிடலாம். இன்றைய கல்வி முறையில் ஆசிரியர்களுக்கு சுமத்தப்படுகின்ற கற்பித்தல் தவிர்ந்த ஏனைய பணிகள், குழுப் பரிசோதனைகளில் தாம் கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஆவணங்களை தயாரப்படுத்தல், சுட்டிகள் எனும் வேலைத திட்டத்திற்கு தகவல் சேகரித்தல், பிரத்தியேக கல்வி நிலையங்களிலே பெரும்பாலான மாணவர்கள் கற்றுக்கொள்வதால் தாம் சிரமப்படத தேவையில்லை.

மேலோட்டமாக தட்டிக்கொடுத்தால் போதும் என்ற மனப்பாங்கு, கற்பித்துக் கொண்டே தானும் கற்று பதவி உயர்வுகளை பெற முடிகின்றமை, சிலர் கடமை உணர்வு குறைந்தவர்களாய் காணப்படுகின்றமை, மாணவர்களுக்கு உயிரோட்டமான எந்த பலாபலன்களையும் பெற்றுத்தராத SBA வேலைத் திட்டம், இதற்கான ஆசிரியர்களின் நேரம் செலவிடப்படுகின்றமை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

பாடசாலை நேரத்திலே முறையான கற்பித்தல் ஏன் அவசியம் என்று சற்று நோக்குவோம். ஒவ்வொருநாளும் கிட்டத்தட்ட 06 மணி நேரங்களை மாணவர்கள் பாடசாலையிலேயே செலவிடுகின்றனர். காலை முதல் நண்பகல் வரையிலான நேரமே மாணவர்களின் உடலும் உள்ளமும் சுறுசுறுப்பாக இயங்கக்கூடிய நேரமாகும். இந்த நேரத்திலே 40 நிமிடநேர பாடவேளைகளாக மாறிமாறி அனைத்துப் பாடங்களும் கற்பிக்கப்படும் போது அது உரிய முறையில் மனதில் பதிந்து சிறந்த பலன்களைத் தரக்கூடியது. பல்வேறு பாடங்களினூடாக பல்வேறு திறன்களைப் பெற்று மாணவர்கள் திருப்தியும் ஆற்றலும் உள்ளவர்களாக திகழ முடியும். மேலும் குறித்த ஒரு சீருடையிலே மாணவர்கள் எளிமையாக இருந்து கற்கின்றபோது அவர்களது கவனம் வேறு திசையில் செல்ல சந்தர்ப்பமில்லை. மேலும் வகுப்பறையிலே குறித்த எண்ணிக்கை மாணவர்கள் ஒரு கட்டுக்கோப்பிற்குள் இருந்து கற்கின்றபோது அவர்கள் ஒழுக்கம் சீர்குலைய வாய்ப்பில்லை. ஆனால் இதேவேளை பாட வேளைகளில் பாடங்கள் நடைபெறாமல் போனால் மாணவர்கள் வீண் பேச்சுகளிற்கும் சண்டை சச்சரவுகளுக்கும் ஆளாகவேண்டி ஏற்படும். அவர்களது ஒழுககம் சீர்குலையவும் ஆசிரியர்களிடம் அவநம்பிக்கை ஏற்படவும் வாய்ப்புள்ளது.

பிரத்தியோக கல்வி நிலையங்களுக்கு மாணவர்கள் முழுநேரத்தையும் செலவிடுவது எத்தகைய பாதிப்பை ஏற்படுத்துகின்றது என சற்று நோக்குவோம். பாடசாலை விட்டதும் ஓட்டமும் நடையுமாகச்சென்று புத்தகப்பைகளை மாற்றிக் கொண்டு மாணவர்கள் டியூசன் வகுப்புகளுக்கு விரைகின்றனர். ஒருவேளை உணவுகளைக்கூட சரியாக உட்கொள்ள சந்தர்ப்பம் இல்லை. மாலை வேளைகள் வார இறுதி நாட்கள், பொதுவிடுமுறை தினங்கள், தவணை விடுமுறைகள் எல்லாமே திட்டமிட்டுப் போட்டிபோட்டுக்கொண்டு டியூசன் வகுபபுக்கள் ஒழுங்குசெய்யப்படுகின்றன. கற்றல் மூலம் சலிப்படைந்த மனதிற்கு புத்துணர்ச்சியூட்டுவதற்காகவே அந்த ஓய்வுகள் வழங்கப்படுகின்றன. மேலும் மாணவர் பருவத்திலே ஓய்வு நேரங்களில் விளையாடுதல், குடும்பத்துடன் இணைந்திருத்தல், சமய வழிபாடுகளில் ஈடுபடல், தமது வாழ்வை சீராகக் கொண்டு நடத்தத் தேவையான திறன்களை வளர்த்துக்கொள்ளல், குடும்ப

வேலைகளில் பங்குகொள்ளல், பயனுள்ள பொழுதுபோக்கில் ஈடுபடல் போன்றவற்றிற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். ஆனால் பிரத்தியேக வகுப்புக்கள் இதற்கு தடையாக அமைகின்றன. இதனால் பல உடல், உள நெருக்கீடுகளிற்கு மாணவர்கள் ஆளாகின்றனர்.

பிரத்தியேக கல்வி நிலையங்களில் பின்வரும் செயற்பாடுகள் பிரதி கூலங்களாக அமைகின்றன. முறையான கற்றல் நடைபெறுவதற்கு 40 நிமிட வேளையே கற்பிக்க வேண்டும். ஆனால் இங்கு 02 மணி நேரங்கள் ஒரு பாடம் கற்பிக்கப்படுகின்றது. ஒரு வகுப்பறையிலே கூடியது 30 மாணவர்களையே தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்து ஒரு ஆசிரியரால் கற்பிக்க முடியும். ஆனால் இங்கு 300 மாணவர்களும் ஒரே ஆசிரியரால் கற்பிக்கப்படுகின்றனர். அனைத்து மாணவர்களையும் ஆசிரியரால் கண்காணிக்க முடியாது. ஆண், பெண் மாணவர்கள் சுதந்திரமாக பழகவும் கையடக்க தொலைப்பேசி போன்ற தொடர்பு சாதனங்களை பயன்படுத்தவும். வீண் அரட்டைகளில் ஈடுபட்டு கற்கக்கூடிய மாணவர்களிற்கு இடையூறு விளைவிக்கவும. மாணவர் ஒழுக்கம் சீர்குலையவும் இங்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. இந் நிலைகளை சீர்செய்து இலவசக் கல்வியின் முழுமையான பலனை மாணவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் பின்வரும் மாற்றங்களை செய்ய வேண்டும்.

பாடசாலைகளில் முழுமையாக ஆசிரியர்கள் கற்பித்தலில் ஈடுபடக்கூடிய வகையில் ஆசிரியரின் பணிகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். பாடசாலை நிர்வாகத்திற்கு தேவையான ஏனைய விடயங்களை, பதிவுகளை மேற்கொள் -வதற்கென்று எழுதுவினைஞர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். SBA வேலைகளை மாற்றி அலகுப் பரீட்சைகளாக செயற்படுத்த வேண்டும். இதன் மூலம் மாணவர்களின் அடைவு மட்டங்களை மதிப்பீடு செய்து பின்னூட்டலை வழங்கமுடியும். கல்வித்திணைக்களம் மேற் கொள்ளும் குழுப் பரிசோதனைகளைத் தவிர்த்து திடீர் அவதானிப்புகளையும் ஆலோசனைகளையும் ஆசிரியர்களுக்கு வழங்கவேண்டும். பிரத்தியேக கல்வி நிலையங்கள் மாணவர் ஒழுக்கமும் நலனும் சீர்குலையாத வகையில் வரையறுத்த மாணவர் தொகையுடன் போதிய ஓய்வுக்கு இடமளிக்கும் வகையில் வகுப்புக்களை ஒழுங்கமைக்க வேண்டும். பெற்றோரும் தமது பிள்ளைகளிற்கு மிக முக்கியம் என கருதும் வகுப்புகளிற்கு மாத்திரம் பூரண கண்காணிப்புடன் அனுப்ப வேண்டும். மேற்குறிப்பிட்ட விடயங்களை எமது மாணவரும், பெற்றோரும், ஆசிரியர்களும் உணர்ந்து செயற்பட்டால் மாணவர்களுக்கு இன்றிருக்கும் கல்விச்சுமைகள் இலகுப்படுத்தப்பட்டு சிறந்த அடைவு மட்டங்களைப் பெறமுடியும். இலவசக் கல்வியின் முறையான பயனையும் பெற்றுக்கொள்ள முடியும்.

சிவலிங்கம் சாமந்தி
4ம் வருடம் - இசைத்துறை.



# பெண்களுக்கான மருத்துவ குறிப்புகள்

இளவயதில் தினமும் ஒரு கப் பால் குடிப்பது, எலும்புகளை வலுவாக்கி கல்சியம் சத்தை அதிகரிக்கும். முட்டைகோஸில் ஈஸ்ட்ரோஜன் அதிகமென்பதால் மார்பக புற்று வராமல் தடுக்க கோதுமை உணவுடன் கோஸ் சேர்த்து உண்ணலாம். மார்பக புற்று உள்ளிட்ட பல்வேறு புற்று நோய்கள் வராமல் தடுக்க ஆப்பிள் உதவுகிறது.

மாதவிடாய்க் கால மன அழுத்தம், பயம், பதற்றம் ஆகியவற்றால் தொந்தரவா? அந்தநாட்களில் கார்ன்.'.பிளாக்ஸை காலை உணவாக்குங்கள். கர்ப்பிணிகள், நாவல்பழம் சாப்பிட்டால் வயிற்றில் உள்ள குழந்தை கறுப்பாகப் பிறக்கும் என்பதும், குங்குமப்பூ சாப்பிட்டால் சிவப்பாகப் பிறக்கும் என்பதும் மூட நம்பிக்கையே. தோலின் நிறத்தை நிர்ணயிப்பவை 'மெலனின்' எனப்படும் நிறமிகளே!


கர்ப்பிணிகள், இரும்புச்சத்து மாத்திரை சாப்பிட்டால், உடல் லேசாக கறுத்து, பிறகு பழைய நிறத்துக்கு வந்துவிடும். இதை வைத்தே, குழந்தையும் கறுப்பாகப் பிறக்கும் என்று சிலர் பயப்படுவார்கள். அது தேவையற்றது. கர்ப்பிணிப் பெண்கள், காலையில் சீக்கிரம் சாப்பிட வேண்டும். இதனால் ரத்தத்தில் உள்ள சக்கரையின் அளவு குறையாமலிருக்கும். அடிக்கடி மயக்கமும் வராது. வயிற்றில் குழந்தை வளர வளர, குடல் ஒருபக்கம் தளளும். அப்போது அதிகமாக சாப்பிட முடியாது. அந்த நேரங்களில் ஜூஸ், முளை கட்டிய தானியங்கள் போன்றவற்றை, பல வேளைகளாகப் பிரித்துச் சாப்பிடவேண்டும். பிரசவ காலத்துக்குப் பின் வயிற்று தசைகள் வலுப்பெற உடற்பயிற்சிகள் செய்யவேண்டும். கர்ப்பிணிகளின் உடலுக்கு இயற்கையான குளிர்ச்சியைத் தருகிறது வாழைப்பழம். உடல் காரணங்களால் மட்டுமல்ல, உணர்ச்சிவசப்படுவதாலும் உடலைப் பாதிக்கும் சூட்டை வாழைப்பழம் நீக்குகிறது.

கர்ப்பக்காலத்தில் சிலருக்கு கால்கள் வீங்குவது வழக்கமான ஒன்று. அதிகமாக தண்ணீர் குடிப்பதால் தான் இப்படி என்று சொல்வது தவறு. கர்ப்பக்காலத்தில் மலச்சிக்கல் பிரச்சினைவரும். அதைத் தவிர்க்க அதிகமாக தண்ணீர் குடிக்க வேண்டும். பிரசவம் முடிந்த சிலநாட்களில், வயிறு சுருங்க வேண்டும் என்பதற்காக பெரிய துணியை வயிற்றில் கட்டிவிடுவார்கள். அது தவறு. இதனால் கருப்பை கீழிறங்கிட வாய்ப்பு உண்டு.

வெற்றிவேல் நிலக்சன்
4ம் வருடம் - நாடகமும் அரங்கியலும்

# இசை நாடகமும் ஈழத்தின் கர்நாடக இசை வரலாறு பற்றிய ஒரு பார்வையும்





இசை நாடகமும் ஈழத்தின் கர்நாடக இசை வரலாறு, ஈழத்தமிழர்கள் பெரும்பாலும் தமிழக மக்களின் கலை, கலாசாரம், பண்பாடுகளுடன் ஒத்த வாழ்க்கை முறையில் வாழ்பவர்களாயினும், தமிழகத்தில் தோன்றி பெரு விருட்சமாக வியாபித்து நிற்கும் கர்நாடக இசையானது கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுக்கு முன்னரே ஈழத்தில் பரவலாயிற்று. மும்மூர்த்திகள் முதலான இசை வாக்கேயக்காரர்கள் பல நூற்றாண்டுகளிற்கு முன்பே கர்நாடக இசையிலக்கணங்களையும் இசை உருப்படிகளையும் தெய்வீக இசைஞான நுண்ணறிவால் உருவாக்கி இவ்வுலக மாந்தரிடம் தந்துள்ளனர். இவர்கள் இயற்றிய கீர்த்தனைகளே கர்நாடக இசையை இன்றும் உயிர் வாழச்செய்து கொண்டிருக்கின்றன. உலக இசைகளில் மிக நுட்பமானது கர்நாடக இசையே. இவ்விசையானது தென்னிந்தியாவில் தோன்றி வளர்ந்து இன்று உலகமெங்கும் வாழும் அனைத்து மனிதர்களாலும் விரும்பப்படும் ஒரு சிறந்த இசைக்கலையாகப் பரவி வளர்ச்சி பெற்று வருகின்றது.

ஆனாலும் இக்கலையானது 1920களிற்குப் பிறகே ஈழத்தில் பரவலானதாக அறியமுடிகிறது. அதற்கு முன்னர் எம்மவரின் ரசனைக்குரிய கலைகளாக இருந்தவை நாட்டுப்புறக் கலைகளே. எனினும் இந்த நாட்டுப்புறக் கலைகளுள் கர்நாடக இசையின் தாக்கம் மிகுதியாகவே இருந்துள்ளது. அவ்வாறான கலைகள் மக்களின் பொழுது போக்கிற்கு உரியனவாகவும் வீட்டில் நடைபெறும் மங்கள வைபவத்தின் சந்தோஷ நிகழ்வுகளாகவும் மேலும் ஆலயத் திருவிழாக்களை சிறப்பிப்பனவாகவும் இருந்தன.

**கலைகளை மூன்று நிலைகளில் நோக்கலாம் :**

1) தொன்மைக்கலை (Primitire art)
2) நாட்டுப்புறக்கலை (Folk art)
3) நிருந்தியகலை (Classial art)

தொன்மைக்கலைகளானது நாட்டுப்புறக் கலைகளாகவும் நாட்டுப்புறக் கலைகள் செம்மைப்படுத்தப்பட்ட பின்னர் சாஸ்திரியக் கலைகளாகவும் வளர்கின்றன.

இசை நாடகமும் ஈழத்தின் கர்நாடக இசை வரலாறு ஈழத்தில் கர்நாடக இசையானது பரவுவதற்கு முன் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்த கலைகளாக சிலம்பாட்டம், காவடியாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், கோலாட்டம், கும்மி, பொய்க்கால் குதிரையாட்டம், வேதாள ஆட்டம், பேயாட்டம், வசந்தன், பாவைக்கூத்து, நாட்டுக்கூத்து, வில்லுப்பாட்டு, இசை நாடகம், என்பவற்றைக் கூறலாம். இவைதவிர எம்மவரின் கிராமிய நடனங்களான குறத்தி நடனம், பொம்மை நடனம், கும்மி நடனம், குரவை நடனம், ஏந்தல் நடனம், உருவேறிய நடனம், முகமூடி நடனம் - என்பனவற்றையும் கூறலாம். அத்துடன் நாட்டார் பாடல் வகைகளான தாலாட்டுப்பாடல், கல்யாணப்பாடல், கப்பற்பாடல், குழந்தைப்பாடல், மருத்துவிச்சி வாழ்த்துப் பாடல், ஒப்பாரிப்பாடல், பள்ளுப்பாடல், குறவஞ்சிப்பாடல், கும்மி, கோலாட்டம், கரகம், காவடிப்பாடல்கள் என்பவற்றையும் குறிப்பிடலாம்.

இவற்றைவிட கர்நாடக இசையின் தாக்கம் வெகுவாகக் காணப்படும் கலைகளான கதாப்பிரசங்கம், இசைச் சொற்பொழிவு, புராண படலம் வாசித்தல், வில்லுப்பாட்டு, இசை நாடகம் என்பனவும் தென்மோடி, வடமோடிக் கூத்துக்கள் என்பனவும் கிராமியக் கலைகளாகவே மக்களால் பார்க்கப்பட்டன. இவற்றுள் இசை நாடகமானது முற்றுமுழுதாக கர்நாடக இசையால் அலங்கரிக்கப்பட்ட ஒரு கலைவடிவமாகும். 1920களிற்கு முன் இந்து ஆலயத் திருவிழாக்களை அலங்கரித்த பஜனைப் பாடல்கள், இசை நாடகங்கள் என்பனவும் முக்கியமான -வைகளாகும். இசை நாடகமானது கர்நாடக இசையின் அனைத்து நுட்பங்களும் உள்ளடங்கியதாக அமைக்கப்பட்டிருப்பதால் அக்கலையானது மக்கள் மத்தியில் தூய இசை ரசனையை ஏற்படுத்தியது எனலாம். அழகாக வேடமிட்டு இனிதாகப் பாடிச் சிறப்பாக நடித்து முத்தமிழ் முழக்கமிடும் கலையான இசைநாடகம் மக்களைக் கவர்ந்ததில் ஆச்சரியமில்லை.

இவ்வாறு மக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்குப் பெற்ற இசை நாடகமே ஈழத்தில் கர்நாடக இசை பரவுவதற்கும் மக்களால் கர்நாடக இசை ஏற்றுக் கொள்ளப்படுவதற்கும் காரணமாக அமைந்தது எனலாம். ஆகவே ஈழத்தின் கர்நாடக இசையின் பிறப்பும், வளர்ச்சியும் இசை நாடகக்

கலையுடன் தாய்சேய் உறவை உடையதாகக் காணப்படுகின்றது. ஏனெனில் ஈழத்தின் இசை முன்னோடிகளுள் ஒருவரான எஸ்.என்.சோமசுந்தரம் அவர்களின் தந்தையார் சிறந்ததொரு இசை நாடகக் கலைஞராவார். புத்துவாட்டி இரத்தினம் என அழைக்கப்படும் இவர், வயலின், மிருதங்கம், ஆர்மோனியம் போன்ற இசைக் கருவிகளை இசைக்கக்கூடியவராகவும் சிறந்த பாடகராகவும் விளங்கினார் என அறிய முடிகிறது.

மேலும் தமிழகத்திற்குச் சென்று கர்நாடக இசையில் முறைப்படி பயிற்சி பெறாமல் ஈழத்தில் வாழ்ந்த இசைமுன்னோடிகளின் வரலாறுகளை உற்றுநோக்கினால், அவர்கள் அனைவரும் இசைநாடகக் கலைஞர்களாகவே காணப்படுகின்றனர். எனினும், அவர்கள் கர்நாடக இசை தெரிந்தவர்களாகவே காணப்பட்டனர். இவர்கள் எப்படி எங்கு கர்நாடக இசை பயின்றனர் என்பதை அறிதல் அவசியமானதாகும்.

தென்னிந்தியாவில் இருந்து இசை நாடகத்திற்காக ஈழத்திற்கு வந்த இசை நாடகக்கலைஞர்கள் ஓய்வாக இருக்கும் வேளைகளில், அவர்களிடம் சென்று ஈழத்தின் இசை ஆர்வலர்களும் இசைக் கலைஞர்களும் கர்நாடக இசையையும் அதன் நுட்பங்களையும் தெரிந்து கொண்டனர் என்பது ஒரு கருத்து. இவ்வாறு இசைகற்கும் முறையானது அவ்வப்போது இசை நாடக நிகழ்விற்காக வரும் கலைஞர்களால் இங்கே அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் கர்நாடக இசையை முறைப்படி பயிலவேண்டும் என்ற ஆர்வம் எம்மவர்களிடையே உண்டானது..

**இசைநாடக வரலாற்றுப் படிமுறை :**

இனி ஈழத்தில் கர்நாடக இசையைப் பிரசவித்த இசை நாடகத்தின் சுருக்கமான வரலாற்றை நோக்குதல் முக்கியமானது. 1919ம் ஆண்டுக்கு முன்னரே இந்தியாவிலிருந்து இசை நாடகக் குழுவினர் ஈழத்திற்கு அடிக்கடி வந்து இசைநாடகங்களை நிகழ்த்திச் சென்றனர். இவ்வாறு, 1939ம் ஆண்டுவரை இந்தியக் கலைஞர்கள் வரவு தொடர்ந்தது. அதன் பின்னரும் இந்தியக் கலைஞர்களின் வரவு இருந்ததாயினும் ஈழத்தில் இசை நாடகக் கலைஞர்கள் தோன்றியமையாலும் சில அரசியல் நிலமைகளினாலும் இந்தியக் கலைஞர்களின் வரவு தடைப்பட்டுப்போனது. எனினும், இசை நாடக்கலை சிறப்பான வளர்ச்சியை அடைந்தது.

இசை நாடக்கக் கலை எப்படி கர்நாடக இசைக்கு உதவியாக இருக்கமுடியும் என்பதை சில உதாரணங்களுடன் கவனிப்பது சிறந்ததாகும். தென்னிந்தியாவில் இருந்து இசை நாடக நடிகர்களாக எம்.கே.தியாகராஜ

பாகவதர், ரி.ஆர்.மகாலிங்கம், கே.பி.சுந்தராம்பாள், கே.பி.கிட்டப்பா போன்ற சிலர் ஈழத்திற்கு வந்து சென்றனர். இவர்கள் சாதாரணமாக இசை நாடக நடிகர்கள் என்ற வரையறைக்குள் அடங்குபவர்கள் அல்லர். கர்நாடக இசையைச் சுத்தமாகக் கற்றுத்தேறிய சிறந்த பாடகர்களுமாவர். எனினும், இவர்கள் தம்மை இசை நாடகத்துறையிலே இன்பமுடன் ஈடுபடுத்தி பெரும் இசைநாடக மேதைகள் என்னும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடத்தைப் பெற்றனர். தமிழகத்திலும், ஈழத்திலும் இவர்கள் இசை நாடகங்களை நடித்து இசை நாடகம் எப்படி அமைய வேண்டும் என்று வரைவிலக்கணத்தையும் தந்துள்ளனர்.

## இசை நாடகக் கலைஞர்களுக்கு இருக்க வேண்டிய தகமைகள் :

இசை நாடக நடிகர்களுக்கு இருக்க வேண்டிய முக்கியமான பண்பு கர்நாடக சங்கீதம் தெரிந்திருக்கவேண்டும் என்பது. இல்லையேல் கேள்வி ஞானத்திலாவது சுருதி லயம் பிசகாமல் பாடத்தெரிந்திருக்க வேண்டும். அப்படியானவர்கள் பிரதான பாத்திரங்கள் தவிர்ந்த – சிறு நடிகர்களாகச் சேர்ந்துகொள்ளலாம். இசையால் நடித்துக்காட்டப்படும் நாடகம் இசை நாடகம். கர்நாடக சங்கீதம் தெரியாமல் நடிக்கத்தெரிந்த ஒருவர் தனக்கு நடிப்பு வருகின்றது என்பதற்காக இசை நாடகத்துக்குள் பிரவேசிக்கக்கூடாது. ஆனால், நடிப்பு வராத ஒருவர் சிறப்பாக பாடக்கூடியவராயின் அவரை இசை நாடகததில் இணைத்துக் கொள்வது பற்றி யோசிக்கலாம். பாத்திரத்திற்கு ஏற்ற தோற்றமும், பாடும் திறனும், உணர்ந்து நடிக்கும் நடிப்பாற்றலும், அழகு தமிழில் பேசும் ஆற்றலும் ஒருங்கே அமைந்த ஒருவரே இசைநாடகக் கலைஞராக முடியும். அத்துடன், இசை நாடகத்தில் ஹார்மோனியம் தவிர்ந்த வேறு எந்த மேலைத்தேய இசைக் கருவிகளையும் பயன்படுத்துவது முறையன்று. ஹார்மோனியத்துடன் மிருதங்கம், தபேலா போன்ற சுருதி சேர்க்கக்கூடிய தாள வாத்தியக் கருவிகளை உபயோகிப்பதே சிறந்தது.

## இசை நாடகங்களில் கையாளப்படும் இசை நுட்பங்கள் :

இசை நாடகமும் ஈழத்தின் கர்நாடக இசை வரலாறும் கர்நாடக இசையை நன்கு தெரிந்த நடிகர்கள் இசை நாடகங்களை நடித்தமையாலும் கர்நாடக இசை அறிவு மிகுந்தவர்கள் இசை நாடகங்களையும், இசை நாடகப் பாடல்களையும் உருவாக்கியமையாலும் இசை நுட்பம் மிகுந்த கலையாக இசை நாடகம் உருப்பெற்றது. ஒரு இசைக் கச்சேரியில் பாடுபவர், பக்கவாத்தியகாரர் ஆகியோருக்கிடையில் ஏற்படும் வித்துவ வெளிப்பாடுகளும் இசை நாடகங்களில் சக கலைஞர்களுக்கிடையேயும் – பக்கவாத்திய கலைஞர்களுக்கிடையேயும் – மேடைகளில் சர்வசாதாரணமாக நடைபெறும்.

**இசைநாடக இசை நுட்பங்கள் :**

- ✓ எல்லாவகையான தாளங்களிலும் பாடல்கள் அமைந்துள்ளன. (ஆதி, ரூபகம், மிஸ்ர சாப்பு, ஆதி திஸ்ர நடை, சௌக்ககாலம், கண்டநடை)
- ✓ நுட்பமான எடுப்புக்கள் நிறைந்த பாடல்கள். (சம எடுப்பு, அனாகத எடுப்பு, அதீத எடுப்பு)
- ✓ தெம்மாங்குப் பாணியில் அமைந்த பாடல்கள்.
- ✓ ஹிந்துஸ்தானி இசை முறையில் அமைந்த பாடல்கள்.
- ✓ ரசங்களுக்கு ஏற்றவாறு நுட்பமான ராகங்கள். (தோடி, பைரவி, மோகனம், நட பைரவி, சிந்து பைரவி, ஹம்சத்வனி, சாமா, அடானா, கானடா, ஹாபி, தேஷ், சங்கராபரணம், காவேரி, புன்னாகவராலி, முகாரி,டி காம்போதி, செஞ்சுருட்டி, கல்யாணி, கேதாரகௌளை, பந்துவராளி, கன்னியாசி, ஆரபி, பிலஹரி என்பன சில உதாரணங்கள்)
- ✓ கர்நாடக இசையில் பயன்படுத்தப்படும் மனோதர்ம முறைகள் பின்பற்றப் படுகின்றன. (நிரவல் பாடும் முறை)
- ✓ நுட்பமான இசை உருப்படிகளை சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு சேர்த்துக் கொள்ளல்.
- ✓ லயநுட்பம், நடைபேதம் நிறைந்த பாடல் அமைந்துள்ளன.
- ✓ திருப்புகழ் போன்ற சந்தப் பாடல்களும் கையாளப்படுகின்றன. (ஜமன் பாடல்கள்)

இவ்வாறான இசை நுட்பங்கள், அனைத்தும் இசை நாடகங்களில் கண்டிப்பாகக் கையாளப்பட வேண்டியனவாகவே காணப்படுகின்றன. இந்த இசை நுட்பங்கள் தெரியாத அல்லது விளங்காத ஒருவரால் இசை நாடக நடிகராக முடியாது.

தென்னிந்தியாவின் பிரபல இசைநாடக மேதைகள் இசை தெரிந்தவர்க -ளாக விளங்கி இசை நாடகத்தை மேடையேற்றினர். இரண்டு பிரதான பாத்திரங்களில் நடிக்கும் இருவரும் சிறந்த பாடகராயின் அந்தக் காட்சி மிகவும் சிறப்பாக அமைந்துவிடும். இராக லய நுட்பங்களை இருவரும் பகிர்ந்து கொள்வர். பார்ப்போரும் மகிழ்ந்து கொள்வர்.

இவ்வாறு தென்னிந்திய கலைஞர்களின் இசை நாடகங்கள் ஈழத்தில் மேடையேற்றப்பட்டபோது இவ்வாறான இசை நாடகங்களை மக்கள் பார்த்து இன்புற்றனர். கால ஓட்டத்தில் தென்னிந்திய கலைஞர்களுடன் ஈழத்துக் கலைஞர்களும் சேர்ந்து ஒரே மேடையில் நடிக்கும் வாய்ப்புக்களும் நிலைமைகளும் ஏற்பட்டபோது ஈழத்தின் இசைநாடக கலை வளர ஆரம்பித்தது.

ஈழத்தின் இசைநாடக கலைஞர்கள் இசை நாடக நுட்பங்களையும், இசை நுட்பங்களையும் அவர்களிடம் இருந்து அறிந்தும் சேர்ந்தும் நடித்துப்பெருமை அடைந்தனர். தொடர்ந்து இந்தியக் கலைஞர்களின் வரவானது முழுமையாக தடைப்பட்டபோது ஈழத்தின் இசைநாடக் கலைஞர்கள் ஆங்காங்கே சபாக்களையும் குழுக்களையும் அமைத்து நாடகங்களை மேடையேற்றினர். இவ்வாறு இசை நாடகங்களில் தென்னிந்திய கலைஞர்களுடனும் தாமாகவும் நடித்த எம் முன்னோர் வரலாற்றில் முக்கியமானவர்கள். ஏனெனில், ஈழத்தில் கர்நாடக இசைக்கு தொண்டாற்றிய பெருமை அவர்களைச் சாரும். இன்று ஈழத்தின் சங்கீத வித்துவான்களாக திகழும் பலரின் வாழ்க்கை வரலாறுகளை புரட்டிப் பார்த்தால் அவர்களுக்கு இசை நாடகத் தொடர்பு நிச்சயமாக இருக்கும்.

ஈழத்தின் இசை நாடக வரலாற்றிலே தென்னிந்திய கலைஞர்களின் வரவு தடைப்பட்டதன் பின்னர். இங்கே பலர் இசை நாடகங்களை மேடை ஏற்றி இருந்தாலும் முன்னர் குறிப்பிட்டது போன்று இசைநாடகக் கலைஞர்களுக்கு இருக்க வேண்டிய முழுமையான பண்புகளை உடையவராக திகழ்ந்த இசை நாடக கலைஞர்களுள் நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்கள் முதன்மையானவர். நடிகமணி அவர்கள் முறைப்படி கர்நாடக சங்கீதம் படித்த ஒருவர். இசை நுட்பங்கள் விளங்கக்கூடிய ஒருவர். கற்பித, மனோதர்ம இசையை நன்கு அறிந்த ஒருவர். அத்துடன், ஆர்மோனியம், மிருதங்கம், புல்லாங்குழல் போன்ற இசைக் கருவிகளையும் சிறப்பாக வாசிக்கக் கூடிய ஒருவர். இசை நாடகக் கலைஞர்களுக்கு இருக்க வேண்டிய அனைத்து தராதரங்களும் உடைய ஒருவராக இருந்தமையால், இவரது வசந்தகான சபாவின் நாடகங்கள் இசை நாடக வரன்முறைகளைக் காப்பாற்றத் தவறவில்லை. இவரின் சிஷ்யர்கள் இவருடன் நடிக்கும் போது பயபக்தியுடனும், நிதானத்துடனும், ஒழுக்கத்துடனும் சிறந்த இசைநாடக கலைஞர்களாக விளங்கினர். ஆனால், இவரது மறைவிற்குப் பின் ஈழத்தின் இசை நாடக கலையானது பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது. மூத்த அனுபவம்மிக்க ஒருவர் இல்லாததால் அனைவரும் தம்மைப பெரியவர்களாக எண்ணி இசை நாடகக் கலையை தவறான வழியில் இட்டுச சென்றனர்.

**இசை நாடகத்தின் இன்றைய நிலை :**

ஈழத்தின் இசை நாடகத்தின் இன்றைய நிலை என்ன என்பது பற்றி சிந்திப்பது சாலவும் பொருத்தமாகும்.

- ஈழத்தில் இசை நாடகம் தந்த கர்நாடக இசை வளர்ந்து கொண்டிருக் -கின்றது. ஆனால், இசை நாடகம் இறந்து கொண்டிருக்கின்றது.

- கேள்வி ஞானத்தில் கூட சுருதியுடனும் லயத்துடனும் பாடமுடியாதவர்கள் பிரபல இசை நாடகக் கலைஞர் ஆகும் துர்ப்பாக்கிய நிலை ஈழத்தின் இசை நாடகக் கலைக்கு ஏற்பட்டுள்ளது.
- இசை நாடகக் கலையின் செம்மையை தூய்மையை அதன் கற்பைப் பாதுகாக்க வேண்டிய சில கலைஞர்கள் பணத்திற்கும் செல்வாக்கிற்கும் அடிமையாகி விலை மாதர் போலாகிவிட்டனர்.
- காப்பாற்ற வேண்டியவர்கள் கைகழுவி விட்டார்கள்.
- சில இடங்களில் இசை நாடகம் நவீனமயம் என்ற பெயரால் சீரழிக்கப் பட்டுள்ளது. அதன் தன்மையே மாற்றப்பட்டுள்ளது.
- இசை நாடகங்கள், முறையான இசை தெரிந்தவர்களின் மேற்பார்வை இன்றி கேள்வி ஞான அண்ணாவிமாரினால் தவறுதலான முறையில் நெறியாள்கைகள் செய்யப்படுகின்றன.

இவ்வாறு அழிவின் பாதையில் சென்றுகொண்டிருக்கும் இசை நாடகக் கலையானது காப்பாற்றப்படவேண்டும். இன்றைய நவீனமயமான கால கட்டத்தில் இக்கலையானது தகமையில்லாதவர்களினால் முறைகேடாக நிகழ்த்தப்படுவதனால் இக்கலையானது வரும் சந்ததியால் வெறுத்து ஒதுக்கப்படப்போகும் நிலைமையும் ஏற்படலாம். அல்லது தரம் குறைந்த கலையாக மதிக்கப்படலாம். கர்நாடக இசையானது அதற்குரிய முறையிலே பேணப்படுவதால் இன்றும் உயர்ந்த நிலையில் உள்ளது. அதுபோல் இசை நாடகத்திற்குரிய முறையிலே இக்கலையானது முன்னெடுக்கப்பட்டால் இக் கலை நிலைபெறும்.

ஆசைப்படும் எல்லோரும் இசை நாடகம் நடிக்கும் நிலையை மாற்றி எதற்கு எவர் தகுதியோ அவரைத் தெரிந்து இக்கலைக்கு உயிர் கொடுக்க வேண்டியவர்களாக நாம் இருக்கின்றோம். ஆகவே நாம் செய்ய வேண்டியது என்ன? இசை நாடகக் கலைஞர்களையும் இசை நாடக ஆர்வலர்களையும் அழைத்து கர்நாடக இசை தெரிந்தவர்களின் உதவியுடன் தகுந்த பயிற்சி அளித்து அவர்களை புனர் நிர்மாணம் செய்ய வேண்டிய வரலாற்றுத் தேவை எமக்குள்ளது. நடிகமணி அவர்களின் வாரிசுகளாக உருவாகி இன்று இசை நாடகத்துறையில் நீண்ட அனுபவம் மிக்கவர்களாக இருக்கின்ற இசைநாடகக் கலைஞர்களான வ.செல்வரட்ணம், ம.தைரியநாதன் ஆகியோருக்கு இக் கலையின் செம்மையாகப் பேணவேண்டிய வரலாற்றுக் கடமை உள்ளது. இல்லையேல் மீண்டும் நடிகமணி அவர்கள் அவதரித்தால் அன்றி இசை நாடகக்கலையை எவராலும் காப்பாற்ற முடியாது.

சந்திரகுமார் பிரபா
4ம் வருடம் - நாடகமும் அரங்கியலும்




# சார்லிசாப்ளின்

## வாழ்க்கை வரலாறுபற்றி தெரிந்துகொள்வோம்□□□

சேர் சார்லஸ் ஸ்பென்ஸர் சாப்ளின் என்ற இயற்பெயர் கொண்ட சார்லிசாப்ளின், 1889-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16-ந் திகதி பிறந்தார். ஹாலிவுட் திரையுலகின் பெரும் புகழ்பெற்ற கலைஞராக விளங்கினார். இவருக்கு நடிகர், இயக்குநர், இசையமைப்பாளர், திரைக்கதை எழுத்தாளர், திரைப்படத் தொகுப்பாளர், திரைப்படத் தயாரிப்பாளர் என்று பலமுகங்கள் உள்ளன.

சாப்ளின், லண்டனில் உள்ள வால்வோர்த்தில் சார்லஸ்- ஹன்னா ஹாரியட் ஹில் தம்பதிக்கு மகனாகப் பிறந்தார். இவரது பெற்றோர்கள் மியூசிக்ஹல் கலைஞர்கள். சாப்ளின் பிறந்த சில நாட்கள் கழித்து இவர்களது திருமண வாழ்க்கை முறிந்தது. சாப்ளின் தனது அன்னையின் கண்காணிப்பில் வளர்ந்தார். 1896-ம் ஆண்டில் ஹாரியட்டிற்கு வேலை ஏதும் கிடைக்காதநிலையில், சார்லியும் அவரது சகோதரர் சிட்னியும் லாம்பெத் வொர்க்கவுசில் இருக்கும் நிலை ஏற்பட்டது.

பின்னர் இருவரும் Hanwell School for Orphans and Destitute Children என்னும் ஆதரவற்றோருக்கான பள்ளி ஒன்றில் வளர்ந்தனர். இதற்கிடையில், சாப்ளினின் தந்தை குடிப்பழக்கத்தால் உடல் நலம் குன்றி சாப்ளினின் பன்னிரெண்டாவது வயதில் இறந்தார். இதனால் இவர் தாயும் பெரும் மனஉளைச்சலுக்கு உள்ளாகி கிராய்டனில் இருந்தகேன் ஹில் அசைலம் என்ற மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான காப்பகம் ஒன்றில் சேர்க்கப்பட்டார். பின்பு இவரும் 1928-ம் ஆண்டில் இறந்தார். சாப்ளின் ஐந்து வயதிலேயே நடிக்கத் தொடங்கிவிட்டார். முதன் முதலில் 1894-ம் ஆண்டில் மியூசிக்ஹலில் தனது தாய்க்குப் பதிலாக ஒரு வேடத்தில் நடித்தார். சிறுவனாக பல நாட்கள் உடல் நலக்குறைவால் படுத்தபடுக்கையாக இருந்த பொழுது, இரவுகளில் அவரது தாய் யன்னல் ஓரம் அமர்ந்து, வெளியில் நடக்கும் நிகழ்வுகளை நடித்துக் காட்டுவார். சாப்ளினுக்கு பத்து வயதாக இருந்தபொழுது சிட்னி லண்டன் ஹிப்போட்ரோமில் சின்ட்ரெல்லா பாண்டோமைமில்




ஒரு பூனையாக, நகைச்சுவையான பாத்திரத்தில் நடிக்கும் வாய்ப்பை வாங்கித் தந்தார். 1903-ம் ஆண்டில் ஜிம், எ ரொமான்ஸ் ஆ.ஃப் காக்கையன் நாடகத்தில் நடித்தார். இதற்குப் பிறகு அவருக்கு நிரந்தர வேலை கிடைத்தது. செர்லாக் ஹோம்ஸ் நாடகத்தில் செய்தித் தாள் விற்கும் சிறுவன் பில்லிவேடம் இதனைத் தொடர்ந்து கேசீஸ் கோர்ட் சர்க்கஸ் நடத்திய பல்சுவை நிகழ்ச்சியிலும், Fred Karno's FunFactory Slapstick நகைச்சுவை நிறுவனத்தில் கோமாளி வேடத்திலும் நடித்தார். அமெரிக்காவின் குடிபெயர்வுப் பதிவுகளின் படிகார்னோ குழுவுடன் அக்டோபர் 2, 1912- அன்று அமெரிக்கா வந்தடைந்தார்.

கார்னோ குழுவிலே ஆர்த்தர் ஸ்டான்லே ஜெப்பர்சனும் இருந்தார். இவரே பின்னர் ஸ்டான் லாரலாக பிரபலமானார். இருவரும் சிறிது காலம் ஒரே அறையில் தங்கினர். தயாரிப்பாளர் மாக் செனட் சாப்ளினின் திறமையைக் கவனித்து அவரது நிறுவனமான கீஸ்டோன் திரைப்பட நிறுவனத்தில் சேர்த்துக் கொண்டார். முதலில் சாப்ளினுக்கு கீஸ்டோன் நடிப்புமுறைக்கு தன்னை மாற்றிக் கொள்வது சற்றுக்கடினமாக இருந்தது. ஆனால் மிகவிரைவில் தன்னைப் பழக்கிக் கொண்டு கீஸ்டோனின் சிறந்த கலைஞராக வளர்ந்தார். இவரது கிடுகிடு வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தது அவர் தனக்கென்று உருவாக்கிக் கொண்ட நாடோடி வேடமும், நிறுவனத்தில் இவருக்கு இயக்கவும் புதுப்படைப்புகள் படைக்கவும் கொடுக்கப்பட்ட உரிமையுமாகும். இவரது வளர்ச்சியையும், இவரது நிர்வாகியாக பணிபுரிந்த சிட்னியின் ஆற்றலையும் சாப்லினின் சம்பளப் பட்டியல் எடுத்துக்காட்டியது. இவர் 1919ம் ஆண்டில் மேரிபிக்போர்ட், டக்லஸ்.ஃபேர்பேங்க்ஸ், கிரிபித்துடன் இணைந்து யுனைட்டு ஆர்டிஸ் ஸ்டுடியோவைத் தொடங்கினார். 1927ம் ஆண்டில் ஓசையுடன் கூடிய திரைப்படங்கள் வெளிவரத் தொடங்கி மிகவும் பரவலானாலும் 1930ம் ஆண்டுவரை சாப்ளின் பேசும் படங்களில் இருந்து ஒதுங்கியே இருந்தார். சாப்ளின் சினிமாவின் பல துறைகளில் கைதேர்ந்தவராகத் திகழ்ந்தார். 1952ம் ஆண்டில் வெளிவந்த 'லைம்லைட்' திரைப்படத்தில் நடன அமைப்பையும் 1928ம் ஆண்டுத் திரைப்படம் "திசர்க்கஸ்" படத்தின் தலைப்பு இசை அமைப்பையும் இவரே செய்தார். இவர் இசையமைத்த பாடல்களில் பெரும் புகழ்பெற்றது ஸ்மைல்.

இவரது முதல் டாக்கீஸ் 1940ம் ஆண்டில் வெளியான "திகிரேட் டிக்டேடர்". இது அடால்.்.ப் ஹிட்லரையும் அவரது பாசிச கொள்கையையும் எதிர்த்து குரல் கொடுத்தபடம். இப்படம் அமெரிக்கா இரண்டாம் உலகப் போரில் புகுவதற்கு ஒரு வருடம் முன்பு அங்கு வெளியிடப்பட்டது.

இதில் சாப்ளின் இரு வேடங்கள் பூண்டிருந்தார். ஹிட்லர் மற்றும் நாசியர்களால் கொடுமையாக கொல்லப்படும் யூத இனத்தைச் சேர்ந்த ஒரு நாவிதன். சினிமா மீது மோகம் கொண்ட ஹிட்லர் இப்படத்தை இருமுறைப் பார்த்தார். போர் முடிந்தபிறகு, ஹோலோகாஸ்ட்டின் கொடுமை உலகிற்கு தெரியவந்த பிறகு சாப்ளின் இக்கொடுமைகள் எல்லாம் தெரிந்திருந்தால் ஹிட்லரையும், நாசியர்களையும் கிண்டல் செய்திருக்க முடியாது என்றார் இவரது கடைசி திரைப்படங்கள் "திகிங் இன் நியூயோர்க்" (1957), "திசாப்லின் ரெவ்யூ" (1959) மற்றும் சோ.்.பியாலாரென, மார்லன் ப்ராண்டோ நடித்த "அகௌண்டஸ்.்.ப்ரம் ஹாங்காங்". இவரது திரையுலக வெற்றிகள் மூலமாக இவருக்கு கிடைத்த புகழ், பலமுறை தன் தனிப்பட்ட வாழ்வினால் பெரிதும் பாதிக்கப்பட்டது.






அக்டோபர் 23, 1918 இல் இருபத்தியெட்டு வயது சாப்ளின் பதினாறு வயது மில்ட்ரெட் ஹாரிசை மணந்தார். இவர்களுக்கு பிறந்த குழந்தை சிறுவயதிலேயே இறந்தது. இவர்களது திருமண வாழ்க்கை 1920-ம் ஆண்டு விவாகரத்தில் முடிந்தது. முப்பத்தி ஐந்து வயதில் "திகோல்ட் ரஷ்யூ" திரைப்படத்திற்கு தயார் செய்து கொண்டிருந்தபொழுது, பதினாறு வயது லீடாக்ரே மீது காதல் கொண்டார். நவம்பர் 26, 1924 இல் லிடாக்ரே கர்ப்பமான நிலையில் இவர்களது திருமணம் நடைபெற்றது. இவர்களுக்கு இரு மகன்கள் பிறந்தனர். இவர்களது மண வாழ்க்கையும் $ 8,25,000 ஒப்பந்ததுடன் விவாகரத்தில் முடிந்தது. இந்த கசப்பான விவாகரத்தினாலும் வருமான வரி சிக்கல்களாலும் மன அழுத்தத்திற்கு ஆளாகி இவரது தலைமுடி நரைக்கத துவங்கியது.

மேலும் நீதிமன்றம் வெளியிட்ட அறிக்கையில் சாப்ளினைப் பற்றிய பல அந்தரங்கச் செய்திகள் இடம்பெற்றது. இதனால் இவரை எதிர்த்து பிரச்சாரங்கள் நடைபெற்றன. சாப்ளினின் நாற்பத்தி ஏழாவது வயதில் பாலட்

கொடார்டை ஜுன் 1936-ல் ரகசியமாக மணமுடித்தார். சில வருடங்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தபின் இத்திருமணமும் விவாகரத்தில் முறிந்தது.

இக்காலகட்டத்தில் நடிகை ஜோன் பேரியுடன் இவருக்கு உறவு ஏற்பட்டது. ஆனால், ஜோன்பேரி சாப்ளினை துன்புறுத்தியதால் மெதுவாக அவ்வுறவினை முறித்துக்கொண்டார். ஆனால் மே 1943-ம் ஆண்டு தனது குழந்தைக்கு சாப்ளினே தந்தை என்று வழக்குத் தொடர்ந்தார். இரத்த பரிசோதனைகள் சாப்ளினை குற்றமற்றவர் என்று காட்டினாலும், அக்காலத்தில் இரத்த பரிசோதனைகள் நீதிமன்றங்களில் சாட்சிகளாக எடுத்துக் கொள்ளப்பட -வில்லை.

குழந்தை 21 வயது வரும் வரை வாரா வாரம் $75 வழங்குமாறு உத்தரவிடப்பட்டார். சிலநாட்கள் கழித்து, ஐகன் ஓஹநீலின் மகள், ஓனாஓநீலை சந்தித்தார். இவரை ஜுன் 16, 1943 அன்று மணந்தார். சாப்ளினின் வயது அப்பொழுது 54, ஓ□நீலின் வயது 17. இத் திருமண வாழ்க்கை மகிழ்ச்சியுடன் பல வருடங்கள் நீடித்தது. இவர்களுக்கு எட்டு குழந்தைகள் பிறந்தனர்.

சாப்ளின், 1977ம் ஆண்டு கிறிஸ்மஸ் தினத்தன்று தனது எண்பத்தி எட்டாவது வயதில் வெவேவில் இறந்தார். இவரது உடலை வாட் நகரில் உள்ள கார்சியர்-சுர்-வெவே கல்லறையில் அடக்கம் செய்தார்கள்.

மார்ச் 1, 1978ம்ஆண்டு இவரது உறவினர்களிடமிருந்து பணம் பறிப்பதற்காக இவரது உடல் கல்லறையிலிருந்து திருடப்பட்டது. ஆனால் இத்திட்டம் தோல்வியுற்று, திருடர்கள் பிடிபட்டனர். பதினொரு வாரங்களுக்குப் பின் ஜெனீவா ஆற்றின் அருகில் சாப்ளினின் உடலைக் கைப்பற்றினார்கள். சாப்ளினின் நினைவாக வெவேவில் அவரது சிலை ஒன்றை அமைத்துள்ளனர்.

**கைக்கூ**

**சின்னச் சின்ன வானங்கள்**
**தெரிகிறது**
**புழுநின்ற இலையில்**

பா.தா

செல்வநாயம் மோகனா
4ம் வருடம் - இசைத்துறை.

# மீண்டும் நான் குழந்தையாக!!!





நான் அன்று போல்
இன்றும் குழந்தையாக இருக்க
விரும்புகிறேன்

மனதால் கண்களில் தான்
நான்
சிரிக்க விரும்புகிறேன்
வெறும்
பற்களால் அல்ல
நேற்று வரையில்
நான்
குழந்தை தான்
ஆனால்
இன்று இந்தப்
பாழ்பட்ட சமூகம்
என்னை
மாற்றிவிட்டது
என் வலக்கையைப் பற்றிக்
குறுக்கிக் கொண்டு
என் இடக்கையாலே
எனக்கு குழிதோண்டும்
சமூகத்திற்காக நான்
என்னையே
மாற்றிவிட்டேன்
பல முகங்களை
அணிய கற்றுக்கொண்டேன்
அடிக்கடி மாற்றும்
உடையைப்போல
கண்ணாடி முன்நின்று
பார்க்கும் போது
என்முகம் எனக்கே
அகோரமாய்தான் தெரிகிறது
நான் போடும்
வேசங்களால்
இவற்றை எல்லாம்
விட்டுவிட்டு
இந்த சமூகத்திற்கு அப்பால்
நான் மனிதப்பிறவியாக
வாழ விரும்புகிறேன்
தெய்வத்தன்மை
சிந்தனையற்ற வாழ்வு
வஞ்சனை அற்ற மனம்
கொண்டு
மீண்டும் நான் குழந்தையாக!!!



சதாசிவம் மதன்
புதுக்குடியிருப்பு.

# தமிழர்களின் பழமையான பொருட்கள் ஒரு பார்வை...

### திருநீற்றுக்குடுவை :



இது தமிழர்களின் மிகவும் பழமைவாய்ந்த ஒரு பாத்திரமாகும். பொதுவாக இந்துக்கள் திருநீறு அணிவதை தமது வாழ்வியல் கோலத்தில் மிக உன்னிப்பாகக் கடைப்பிடித்தனர். "நீறில்லா நெற்றி பாழ்" எனும் பழமொழியிலிருந்து இதனை நன்குணரலாம். அதற்குப் பயன்படுத்தப்படும் திருநீற்றை சேமித்து வைப்பதற்காக தென்னஞ்சிரட்டையில் தயாரிக்கப்படும் ஓர் எளிய முறையிலான ஓர் கொள்கலனே திருநீற்றுக் குடுவை என அழைக்கப்படுகின்றது.

தேங்காயினை உரித்து அதன் மேற்பகுதியில் கால்வாசியை நீக்கி அதன் உள்ளடைகளை நீக்கிவிட்டு, தேங்காயின் கண்ணை துளைத்து அதன் ஊடாக சிறு கயிறு ஒன்றினை இட்டு கட்டி விடுதல். அதனுள்ளே திருநீற்றினை இட்டு வைப்பர். பார்ப்பதற்கு மிகவும் எளிமையாகவும், செலவற்றதாகவும், இலகுவானதாகவும் காணப்படும்.


### திருகல் :



எமது முன்னோர்கள் தமது வேலைகளை இலகுவாக்கிக் கொள்வதற்காக கையாண்ட முறைகளில் ஒன்றே "திருகல்" ஆகும். குரக்கன், உழுந்து, பயறு, அரிசி, சோளம் போன்ற இன்னோரன்ன தானியங்களை அரைப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றது. கருங்கல்லினால் நன்கு பொழிந்து, தானியங்களை அரைக்கத்தக்க வகையிலும், பிடித்து சுற்றும் வகையில் கைபிடி வைத்து வடிவமைக்கப்பட்டிருக்கும். இருந்த இடத்திலிருந்து இலகுவாக அரைக்கத்தக்க வகையில் தொழிநுட்ப உத்திகளை கையாண்டிருப்பது வியப்பினை ஏற்படுத்துகின்றது. இன்று இவற்றிற்கு பதிலாக இலத்திரனியல் இயந்திரங்களின் வருகையினால் இவற்றின் தேவை குறைவடைந்து செல்கின்றன.

இதனால் எமது முன்னோர்களின் பொறிமுறை உத்திகள் கேட்பாரற்று நூதனசாலைகளிலும், வீட்டு மூலைகளிலும் அநாதரவாகக் கிடக்கின்றன.


**ஏத்து :**



'ஏத்து என்பது விவசாய செய்கையின் போது நீர் இறைக்க பயன்படுத்தப்படும் ஒரு கருவியாகும். தற்போது இதற்கு மாற்றீடாக நீர்ப்பம்பிகள் பயன்படுத்தப்படுவதனால் இதன் பாவனை மிக மிக அரிதாக உள்ளது. எனினும் இது அக்காலத்தில் காணப்பட்ட வியக்கத்தக்க தொழில்நுட்ப செயற்பாடாகும்.

**உடுக்கு :**

உடுக்கு அல்லது உடுக்கை என்பது தமிழர் பாரம்பரிய இசைக் கருவிகளில் ஒன்றாகும். கிராமப்புற கோயில்களிலும் சமயச் சடங்குகளிலும்



இது ஒலிக்கப்பெறும். தோல் இசைக்கருவியான இதை கைகளைக் கொண்டு இசைக்கலாம். இசைத்துக் கொண்டிருக்கும் போதே இதன் சுருதியை மாற்றி அமைக்கக்கூடியதாக இருப்பது இதன் சிறப்பியல்பு ஆகும். உலோகத்தால் அல்லது மரத்தாற் செய்யப்பட்ட இரு பக்கங்களும் விரிந்து இடை சிறுத்துப் பருத்திருப்பதால் இதை "இடை சுருங்கு பறை" என்றும், 'துடி' என்றும் அழைப்பர். பொதுவாக இதிலிருந்து ஒலியெழுப்புதலை 'உடுக்குத்தெறித்தல்' என்றே அழைக்கப்படுகின்றது. சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளான சிவன் கையிலும் இந்த உடுக்கு காணப்பெறுகிறது. இதிலிருந்து இது ஒரு பழமைவாய்ந்த இசைக்கருவியென்பது புலனாகிறது.


**பறை :**



பறை ஒரு தமிழிசைக் கருவியாகும். இது தோலால் ஆன மேளமாகும். 'பறை' என்ற சொல் பேச்சைக் குறிப்பதாகும். 'பேச்சு' எனப் பொருள்படும். 'அறை' என்ற சொல்லினின்று 'பறை' தோன்றியது. (நன்னூல் : 458). பேசுவதை இசைக்கவல்ல தாளக்கருவி 'பறை' எனப்பட்டது. பன்னெடுங்கால வரலாற்றைத் தன்னகத்தே கொண்டுள்ள பறை, ஓர் இசைக் கருவி மட்டுமல்ல தொல்குடித் தமிழ்ச் சமூகத்தின் சொத்து. தோலிசைக் கருவிகளின் தாய். தமிழினத்தின் தொன்மையான அடையாளம்.

உழைக்கும் மக்களின் இசைக் களஞ்சியம். தமிழர் வாழ்வியலின் முகம் என வருணிக்கப்படுகிறது.

**சிலம்பு :**



சிலம்பு என்பது சங்ககால தமிழ் மக்களால் கைகளிலும் (கைச்சிலம்பு) கால்களிலும் (காற் சிலம்பு) அணியப்பட்ட அணிகலனாகும். கண்ணகியின் கால்களில் அணிந்திருந்த சிலம்பைக் கொண்டே, இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் என்ற பெருங் காப்பியத்தை இயற்றினார். இதன் உட்புறம் விலையுயர்ந்த மணிகளால் நிரப்பப்பட்டிருக்கும். இதன் பொருட்டு இவ்வணிகலன், நடக்கும் பொழுது ஒருவித இனிய ஒலியை எழுப்பும். நாட்டியப் பெண்களால் அணியப்படும் சிலம்பானது ஆடும்பொழுது தாளத்திற்கேற்ப ஒலியெழுப்பவல்லது. இதுவும் தற்போது ஒரு புனிதத் தன்மைகொண்ட சடங்குப் பொருளாக மட்டுமே பாவனையில் உள்ளது.

**கரப்பு :**



தமிழர்கள் தமது தொழில் முறையில் பல்வேறு வகையான நுட்பங்களைப் பயன்படுததினர். அந்தவகையில் மீனவர்கள் மீன்களைப் பிடிப்பதற்கு 'கரப்பு' எனும் ஒருவகை கருவியை அல்லது நுட்பத்தைப் பயன்படுத்தினர். இச் செய்முறையினை 'கரப்புக் குத்துதல்' என அழைத்தனர். இதிலுள்ள சிறப்பியல்பு என்னவெனில் மீன்களை உயிருடன் பிடிப்பதற்கான ஒரு யுக்தி இதன்மூலம் நிறைவேற்றப்படும். சிறிய குளங்கள் மற்றும் ஆழம் குறைந்த நீர் நிலைகளில் மீன் பிடிக்க இது பயன்படும். மீன்கள் செறிவாக உள்ள பகுதிகளில் இதனைக் குத்தி இக்கரப்பின் மேற்பகுதியில் காணப்படும் வாய் போன்ற துவாரத்தினூடாக தமது கையை உட்செலுத்தி உள்ளே இருக்கும் மீன்களை உயிருடன் பிடித்தெடுப்பர்.

**அம்மானைக்காய் :**



அம்மானைக்காய் என்பது பழந்தமிழ் மகளிர் விளையாடும் ஒரு விளையாட்டுப் பொருள் ஆகும். ஆண்கள் விளையாடுவதற்குப் பந்து பயன்படுவதைப்போல் பெண்கள்

விளையாட இவ் அம்மானைக்காயைப் பயன்படுத்தினர். சிலப்பதிகாரத்தில் கண்ணகி இவ் அம்மானைக்காயால் விளையாடுவது பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இதன்காரணமாக இன்றும் அனேக கண்ணகி அம்மன் ஆலயங்களில் இவ் அம்மானைக்காயைக் காணலாம். அங்கு இது ஒரு புனிதத் தன்மைகொண்ட சடங்குப் பொருளாகக் காணப்படுகின்றது. இதனுள் மணிகள் காணப்படும் அதிலிருந்து ஒருவித ஒலியும் உண்டாக்கப்படுகின்றது. மேலும், இவ் அம்மானைக்காய் விளையாட்டுப் பற்றி திருவாசகத்தில் திருவம்மானை எனும் பகுதியில்,

**"..... அம்கணன் அந்தணன் ஆய் அறைகூவி வீடு அருளும்**
**அம்கருணை வார்கழலே பாடுதும்காண் அம்மானாய்"**

பொருள் :..... ஞானக் கண்ணுடைய அந்தணன் அவன். அறிய கருணையுடைய அவன் என்னை வழியக் கூவியழைத்து வீடு பேறு அளித்தருளினன். அவனைக் குறித்து நாம் பாடி அம்மானை விளையாடுவோமாக.....என சிறப்பாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**வட்டா :**

"வட்டா" என்பதற்கு வாயகன்ற கலம் (பாத்திரம்) என தமிழ் அகராதிகள் பொருள் தந்தாலும் தமிழர் பண்பாட்டில் தாம்பூலம் பரிமாற



அல்லது வைத்திருக்க பயன்படுத்தப்பட்டுவரும் ஒரு கலைவனப்பு மிக்க பாத்திரமே வட்டா எனப் பெயர் பெறுகின்றது. இது முன்னைய நாட்களில் பித்தளை எனும் கலப்புலோகத்தினால் செய்யப்பட்டாலும் தற்போதைய காலங்களில் இதனை மலிவாகக் கிடைக்கக்கூடிய "எவர்சில்வர்" போன்ற கலப்புலோகத்திலும் காணக் கிடைக்கின்றது.

**கைக்கூ**

தடவித் தடவிக் குழந்தையை
உச்சிமுகர்ந்தாள்
விழியற்ற தாய். —பா.தா

செல்வி.அமலினி கணேசலிங்கம்
4ம் வருடம் - நடனத்துறை.

# சிவபெருமான் ஆடிய சிவ தாண்டவங்களுள்

# சப்த தாண்டவங்களின் விளக்கம்




**சை**வர்களின் முழுமுதற் கடவுளான சிவபெருமானால் ஆடப்பட்ட தாண்டவங்கள் சிவதாண்டவங்கள் என்று அழைக்கப் படுகின்றன. சிவபெருமான் தண்டு முனிவருக்கும் பரத முனிவருக்கும் தாண்டவங்களை கற்பித்தார் என்று நாட்டிய சாஸ்திரத்தின் நான்காவது அத்தியாயமான தாண்டவ லட்சணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சிவபெரு - மானின் தாண்டவம் உலக நலனை நோக்கியே நிகழ்த்தப்படுவதாகவும் அதனுடைய நோக்கமானது உயிர்களை மலங்கள் (குற்றங்கள்) பிடியிலிருந்து விடுவிப்பதாகும். சிவனின் உடலமைப்பு அணிகலன்கள் கைகளில் உள்ள படைக்கலன்கள் தலைமுடி மற்றும் பாதங்களின் அமைப்பு ஆகிய அனைத்திற்கும் எடுத்துரைக்கப்படுகின்றன. ஒவ்வொரு தாண்டவங்களும் வெவ்வேறு மெய்பொருளியல் கோட்பாடுகளை விளக்குகின்றன.

சிவ தாண்டவ வகைகள் என்று நோக்கும் போது

1. ஐம் பெரும் தாண்டவங்கள்
2. சப்த சிவ தாண்டவங்கள்
3. சப்த விடங்க தாண்டவங்கள்
4. நவ தாண்டவங்கள்
5. பன்னிரு தாண்டவங்கள்
6. நூற்றிஎட்டு கரணங்கள்

என்று வகைப்படுத்தலாம்.

சிவபெருமான் ஆடிய சிவ தாண்டவங்களுள் சப்த தாண்டவங்கள் அதாவது ஏழு வகை தாண்டவங்களை சிறப்பாக நோக்குவோம். சிவபெருமான் ஆடிய தாண்டவங்களில் ஏழு வகை தாண்டவங்கள் சப்த ஸ்வரங்களை குறிப்பதாக அமைகின்றது. கௌரியம்மையார் சிவபெருமானை நோக்கி 'தாண்டவ வகை எத்தனை? அவை யாவை? அவற்றின் வரலாறு என்ன?



என்று விளக்கம் கூற வேண்டும்' என வினவினார். உடனே சிவபெரு -மான் அம்மையாருக்கு விளக்கமாக கூறுகிறார். ஏழுவகைத் தாண்டவத் தையும் ஏழு இசையுடன் பொருத்திச ஸ, ரி, க, ம, ப, த, நி என்னும் ஏழு வகையான தாண்டவங்கள் தோன்றின என கூறினார்.

ஒன்றன் பின் ஒன்றாய் ஒலித்தெழுந்தனவால்
ஓதும் அவ்வேழ் சுரங்களினால்
நன்று நம்மிடையே எழுவித நடனம்
நலம் பெறத் தோன்றின..........

அடுத்து ஒவ்வொரு தாண்டவங்களின் பெயர்களை கூறுகின்றார்.

மாதவர் பரவும் ஆனந்த நடனம்
வயங்குறு சந்நியா நடனம்
காதலி! நின்போர்க் கௌரி தாண்டவமே
கவின்பெறு திரிபுர நடனம்
ஓதுமா காளி தாண்டவம் முனி தாண்டவ
அமாடும் உலக சஸ்கார மேதகு நடனம்
இவை சிவை! நாம்
விதந்த நன்னாமம் என்றுணர்த்தி

(திருப்புத்தூர் புராணம் கௌரி தாண்டவச் சுருக்கம் 10)

மேலும் இந்த தாண்டவங்கள் எந்தெந்த இடங்களில் செய்தருளினார் என்பதையும் கூறுகிறது.

பிரம கற்பகங்கள் தோறும்
பேணுநர் பொருட்டால் இந்தத்
திருநடனம் எழும் செய்தும்
செம்புப் அத்தானம் கேண்மோ
அரவும் அம்புலியும் போற்றும்
அருள் தில்லையம்பலத்தில்
பரவும் ஆனந்த தாண்டவம்
செய்வோம் பைம்பொற் பாவாய்!
இவர்மணி மாடக் கூடல்
இரசித சபையில் நின்று

தவரடி பரவச் செய்தும்
சந்தியா தாண்டவம், செம்
பவளமெல் இதழி! நின்பேர்ப்
பரவு தாண்டவத்தை என்றும்
சிவமிகு திருத்தலத்தில்
சிற்சபைதனில் செய்வோம்

அத்திரி கூட வெற்பென்
நறைதிருக் குற்றாலத்தில்
சித்திர சபையில் செய்வோம்
திரபுர தாண்டவம் பூங்
கத்திகைக் குழலி! ஆலங்
காட்டினிற் காளி தாண்ட
வத்தை நன்கியற்று கிற்டிபாம்
இரத்தின சபையில் மாதொ

(திருப்புத்தூர்ப் புராணம், கௌரி தாண்டவச் சுருக்கம் - 11, 12, 13, 14)

தாம்பிர சபையில் தேவதாருவன
நெல்வேலி
ஆரம்பிர பலதரத்தில் ஆற்றதும்
முனிநிருத்தம்
காம்பிரங் குறுதோளீ! சங்கார
தாண்டவத்தை யாவும்
கூம்பிரவதனில் நின்று குலவுறு
இயற்ருகிற்போம்

தில்லைப் பொன்னம்பலத்தில் ஆனந்த தண்டவத்தையும், மதுரை வெள்ளியம்பலத்தில் சந்தியா தாண்டவத்தையும், பாண்டி நாட்டுத் திருப்புத்தூர்ச் சிற்சபையிலே கௌரி தாண்டவத்தையும், திருக்குற்றாலத்துச் சித்திரச் சபையிலே திரிபுல தாண்டவத்தையும், திருவாலங்காட்டு இரத்தின சயையிலே காளி தண்டவத்தையும், திருநெல்வேலி தாம்பிர சபையிலே முனி தாண்டவத்தையும், இருண்ட நள்ளிரவில் சங்கார தாண்டவத்தையும் இறைவன் செய்தருளுகிறார் என்று புராணம் கூறுகிறது. இதனால் ஐஞ்செயல்களில் பொருட்டுச் செய்யப்படும் தாண்டவங்கள் ஏழு என்பதை அறிகின்றோம்.

"வேங்கை" சுலைவ் (Yogo Sulux)
மட்டக்களப்பு.


# காலத்தின் போக்கில் நான் பார்த்தது, எனது பார்வையில்...

அண்மைக் காலங்களில் தொலைக்காட்சிகளிலும் சரி வானொலி -களிலும் சரி பத்திரிகைகளிலும் சரி மேடைகளிலும் சரி பட்டிமன்றங்களிலும் சரி பரவலாகப் பேசப்படும் ஒரு விடயம் ஆணும் பெண்ணும் சமன் அதாவது ஆணுக்கு காணப்படும் அதே உரிமை பெண்ணுக்கும் உண்டு என்பது.

கண்டிப்பாக இது தொடர்பாக விவாதிப்பதற்கு ஒன்றும் இல்லை. ஏனெனில் ஆணும் பெண்ணும் சமன் உரிமைகள் சமன் ஆணால் பெண்ணாக முடியுமா? என்பது தான் இப்பொழுது கேள்வி.

அது தொடர்பாக பல விவாதங்கள் மேடைகளிலும் ஊடகங்களிலும் இடம் பெற்றாலும் இது தொடர்பாக எவ்வித முடிவுகளை எடுக்க முடியாதுள்ளது. எனினும் எனது தனிப்பட்ட கருத்தினை இக் கட்டுரையின் மூலமாக முன்வைப்பதற்கு ஆவலாக உள்ளேன் இவ்வரங்கின் முன்னால்.

அண்மையில் ஒரு தொலைக்காட்சி அலைவரிசையில் ஒரு விவாதம் அதில் தொகுப்பாளர் கேட்கிறார் ஆண்களிடம் பெண் என்றால் எப்படி இருக்க வேண்டும் என்று? அதற்கு ஆண்கள் பெண்ணுக்கு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பன இருக்க வேண்டும். குடும்ப குத்துவிளக்குப் போல இருத்தல் வேண்டும் என ஏதேதோ சொன்னார்கள்.



**பெண் எனப்படுவர் யார்?**

பெண் எனப்படுபவர் ஒரு ஆணைவிட பொறுப்புவாய்ந்தவள் என்பது தான் எனது கருத்து. பெண் என்பவர் பெண்மையுடன் ஒரு வாழ்கையில் இன்றியமையாத ஒரு பொக்கிஷம். ஆம் கண்டிப்பாக அவள் ஒரு பொக்கிஷம் ஏனெனில் எமது தமிழ் சமுதாயத்தில் பெண்ணை வைத்தே அனைத்து தீர்மானங்களையும் மேற்கொள்வார்.

**இதனை நீங்கள் ஆமோதிக்கிறீர்களா இல்லையா?**

கண்டிப்பாக இதற்கு விடை ஆம். எவ்வாறு ஒரு குடும்பத்திலோ, ஒரு சமூகத்திலோ, ஒரு நாட்டிலோ பெண் என்னும் பதம் அல்லது ஒரு சொல் முக்கியம் பெறுகின்றது. எம்மைச் சுமந்து நிற்கும் தாய் பூமாதேவி ஒரு பெண். எமது அண்டைய நாட்டில் சில நீர்நிலைகளிலும் பெயர்கள் பெண்ணைச் சார்ந்திருக்கும் ஏனெனில் எம்மை காப்பவள் பெண்.

அந்தளவு ஒரு பெண்ணை நாம் உச்சத்தில் வைத்திருக்கும் பொழுது பெண்ணும் அது தொடர்பாக தனது மரியாதையினை காப்பாற்ற வேண்டும் அல்லவா? அண்மைக் காலப் பெண்கள் நவீன மேலைத்தேய ஆடைகளை அணிகின்றார்கள். கேட்டால் Style, Fashion என்கிறார்கள்.

ஒரு உரிமையான ஆடவன் பார்க்க வேண்டிய பெண்ணுக்கே உரித்தான உறுப்புக்ளை அனைவருக்கும் பார்க்கும்படி உடை அணிகிறீர்கள். யாரும் கேள்வி கேட்டால் எனது காசு, நான் என்னவேண்டும் என்றாலும் செய்யலாம். அதைக் கேட்க நீயார்? என்கிறீர்கள்.

ஆம், நான் சொல்கிறேன் நீங்கள் கேட்பதுசரிதான். நாங்கள் யார் இதைக் கேட்பதற்கு. ஏதாவது யாரேனும் எதுவும் சொல்லிவிட்டால் உடனே மேலைத்தேய நாட்டை உதாரணம் எடுக்கின்றீர்கள். அப்போ ஏன் தமிழர்களாக வாழவேண்டும்.

எமது மொழி, எமது கலாசாரத்தை மேலைத்தேய நாட்டு மகள் அல்லது மகன் காப்பாற்றப்போவது இல்லை. நான் ஏற்கனவே சொன்னது போல் எமது நாடு, சமூகம், வீடு அனைத்திலும் பெருமை சேர்ப்பதும் பெண்கள் தான் கேவலப்படுத்துவதும் பெண்தான்.

இப்படி ஒரு பெரிய பொறுப்பில் இருக்கும் நீங்கள் ஏன் அயலவர்களைப் பார்க்கின்றீர்கள். ஒரு உதாரணம் சொல்கின்றேன். எமது வீட்டில் ஒரு

தொலைக்காட்சி வாங்குவதென்றால் அயலவர்களைப் பார்த்து வாங்கலாம். அதேபோல சில ஆடம்பரப் பொருட்களை வாங்கலாம். ஆனால் ஒரு தாய்க்கும் எமக்கும் உள்ள பாசத்தினை நீங்கள் அயலவர்களைப் பார்த்து, கேட்டோ உணரமுடியுமா?

அதுவாக வந்தால் மட்டுமே அது தெரியும். அதேபோல் தான் எமது கலாசாரமும். அதற்காக நான் சொல்லவில்லை நமது மூதாதையரைப் போல உடை அணியுங்கள் என்று. உடை அணியப் பழகுங்கள், எல்லாம் செய்யுங்கள. ஆனால் எமது கலாசாரத்தினை மனதில் கொண்டு செய்யுங்கள். ஏனெனில் எமது கலாசாரத்தின் முத்துக்கள் ஆண்கள் அல்ல. பெண்கள் மட்டுமே.

எமது சமயத்தில் அர்த்தநாதீஸ்வரர் எனும் வடிவம் உண்டு. அதில் 50% ஆணாகவும் 50% பெண்ணாகவும் அவ்வடிவம் தோற்றமளிக்கின்றது. இதற்கான விளக்கம் என்னவென்றால் ஆணும் பெண்ணும் சமன் என்பது பொருள் அல்ல. ஒரு இல்லற வாழ்கையில் ஆண் பெண்ணை மனதில் கொண்டு அவர்களை உடல் மாற்றங்களில் பெண்ணாகவும் ஒருசில முடிவுகளையும் யதார்த்தத்தை பெண் ஆணாக மாறி வாழ்கையினை விட்டுக் கொடுத்து செல்வதே பொருள்.


நாங்கள் விலங்குகளைப் போல் ஒரு நோக்கத்திற்காக மட்டும் உங்களோடு பழகவில்லை பெண்களே!! ஒவ்வொரு தமிழ் ஆணும் ஒரு தமிழ் பெண்ணை மிகமிக உயர்ந்த இடத்தில் வைத்திருப்பதனாலே நீங்கள் சற்று அவ்விடத்திலிருந்து இறங்கினால் எமக்கு தாங்க முடியாத அளவு கவலையும் வேதனையும் வருகின்றது.

ஆணில் கேவலமானவர்கள் உள்ளனர் இல்லை என விவாதிக்க இடமே இல்லை. ஏனெனில் ஒவ்வொரு பெண்ணும் எமது தமிழ் கலாசாரத்தின் முத்துக்கள். எனவே ஒவ்வொரு செயலும் செய்யமுன் யோசியுங்கள். அது பாதிக்கப்போவது உங்களை மட்டும் அல்ல. ஒரு கலாசாரத்தையே என்பது பற்றி.

இத்தலைப்புப்பற்றி பேசுவது என்றால் பேசிக்கொண்டே போகலாம். எனவே நான் இத்தோடு முடிக்கின்றேன். பெண்களே எமது கலாசாரத்தின் பொக்கிஷம். அதைப் பாதுகாப்பதே ஆண்களின் வாழ்வின் தெய்வீக இலட்சணம்.

சதீஸ்
4ம் வருடம் – இசைத்துறை.

# தியானம்



தியானம் என்பது எங்களுடைய மனத்தினைத் தூய்மைப்படுத்தலும் உடலுக்கான ஓய்வினை வழங்கலுமான ஓர் செயற்பாடு இத் தியானத்தினை செய்கின்ற போது மூன்று விடயங்கள் செல்வாக்கு செலுத்துகின்றன.



- தியானம் செய்யும் சூழல்
- எங்களுடைய உடல்
- எங்களுடைய மனம்

இம் மூன்றிலும் ஏதாவது ஒன்று இடையூறு விளைவிக்குமாக இருந்தால் நாம் முழுமையான தியானத்தினை மேற்கொள்ள முடியாது. இத் தியானத்தின் மூலம் எங்கள் உடம்பில் உள்ள அனைத்து பாகங்களும் வெளியுறுப்புக்கள், உள் உறுப்புக்கள் சிறுசிறு அணுக்கள் கூட சுத்திகரிக்கப்படுகின்றது. நாம் தினமும் காலையில் நீராடுகின்றோம். புறத்தூய்மைக்காக மனத்தூய்மைக்காக நீராட இணைக்கின்றோமா? நீராடலின் மூலம் மனதினை தூய்மைப்படுத்த முடியாது. மனத்தூய்மைக்கான ஒரேவழி தியானத்தில் மூழ்குதலே ஆகும். இத்தியானமானது எவருடைய கட்டாயத்துக்காகவோ அல்லது பணத்தின் நிமித்தமோ, விருப்பமின்றியோ செய்ய இயலாது. செய்யவும் கூடாது. இது மனம் சம்பந்தப்பட்ட இறை நம்பிக்கை சம்பந்தப்பட்ட ஒரு மன அடக்க கலையாகவே காணப்படுகின்றது. "நாம் உண்பது எமது பசிக்காக", இதே போல் நாம் தியானிப்பது எமது நன்மைக்காகவே. பழகும் போது ஆரம்பத்தில் இஸ்டப்பட்டு கஸ்டப்பட்டு செய்வீர்களாக இருந்தால் பின்னர் நீங்களாக தியானத்திலிருந்து விலக நினைத்தாலும் முடியாத ஓர் இன்ப ரசமாக காணப்படும்.

எல்லோரும் குடும்பத்தோடு சேர்ந்து சுற்றுலா செல்கிறீர்கள், பூங்காக்களுக்கு செல்கிறீர்கள், படம் பார்க்க செல்கிறீர்கள், உணவு உண்ண செல்கிறீர்கள் உங்கள் நன்மைக்காக உங்கள் பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்த உற்சாகமாக இருப்பதற்காக, சந்தோசமாக இருப்பதற்காக உங்கள் குடும்ப

அங்கத்தவர்கள் எல்லோரும் சேர்ந்து காலையிலோ அல்லது மாலையிலோ அல்லது இரு வேளையுமோ ஒரு 30 நிமிடம் ஏன் உங்களால் தியானத்தினுள் செல்ல முடியாது? 'முடியாது என நினைப்பவனுக்கு முன்னேற்றம் இல்லை', 'முடியும் என நினைப்பவனுக்கு முடக்கமில்லை'. உங்களால் முடியும். எங்களால் முடியும். இப்படி உங்கள் மனம் கூற வேண்டும். இதற்கு தியான பயிற்சி இருந்தால் மனம் எதையுமே சாதிக்க முடியும் என்றே சாதித்துக் கொள்ளளாம். மனம் கூறுமிடத்து உடல் நிச்சயம் செயற்படும் வெற்றி கைகூடும்.

உடலில் ஏதாவது காயம் ஏற்படின் மாத்திரை எடுக்கின்றோம். உடல் சுத்தத்திற்காக நீராடுகின்றோம். மனதில் ஏதாவது வலி அல்லது கவலை ஏற்படுமிடத்து மாத்திரை இல்லையே என நினைத்து தற்கொலை முடிவுக்கு செல்கின்றோம். ஏன் மனதினை தூய்மைப்படுத்த மாத்திரையை காலையும், மாலையும் ½ மணி நேரம் அருந்துங்கள். உடல் சுத்திகரிப்பதனைப் போல, மனமும் தினம் தினம் சுத்திகரிக்கப்பட்டு தினம் புது மனிதர்களாக உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். எங்கள் மனமானது ஒரு கண்ணாடி மேசையினைப் போன்றது. மிகவும் அழகானது, அற்புதமானது அதனை நாம் ஒவ்வொருவரும் மிகவும் அக்கறையுடனும், அன்பாகவும் கையாளுதல் வேண்டும். பாதுகாத்து வந்தால் அழகாகவும் உறுதியாகவும் காணப்படும். பாதுகாக்காவிடின் அழுக்காகவும் சுக்குநூறாகவும் உடைந்துவிடக்கூடியது. நாம் காலையில் எழுந்து எங்களுடைய மனமாகிய கண்ணாடி மேசையினை தூய்மைப்படுத்தல் வேண்டும். மிகவும் நிதானமாகவும் கவனமாகவும் இவ் வேலையினைச் செய்தல் வேண்டும். தூய்மையாக்கும் போது கண்ணாடி மேசையில் கீறுதல் விழாதபடி அதிலுள்ள தூசி துணிக்கைகளை அகற்றி சுத்தம் செய்தோமானால் அந்த மேசையானது பளீச்சென புதுப்பொலிவுடன் அழகாக காட்சியளிக்கும். இதேபோலவே எங்களுடைய மனதையும் காலையில் எழுந்தவுடன் தியானத்தின் மூலம் தூய்மைப்படுத்துவோமாக இருந்தால் புதுப்பொலிவுடன், பார்ப்பவர்கள் கவரக்கூடிய வகையில் சிரித்த முகத்துடன் எந்நேரமும் காட்சியளிப்போம்.

இவ்வாறு சில நாட்கள் சிரமப்பட்டு அந்த கண்ணாடி மேசையினை சுத்தம் செய்து வருகின்றபொழுது அடுத்தபடியாக அந்த மேசையின் மேல் எங்கிருந்து அழுக்குகள் கொட்டப்படுகின்றன என்பதை ஆராய்ந்து அதனையும் தடுக்கும் தன்மையினை நாம் கண்டுகொள்வோம். இந்த வகையில் தியானம் எவ்வாறான செயற்பாடுகளை செய்ய துணை நிற்கின்றது. அதன் மூலம் எம்மையும் தூய்மையாக்கிக் கொள்ளளாம் என்றால் மிகையாகாது.

இ.சஜீத்
4ம் வருடம் - நடனத்துறை

# பரதக்கலை பரிணாமத்தில் ஆண்கள்



ஆய கலைகள் 64 இலும் மேலானதும் வீடு பேற்றை அடைவதற்கு வழிவகுப்பதும், முத்தி இன்பநிலையை அளிக்கவல்லதும், உயர்நிலை ஆனந்தத்தையும், மனம்நிறை மகிழ்ச்சியையும் அளிக்கவல்ல பரதக் கலையானது, கல்தோன்றி மண்தோன்றாக் கற்காலத்திலேயே முன்தோன்றி வளர்ச்சியடைந்து செல்வதனைக் காணலாம். புராண இதிகாச ஐதீகக் காலங்கள் தொடக்கம் பின்னரான சான்றாதாரங்களின் அடிப்படையான சிந்துவெளி நாகரிக காலம், வேத, உபநிடத காலம், தற்காலம் என இக்கலை வளர்ச்சி அடைந்து செல்வதனை காணலாம்.

அத்தோடு இக்கலையானது பிரபஞ்ச அசைவுகளுடனும், இயற்கை உடனும், மனித வாழ்நிலைகளுடனும் தொடர்புடையதாக காணப்படுகின்றது. மனிதன் கருவில் அசைதலுடன் அவன் இறப்புவரையான அன்றாட வாழ்வியலில் பரதக்கலை பயன்படுவதனை காணலாம்.

'ஆடவல்லான்', 'ஆடல்நாயகன்', 'ஆனந்தகூத்தன்' என பல்வேறு பெயர்கள் கொண்டு அழைக்கப்படும். சிவபெருமான் வழியாகவும், பின்னர் பரதர் தம் மகன்கள் ஊடாகவும் இக்கலை பூமிக்கு பரப்பட்டது என்று புராண வரலாறும் ஆதிமனிதன் தோன்றிய மொழி விருத்தி இல்லாத காலத்தே தன் உணர்வுகளை சகலர்களோடு பகிர்ந்து கொள்வதற்கு கையசைவுகள், கண் அசைவுகள் முதலான அங்க அசைவுகளிடத்து இருந்தே பரதம் தோற்றம் பெற்றது என லௌகிக வரலாறு கூறுகின்றது. எது எவ்வாறாயினும் இங்கு ஆண்களே கலையின் ஆரம்ப புருஷர்களாக அறிமுகப்படுத்தப்படுவதனைக் காணலாம்.

பரதக் கலையானது சிவபெருமான் ஊடாகவே தோற்றம் பெறுகிறது. இவர் ஆடியதாக 12 வகையான தாண்டவங்கள் கூறப்படுகின்றது. தேவர்கள் நாட்டியம் ஆடும் போது கால்களில் மிதிபட்டு சிதறும் தூசுகளின் அணுக்களில்

இருந்து இப்பூமி உருவாகியதாகவும் இந்திரன் அனைத்து கலைகளின் மூல புருஷனாகவும் அவன் ஒரு நடனக் கலைஞனாகவும் உடன் இருந்த 'மரூட்ஸ்' என்பவர்கள் நடனக்கலை விற்பனர்களாகவும் 'அஸ்வின்' எனப்படும் நடனத்திலும் இசையிலும் சிறந்த இரட்டை கலைஞர்களும் 'த்ருதூ' எனப்படும் சூரியனின் மகளுடன் நடனம் புரிவபர்களும் ஆண்களாகவே' ரிக்' வேதத்தில் காணப்படுகிறனர். இவ்வாறான சில செய்திகள் மற்றைய வேதங்களிலும் விரிவடைந்து செல்வதனை காணலாம்.

இதிகாசங்களிலே இராமன், ராவணன், அர்ஜுனன், கண்ணன், அரச குலத்தவர்களாக வருணிக்கப்படுகின்றனர். இராமபிரான் கந்தர்வ சாஸ்திரத்தில் (இசை, நடனம்) நன்கு தேர்ந்தவனாகவும் இராவணன் சிறந்த நாட்டிய மேதையாகவும் அவன் சிவபெருமான ஆடிய தாண்டவங்கள் மற்றும் நாட்டிய கலையில் காணப்படும் நெளிவு சுழிவுடைய முத்திரைகள் போன்ற அனைத்தையும் தாமே திறம்பட நாட்டியமாடி சிவனிடம் 'நிலாவின் சிரிப்பு' என பொருள்படும் 'சுநதிரஹாஸம்' எனும் வாளை பரிசாக பெற்றதாகவும் 'கிஷ்கிந்தா காண்டத்திலே வானரங்கள் நடனக்கலை பிரியர்களாகவும், அனுமார் தன் இசை, நடனங்களால் அசோகவன காவலர்களை மயக்கியதாகவும் "நிக்கும்பிலா" எனும் பத்திர காளியின் முன் நடனமாடும் ராஷ்ஷஸர்களுடைய நடனமே பின்னாளில் காளி நடனமாகவும்,ஆண்மை மிகுந்த "ஆரபடி பாணி" நடனத்திற்கு முன்னோடியாக இருந்ததாகவும் நர்த்தகன் எனப்படுபவன் தொழில் முறை நடனக் கலைஞனாகவும் ஆண்களின் நடனச் செய்தி இராமாயணத்திலே பிரதிபலிக்கப்படுகின்றது.

மகாபாரதத்திலே சித்திரசேனன் மூலமாக அர்ஜுனன் நாட்டியக்கலை பயில்வதாகவும், ஹரிவம்சத்திலே கிருஷ்ணன், பலராமன், அர்ஜுணன், நாரதர் நடனமாடுவதனூடாகவும், கிருஷ்ணன் சாலிக்கிய இசை நாடகத்தில் தேர்ந்தவன் எனும் பதத்தினூடாகவும் ஆண்கள் பற்றிய நடனச் செய்தி கூறப்படுகின்றது.

இந்திரன், பிரம்மா, விஷ்ணு, நந்தி போன்ற தெய்வ உலகத்தவர்கள் வழியாகவும் சிவபெருமானை முழு முதலாகவும் கொண்டுவந்த இப் பரதக் கலையானது பரதர் அவர்தம் மகன்களூடாக பூமிக்கு கொண்டுவரப்படுகின்றது. இவ்வாறான பரதக்கலையானது சான்றாதாரங்களின் அடிப்படையில் பயிலப்பட்டமையை சிந்துவெளி நாகரிகங்கள் புலப்படுத்துகின்றது. இங்கு கண்டுபிடிக்கப்பட்ட ஒரு முத்திரையில் ஆண் தெய்வமும், மூன்று கொம்புகளைக் கொண்ட தலையும் ஒரு பாகத்தை இன்னொரு பாகத்தின் மீது வைத்தமர்ந்த

யோகியின் நிலையும் ஆண்களின் நடன நிலையை சித்தரிப்பவையாக காணப்படுகின்றது. இதன் பின்னர் வந்த வேத, உபநிடத காலங்களிலும் ஆண்கள் கலையை பேணியவர்களாக காணப்பட்டனர்.

இக் காலங்களின் பின்னராகத் தான் தமிழ் இலக்கிய வரலாற்று காலங்கள் ஆரம்பம் ஆகின்றன. சங்ககாலத்தில் பாணன், கூத்தர் போன்றோர் மன்னர்களை போற்றி, பாடி ஆடும் கலைஞர்கள் பற்றிய செய்தி காணப்படுகின்றது. அத்தோடு "உண்டாட்டு"என்பது கள்ளினை உண்டு ஆடுதல் என்றும் "கொண்டாட்டம்"என்பது வெற்றிக்கொண்டாட்டத்தில் ஆடுவது என்றும்

"நறவுநாட் செய்த குறவர் பெண்டிரொடு……"

என்னும் மலைபடுகடாத்து அடிகளின் வாயிலாக வானையளாவும் மலை உச்சிகளில் கள் குடித்த நிலையில் குறவர் தம்பெண்டிரோடு மான்தோற் சிறு பறையின் ஒலிக்கேற்ப குரவை ஆடுவர் என்றும் போரிலே பெற்ற வெற்றியை கொண்டாடும் வகையில் "வென்றிகூத்து" ஆடப்பட்டதாகவும் ஆண்டவன் அருள் இரங்க கோயில் பூசாரி வேலன் வெறியாடல் ஆடியதாகவும் ஆண்கள் பற்றிய நடனச்செய்தி சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றது. சங்கமருவிய காலத்தே ஆடப்பட்ட 11 வகை ஆடல்களில்

(i) அல்லியம் - திருமால்
(ii) கொடுகொட்டி - சிவன்
(iii) குடை - முருகன்
(iv) குடம் - திருமால்
(v) பாண்டுரங்கன் - சிவன்
(vi) மல்லாடல் - திருமால்
(vii) துடி - முருகன்
(viii) பேடி – காமன்

போன்ற மேற்கூறிய 8 வகை ஆடல்கள் ஆண்கள் பற்றியதாகவே காணப்படு -கின்றது. இங்கு நடனத்தை வளர்ப்பவனாக பாண்டிய மன்னன் காணப்படுகின்றான். நடனக் கலைஞர்களிற்கு 'தலைக்கோல்' விருது வழங்கப்படுவதனூடாக இது புலப்படுகின்றது தவிர 'சாக்கியர் கூத்து' ஆண்கள் ஆடப்படுவதாகவும், மாதவியின் ஆடல் ஆசான் 'நட்டுவனார்' என்ற பதத்தால் ஆண்களைக் குறிப்பதாகவும் காணப்படுகின்றது.

இதன் பிற்பட்ட பல்லவர் - பாண்டிய காலத்திலே பரதநாட்டியம் பக்தியோடு சேர்ந்து வளர ஆரம்பித்தது. நாயன்மார்களும், ஆழ்வார்களும் இறைவன் மீது கொண்ட அன்பை ஆடல், பாடல் ஊடாக வெளிப்படுத்தினர். இரண்டாம் நந்திவர்மன் தன்னால் அமைக்கப்பட்ட முக்தீஸ்வரர் கோயிலுக்கு மட்டும் நடனம் புரிய 42 அடிகள்மாரை நியமித்ததாகவும் மகேந்திரவர்மன் காலத்தே கற்கோவில்களில் நடன ஓவியம், சிற்பம் என்பன தோற்றம் பெற்றதாகவும் இவனால் காஞ்சி வைகுந்தபெருமான் கோயிலில் கூத்தர் சிற்பங்கள், சிவனின் கரணங்கள் போன்றவற்றை வடிவமைத்தமை ஆண்களின் நடன வளர்ச்சி பங்களிப்பினை புடம்போட்டு விளக்குவனவாக அமைகின்றது. முதலாம் மகேந்திரவர்மன் தனது 'மத்தவிலாசப் பிரகசனம்' என்னும் நூலிலே சிவனின் தாண்டவ நடனம் மூவுலகையும் ஒற்றுமைப்படுத்துகின்றது என்ற செய்தியினூடாகவும் இராஜசிங்கன் அமைத்த கைலாசநாதர் கோயிலில் சிவன் ஆடிய பலவகை நடனங்களை சிற்பவடிவில் அமைத்தமையும் இக் காலத்தில் ஆண்கள் 'தட்டளிவு கொட்டுவார்' என்ற பதம் சமகால நட்டுவனாரைக் குறிக்கின்றமையும், அக்கால ஆண்களின் நடனப் பங்களிப்பை சுட்டுவனவாக அமைகின்றன.

பின்னர் வந்த சோழர் காலத்தே இராசராசனால் கட்டப்பட்ட இராஜ ராஜேச்சரம் கோயிலில் நடன சிற்பங்கள் காணப்படுவதும் திருமுறைப் பாக்களுக்கு நடனம் நிகழ்த்தப்பட்டமையும் சுவாமி வீதி உலாவின் போது நடனம் ஆடப்படுவதும் கோயிலுக்கு நடனப் பணிசெய்ய 400 தேவரடியார்களை நியமித்தமையும் சாக்கையர் கூத்து, சாந்தி கூத்து நிகழ்த்தப்படுவதும் குலோத்துங்கன் காலத்து பல நடன சாலைகள் அமைக்கப்பட்டும் இக்காலப் பகுதியில் எழுந்த கந்தபுராணம், பெரியபுராணம், கம்பராமாயணம் போன்றவற்றில் நடன செய்தி காணப்படுவதும் நடனம் கோயில் கிரியைகளிலே ஒரு அம்சமாக இடம்பெறுவதும் நாட்டியம் கற்பித்த ஆசிரியர்கள் கூத்தரசன், நிருத்த பேராயன், சாக்கைமராயன், நட்டுவ ஆசான் எனப் பல பெயர்களால் அழைக்கப்பட்டமை ஆண்களின் நாட்டிய திறமை எடுத்துக்காட்டுவதாக அமைகிறது. அரசன் முன் ஆடி 'தலைக்கோல்' பட்டம் பெறுவதும் தஞ்சை பெருவுடையார் ஆலயத்திலே 1-31 வரையான கரணங்கள் வடிவமைக்கப்பட்டமையும் கலிங்கத்து பரணி குலோத்துங்கன் அவையில் நாட்டிய நாடகமாக ஆடப் படலும் விக்ரமசோழன் உலா, குலோத்துங்க சோழன் உலா, இராஜராஜன் உலா என்னும் மூவர் உலாக்களும் அம்மன்னர்களின் அவையில் நாட்டிய நாடகமாக ஆடப்பட்டதும் கேலகாசி எனும் மரபு வளம் பெறுவதும் ஆண்களின் கலைப் பங்களிப்பினை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது.

இவற்றிற்கு பிற்பட்ட விஜயநகர நாயக்கர் காலம், மராட்டியர் காலங்களில் இன்றைய பரதம் தோற்றம்பெற ஆரம்பமானது எனலாம். இக்காலத்தே துளஜா மகாராஜா அரசசபையிலே தஞ்சை நால்வர் நடனப்பணி புரிந்தனர்.தஞ்சை நால்வரின் பாட்டனார் குடும்பம் கலைப்பணி புரிந்ததாகவும் இவர்களின் வாரிசுகளான கங்கைமுத்து, இராமலிங்கம் ஆகியோர்(17ம் நூற்றாண்டு) தஞ்சை செங்கண்ணார் ஆலயத்தில் நடனப்பணி புரிந்தார்கள். மராட்டி மன்னர்கள் அரசசபை வித்துவான்களாகவும் பிருகதீஸ்வரர் ஆலய நடன ஆசான்களாகவும் பணியாற்றினர். கங்கைமுத்துவின் புதல்வர்களான சுப்பராஜன, சிதம்பரம் ஆகியோர் தந்தையின் கலை அனுபவ வாயிலாக பல நடன நிகழ்வுகளை புரிந்தனர்.சுப்பராஜனை அவனது 19ம் வயதிலேயே தஞ்சையை ஆண்ட துளஜமகாராஜா அவரை அரண்மனை நாட்டிய ஆசானாகவும், பிருகதீஸ்வரர் ஆலயத்திற்கு கலைப்பணி செய்யவும் நியமித்தார். அவர அரச சபையிலும், ஆலயத்திலும் சிறந்த 'நட்டுவனராக' விளங்கினார். இவ்வாறான கலையாற்றல் உள்ள சுப்பராஜருக்கு சின்னையா, பொன்னையா சிவானந்தம், வடிவேலு என்னும் நாலு பிள்ளைகள் பிறந்தனர். இவர்களே தற்கால நடன அமைப்புக்கு உந்து சக்தியாக காணப்படுகின்றனர். துளஜா மகாராஜா இவர்களை தஞ்சை பெருவுடையார் கோயிலில் ஆடல் மகளிருக்கு நட்டுவானர்களாக நியமித்தார். இவர்களது வர்ணங்கள், பதங்கள், அஷ்டபதிகள் என்பன இன்றும் வழக்கில் உள்ளது.

இவ்வாறான பரம்பரையை சார்ந்த சிவானந்தம் வழியே அவரது பிள்ளைகளான மகாதேவ (நட்டுவனார்) ஸபாபதி (நட்டுவனார்) நடனப்பணி புரிந்ததாகவும் பந்தனை நல்லூர் முத்தையா, நெல்லையா நட்டுவனார், பந்தனை நல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, கிட்டப்பாபிள்ளை என்பவர்கள் சிறந்த நடனக் கலைஞர்களாகவும் நட்டுவனர்களாகவும் தஞ்சை நால்வர் உறவினர்களாளவும் காணப்படுகின்றனர்.இவர்களின் வழித்தோன்றல்களே இன்றைய நடனக்கலைஞர்களாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

தஞ்சை வாரிசுக்களில் ஒருவரான 20ம் நூற்றாண்டில் வாழ்ந்த பந்தனை நல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் மாணவர்களில் ஒருவரே ருக்மணி அருண்டேல் என்பது குறிப்பிடதக்கது. இது தவிர ராம்கோபால், கே.பி சிவானந்தம்பிள்ளை ஆகியோர் இவரது சீடர்களாக காணப்படுகின்றனர்.

இது தவிர 20ம் நூற்றாண்டிலும் அதன் பின்னரும் கலைப்பணி புரிந்தவர்களில் திரு கே.என் தண்டாயுதபாணிப்பிள்ளை, ஏ.பி சொக்கலிங்கப்

பிள்ளை இவர் மகன் சுபராஜபிள்ளை, வடுவூர் இராமையாப்பிள்ளை, எஸ்.கே. ராஜரட்ணம்பிள்ளை, எஜ்.கே.காமேஜ்வரபிள்ளை, டீ.கே.கல்யாணசுந்தரம்பிள்ளை, கதிரவேலுப்பிள்ளை, ராமசுவாமிபாகவதர் ஆகிய ஆண்கள் இக்காலப் பகுதிகளில் நடனக்கலையை அழியவிடாது பேணிப் பாதுகாத்தவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இவர்கள் நல்லாசான்களாகவும், நெறியாளர்களாகவும், வழிகாட்டிக -ளாகவும், தயாரிப்பாளர்களாகவும் சிறந்த நட்டுவனர்களாகவும் காணப்பட்டனர். இவர்களது வழித்தோன்றல்களே இன்றைய 21ம் நூற்றாண்டின் சிறந்த கலைஞர்களாக காணப்படுகின்றனர். திரு.வி.தனஞ்செயன், சி.வி.சந்திரசேகரம், அடையார் கே.லகஷமணன், திரு.எம்.வி.நரசிம்மாச்சாரியார், மதுரை முரளிதரன், கே.வி.ஸ்ரீநிவாசஐயங்கார் போன்ற ஆடவர்கள் நடன கலைப்பணி பற்றி நாம் யாவரும் அறிந்ததே.

எனினும் குறிப்பாக நாட்டிய கலை அழியவிடாது மறுமலர்ச்சி பெறுவதற்கு உறுதுணையாக இருந்த ஈ.கிருஷ்ணஐயர் குறிப்பிடத்தக்கவர். இவர் மெலட்டூர் நடேசஐயரிடம் இக்கலையை கற்று பரதத்தின் புனிதத்தன்மை உணர்ந்து அது நலிவடைந்து செல்லாதிருக்க தானே பெண் வேடம் தாங்கி ஆடல்களை நிகழ்த்தி உள்ளார்.

இவ்வாறான கலை புனிதர்களாலும், தொன்றுதொட்டு கலைக்காக தம்மை அர்ப்பணித்து அதன் பாரம்பரியத்தை பேணி போற்றி ஆடிய நடனக் கலைஞர்களாலும் அதனை குன்றிச் செல்லவிடாது வளர்த்த மன்னர்களாலும் இலக்கிய வல்லுனர்களாலுமே இன்றைய நடனக்கலை என்னும் பொக்கிஷதை நாம் கற்று அதன் இன்ப நிலையை அடையமுடிகின்றது என்றால் யாராலும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாத உண்மை ஆகும்.

**கைக்கூ**

மூத்த மகள் வயசுக்கு வந்ததும்
வேலை கிடைத்தது
பட்டதாரி அப்பாவுக்கு....

பா.தா

செல்வி. இறைவி தியாகராஜா
4ம் வருடம் - நடனத்துறை

# அரையர் சேவை



ஆரம்ப காலங்களில் கோயில்களே கலைகளின் தாய்வீடாக விளங்கி வந்தன. இசை, நடனம் ஆகிய கலைகளுடன் வைணவ கோயில்களில் ஆழ்வார்களின் பாசுரங்களினை இசையுடன் பாடி அதற்கேற்றவாறு அபிநயம் செய்து அந்தப் பாசுரங்களில் தமிழும், வடமொழியும் அமைந்த உரைகளை அழகாக பேசி நடிக்கும் முத்தமிழ் கலையே 'அரையர்சேவை' என்ற அழகிய கலையாகும். வைணவ கோவில்களில் இடம்பெறும் ஒரு நாடகமே அரையர சேவை ஆகும்.

நாதமுனிவர் என்பரால் அறிமுகம் செய்யப்பட்ட இவ்வகை நாடகம் கி.பி 12ம் நூற்றாண்டில் மிகப் பிரசித்தி பெற்றது. வைணவ புராணங்களில் இருந்தே இவ் நாடகங்களுக்கான கதைகள் கிடைக்கப்பெற்றன. இவ் நாடகங்களை நடத்துபவர்களை 'அரையர்கள்' என அழைப்பர். இவர்கள் வைணவ கோயில்களை நிர்வகிக்கும் வாரிசுரிமை பெற்றவர்கள் எனும் பெருமை கொண்டவர்கள். அரையர் என்றால் 'அரசன்' என்று பொருள். ஆழ்வார்களுடைய பாசுரங்களுக்குப் பிரதிநிதியாக இவர்கள் திகழ்வதால் இக் கலைஞர்கள் அரசர்கள் ஆகின்றனர்.

மக்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வண்ணம் சூழ்நிலைக்கேற்றால் போல் சொற்களாலும், சைகை மொழிகளாலும் இக்கலையை செய்வது அவர்களது தனிச்சிறப்பு.

இவ் நாடகங்களை செய்யும் நேரங்களில் அவர்களது நடையுடை பாவனைகளே வேறுபட்டதாயிருக்கும். ஜரிகைக் கரைகொண்ட பட்டுவேட்டி, உடலெங்கும் சூடியமலர் மாலைகள், சித்திரவேலைப்பாடமைந்த தொப்பி போன்றவை அணிந்து அபிநயங்கள் பிடிப்பர். திவ்ய பிரபந்தத்தை தொகுத்து வழங்கிய நாதமுனிகள் பரம்பரையில் வந்தவர்கள் என இவர்களைக் கூறுவார்கள்.

இவர்களது சொற்பிரயோகம் மணிபிரவாள நடையில் அமைந்திருக்கும். இக் கலையை நிகழ்த்துபவர்களில் முன்னர் இருந்த 14 வாரிசுகளில் தற்போது நான்கு வாரிசுகளே உள்ளனர்.

புதுக்கோட்டையில் உள்ள ஸ்ரீவில்லிபுத்தூர், திருச்சியில் உள்ள ஸ்ரீ ரங்கம், திருநெல்வேலி அருகில் உள்ள திருநகரி ஆகிய இடங்களில் மட்டுமே தற்போது இவர்கள் உள்ளனர். ஸ்ரீ வில்லிபுத்தூர் மற்றும் ஆழ்வார் திருநகரியில் வாழும் அரையர்கள் "முத்துக்குறி அரையர்கள்" ஆவார். முத்துக்களை உருட்டி குறிசொல்பவர்களே முத்துக்குறி அரையர்கள் எனப்படுவர். பொதுவாக நாடகத்தில் தலைவி தன் தலைவனை இறைவனுடன் ஒன்றிணையும் நாள் பற்றிக் குறிசொல்வதே முத்துக்குறியின் நோக்கம்.

ஸ்ரீ வல்லிபுத்தார் ஆண்டாள் திருக்கோயில் ஓர் ஆண்டில் மும்முறை அரையர் சேவை நடைபெறும். ஆண்டாளுக்கு முத்துக்குறி சொல்லும் அரையர் அவளை ஸ்ரீரங்கநாதப் பெருமானுடன் திருமணபந்தத்தில் இணைப்பதுடன் நாடகம் முடிவுறும் ஸ்ரீரங்கம் கோயிலில் அரையர் காலில் சலங்கை அணிந்து நடனமாடுவர். நடனத்தில் அபிநயங்கள் முக்கிய பங்கு வகிக்கும். அரையாகள் மௌன மொழியான அபிநயங்கள் மூலமே வைணவ வேதங்களின் சிறப்பையும், உணர்வையும் ஆன்மீகத் தத்துவங்களையும் வெளிக்கொணர்ந்தனர். உற்சவம் முன்பு நிகழ்த்தப்படும் இக் கலையானது 3 பகுதிகளைக் கொண்டது.

1. பிரபந்தங்களில் குறிப்பிட்ட பாடலைப் பாடுவது
2. பாடப்பெற்ற பிரபந்தத்தின் பொருளுக்கு ஏற்றால் போல் அபிநயம் பிடித்து ஆடுவது.
3. பாடலின் உட்பொருளை விளங்கிக் கூறுவது.

இந் நிலையில் அரையர் ஒருவரே பல்வேறு பாத்திரங்களாக வேடப் புனைவு மாறுதல் இன்றி அபிநயிப்பர். காட்சி மாற்றங்களை மாந்தர் கூற்று வழியே பாகுபடுத்துவர். பாசுரத்தின் ஒரு தொடருக்கு பலநிலைகளில் அபிநயம் செய்யும் சிறப்பினை இக் கலையில் காணலாம்.

இப்படிப்பட்ட அரியகலையான அரையர் சேவையின் தோற்றம் பற்றி நோக்குவோமாயின் திராவிடர் வேதம் தொகுத்த "நாதமுனிகளால்" ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே அரையர் சேவை துவக்கிவைக்கப்பட்டது. "மேலை அகத்து ஆழ்வார் மற்றும் கீழை அகத்து ஆழ்வார்" எனும் தனது இரண்டு மருமகன்களுக்கும் நாதமுனிகள் நாலாயிரம் திவ்யபிரபந்தங்களை பண் மற்றும

தாளத்துடன் கற்பித்ததாகவும் இவர்கள் வழி வந்தவர்களும், இவர்களிடம் கற்றவர்களும் இன்றைய தமிழகமெங்கும் உள்ள அரையர்கள் என நம்பப் படுகின்றது. முதன் முதலில் இச்சேவை "திருவரங்கத்தில்" துவக்கப்பட்டது.

**அரையர் சேவை நிகழ்த்தப்படும் முறை :**

இவர்கள் தாளம் தட்டிபாடுவர். அதற்கு காலில் ஜதி, அங்க அசைவு மற்றும் சுருதி இவைகளும் காணப்படும். சாதாரணமாக ஆழ்வார் பாசுரங்கள் முன் தனியன் சொல்லிவிட்டு பாசுரம் பாடுவது வைணவ மரபு. ஆனால் அரையர்கள் எனப்படுவோர் தனியன் பாடாமல் நேராகவே பாசுரங்களைப் பாடும் எளிமை பெற்றவர்கள்.

அரையர் சேவையில் பகல்பத்த, இராபத்து என 2 வகை உண்டு. இக் கலையில் தாளங்களைத் தட்டி ஒலி எழுப்பி இதைத் தொடங்குவர். இத் தாளத்தை "ஆழ்வார்" என அழைப்பர். இதைத் தவிர இசைக் கருவிகள் உபயோகிப்பதில்லை. பள்ளுப்பாட்டின் போது மிருதங்கம் உபயோகிக்கப் படுகின்றது. பாசுரம் முடிந்தவுடன் தாளங்களை இடுப்பில் வைத்துக் கொண்டு அபிநயம் செய்வர்.

இவ் அரையர் சேவையில் 8ம் நாள் திரவாய் மொழிதிருநாள் கொண்டாடப்படும். அன்று விசேசமாக "வேடுபறி" நிகழ்வு இடம்பெறும். இவ் வேடுபறி நிகழ்வானது 1000 வருட பாரம்பரிய மரபுக்கலையாகும். இவ் வேடுபறிநிகழ்வின் போது அரையர்கள் கையில் வீணையை வைத்துப் பாடி வீணை மீட்பர்.

**அரையர் சேவையின் தற்கால நிலை :**

இன்று அரையர் சேவை நிகழ்த்துவதில் ஸ்ரீ வில்லிபுத்தூரில் இரண்டு குடும்பங்கள், ஆழ்வார் திருநகரியில் இரண்டு குடும்பங்கள், மைசூர் மேற் கோட்டையில் இரண்டு குடும்பங்கள் இவ் சேவையினை வழங்கி வருகின்றது. இவர்களில் வில்லிபுத்தூர் அரையர்களே இன்று மிகவும் பிரபல்யமானவர்கள். "அரையர் ஸ்ரீநிவாசங்கையர் சுவாமி" இவர்களுள் இன்னும் அரையர் சேவையினை செய்து வருகிறார். இவரது வம்சாவழியாக அவரது மகன் "பாலமுகுந்த அரையர்" மற்றும் பேரன் "நாதமுனி அரையர்" ஆகியோர் செய்து வருகின்றனர்.

சு.சுகிர்தா
தற்காலிக விரிவுரையாளர் - இசைத்துறை.



# கும்மி

உலகில் எழுதப்பட்ட இலக்கியங்களுக்கு மூலகங்களாக இருப்பவை எழுதப்படாத வாய்மொழி இலக்கியங்களாகும். இத்தகைய இலக்கியங்கள் பாட்டு வடிவிலேயே வெளிப்படுத்தப்பட்டிருகிறது. பண்பாடு என்பது மனிதனதும் சூழலினதும் தொடர்பினால் உருப்பெற்றது. அதற்கு மனிதன் பெறும் அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கம், சட்டம் போன்ற பல பண்பாடுகள் உள்ளன என்று மானிடவியலாளரான ஈ.பி.ரெய்லர் இலக்கணப்படுத்தியுள்ளார். இத்தகைய பண்பாட்டு அம்சங்களின் வெளிப்பாடுகளே இலக்கியங்களாகும்.

சிற்றிலக்கிய வளர்ச்சிக்கு நாட்டுப்புறப்பாடல்கள் மிகவும் துணை நிற்கின்றது. சில சிற்றிலக்கிய வகைகள் அடித்தள மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் சிந்தனை கொண்ட பாடல்களாக விளங்குகின்றன. அவற்றுள் பள்ளு, அம்மானை, தாலாட்டு, ஏற்றம், ஒப்பாரி, ஊஞ்சல், நொண்டி நாடகம் போன்றவற்றை குறிப்பிடலாம். இவையாவும் 96 வகை சிற்றிலக்கியங்களுள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மனிதன் தன்னளவில் இன்பம் பெற்று இருக்கின்ற மனநிலையில் கைக்கொட்டிதான் இன்பங்களை பகிர்ந்துகொள்ளல் என்பது இயல்பாக இடம்பெற்றிருக்கின்ற செயலாகும். இத்தகைய கைகொட்டும் முறை தாள அமைப்புடையவை ஆகும். அசைவுகளுடன் சேர்ந்து பாடலும் இணைந்து "கும்மி". என்னும் கலை வடிவம் பின்னாளிள் உருப்பெற்றிருக்கலாம். தமிழர்களுடைய வழிப்பாட்டு முறைகள் பொதுவாக கலை அமைப்பானவை. கூத்துக்கலை வல்லவனாக இறைவனைப் பார்க்கும் மனநிலை இதற்கொரு சான்றாகும். நாட்டுப்புற வழிப்பாடுகள் கலை வடிவங்களிலேயே வெளிப்பட்டு நிற்கின்றது.

- கும்மி
- குரவை
- கோலாட்டம்
- தேவராட்டம்
- தெருக்கூத்து

என்பவை இறை தொடர்பான கலைகள் என்பதாகவே கருதப்படுகின்றது. கும்மியை குஜராத் "கர்பா" நடனத்துடனும், ராஜஸ்தானில் "கும்மார்" ஆடலுடனும், ஆந்திரத்தில் "குகாப்பி" உடனும், கேரளத்தில் "கைகொட்டி களியுடனும்" ஒப்பிட்டு பார்க்கக்கூடியதாக உள்ளது.

நாட்டுப்புறப் பாடல்கள் "ஐலசா" என்னும் ஓசை மீனவப் பாடலில் "தில்லேலங்கடி" என்னும் சொல் தெம்மாங்குப் பாடலையும் இதேபோல் கும்மியடி என்னும் வார்த்தை கும்மிப்பாடலை அடையாளப்படுத்துவதோடு பார்வையாளருக்கு மனதில் வாங்கிக்கொள்ள ஒரு உத்திமுறையாக இப் பாடல்களின் சொற்கள் இனங்காட்டி நிற்கின்றன.

**கும்மியின் வடிவங்கள் :**

கும்மிகள் அதன் தன்மைக்கு ஏற்ப நான்கு வகையாக பிரிக்கலாம். அவையாவன,

1) கோவில் சார்ந்தது
2) சமூகச் சடங்கு சார்ந்தது
3) பொழுதுபோக்குச் சார்ந்தது
4) விழிப்புணர்வு சார்ந்தது

மேலும் கிராமங்களில் பெண்கள் கும்மியை பின்வருமாறு வகைப்படுத்துவார்.

- பனைமரக் கும்மி
- நளநாயகக் கும்மி
- வானசுரகிக் கும்மி
- ஒயில் கும்மி
- சின்ன மலைக் கும்மி
- முத்து வீராய்க் கும்மி
- அரிச்சந்திரன் கும்மி
- வள்ளியம்மன் கும்மி
- பஞ்ச பாண்டவர் கும்மி
- வைகுந்த கும்மி
- சிறு தொண்டர் நாயனர் கும்மி
- ஞான உபதேச பேரின்பக் கும்மி
- நவியுல்லா காரணக் கும்மி
- விலை மாதாக் கும்மி

அடுத்து பாரதியார் கும்மி என்ற அம்சமும் உண்டு.

" கும்மியடி தமிழ்நாடு முழுவதும்
குலுங்கிட கைகொட்டி கும்மியடி
நம்மை பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோம் என்று கும்மியடி"

இக்கும்மி சுதந்திர வேட்கைகளையும், மூட நம்பிக்கைகளையும் எடுத்துக்காட்டுகின்றது. எனவே அக்காலத்தில் பாரதியாராலும் இக்கும்மி

விரும்பப்பட்டுள்ளது. பாரதியார் சுதந்திரத்தை இக் கும்மிப் பாடல் முலம் மிகவும் அழகாக வெளிப்படுத்தியுள்ளார்என அறிவதன் மூலம் பாரதியாருக்கும் கும்மிக்குமுள்ள விருப்பு தெரிகின்றது. சித்தர் பாடலில் **"கும்மியடி பெணணே கும்மியடி இரு கொங்கை குலுங்கவே கும்மியடி"** (ஞா. கோ.பக்.-87) இவ்வாறு சித்தர்கள் பல்வேறு பகுதிகளை சேர்ந்தவர்கள். வெவ்வேறு கால கட்டங்களை சேர்ந்தவர்கள் நினைத்த பொழுதே பாடலை பாடக்கூடியவர்கள். அந்த வகையில் மேற்குறித்த கும்மி பாடலோடு,

- வலைக்கும்மி
- ஆனந்தக்கும்மி

போனறவற்றை சித்தர்கள் பாடியுள்ளனர். இந்தக் கும்மிகளில் உலக இன்பங்களின் பற்றின்மை பாடல்களில் வெளிப்பட்டிருக்கும்.

✓ **பன்னில் கும்மி**

கும்மியடி பெண்ணே கும்மியடி இரு கொங்கைகளும் காப்பும் குலுங்க" (திருமலை - 27)

✓ **முளைப்பாரிகும்மி**

'ஒன்னாங் கிழமை அன்னிக்கு ஒரிலையாம் முளைப்பாரி
இரண்டாம் கிழமை அன்னிக்கு இரண்டிலையாம் முளைப்பாரி
முன்றாம் கிழமை அன்னிக்கு முன்றிலையாம் முளைப்பாரி
நாலாம் கிழமை அன்னிக்கு நாலிலையாம் முளைப்பாரி
ஐந்தாம் கிழமை அன்னிக்கு ஐந்திலையாம் முளைப்பாரி'

என்று இவ்வாறு ஒன்பது நாட்களுக்கு தொடர்ந்து செல்லும். **'பத்தாம் கிழமை அன்னிக்கும் பாதமே அடைந்திடுமே'** என்று நிறைவுறும். இந் நிகழ்வு அம்மன் கோவிலில் 18 விதமான தானியங்கள் இட்டு அதனைச் சுற்றி தொடர்ச்சியாக ஒன்பது நாட்களுக்கு இந்நிகழ்வு தொடரும். ஆண்களும் பெண்களும் முளைப்பாரியை நடுவில் வைத்து அதனை சுற்றி நின்றுகும்மி பாடுவார்கள். இது மாத்திரம் இருவரும் சேர்ந்து பாடும்கும்மியாகும்.இதில் பானை, தோல்பானை, சிங்கி போன்றவை பக்க இசையாக வாசிக்கப்படும்.

✓ **சமூகக் கருத்து அடங்கிய கும்மி**

இது தமிழ் நாட்டிலேயே காணப்படுகின்றது. தமிழ் நாட்டிலும் கீழ் தஞ்சை மாவட்டம், குடல்வாசல், மதுரை போன்ற பகுதிகளிலும் இன்றும் வழக்கத்திற்குரிய கும்மி பாடலாகும்.

**"ஊரான் தோட்டத்தில ஒருத்தன் போட்டான் வெள்ளரிக்கா**
**காசுக்கு இரண்டு விக்கச்சொல்லி காகிதம் போட்டான் வெள்ளைக்காரன"**

இப்பாடல் இந்தியாவை அடிமைப்படுத்திய ஆங்கிலேயருக்கு எதிராக கும்மி மெட்டில் உருவாக்கப்பட்ட பாடலாகும். இப் பாடலின் தாள நடை மூன்று காலங்களிலும் அமையும். அத்தோடு துரிதப்படுத்தல் பின்னர் குறைத்தல், சோக வடிவில் அமைத்தல், ஆத்திரமாகப் பாடல் என வெவ்வேறு விதங்களில் இக்கும்மிப் பாடல்களைப் பாடுவார்.

✓ **சண்டைக்கும்மி**

கும்மியில் இன்னுமோர் சிறப்பு என்னவெனில் 'சண்டைக்கும்மி' இக் கும்மியில் தமிழ்ப் பெண்களின் வீரமும் போர்க் குணமும் இங்கு காணப்படும். அத்துடன் பெண்களுக்கான உடல்பயிற்சியையும் இக் கும்மிப்பாடல் வெளிப்படுத்தும். மேலும் கும்மிப்பாடலுக்கென்று தனித்த பாடல் வடிவம் இருந்தாலும் கும்மி பாடல் வடிவம் இருந்தாலும் கும்மி பாடல் வடிவம் இல்லாத பல பாடல்கள் கும்மிப்பாடலாகப் பாடப்பட்டு வருகிறது. அவ்வாறு பாடப்படும் பாடல்கள் பல தொழிற் பாடல்களாக இருக்கின்றன என்பதனை அறிய முடிகின்றது. பெரும்பாலான கும்மிப் பாடல்களை எடுத்து நோக்குகின்ற போது பெண்களே பாடியதாக கூறப்படுகின்றது.

**"கும்மியடிக்கவே வாருங்கடி – நல்ல**
**கோதையர் ஒன்றாக வாருங்கடி"**

✓ **ஈழத்தில் கும்மி**

இன்று ஈழத்தில் இறை வழிபாடு சார்ந்து பொது நிகழ்வுகள் (மேடை நிகழ்வுகள) சார்ந்தும் இக்கலை வடிவம் பிரசித்தமாக உள்ளது. கண்ணகி அம்மன், மாரியம்மன் போன்ற வழிபாடுகளில் இக்கும்மி பாடி அடித்தல் மரபாக உண்டு. இன்னும் அம்மன் வழிபாட்டில் தெய்வ உருக்கொண்டு கைகளில் சிலம்புடனும் அம்மானைக் காயுடனும் கும்மியடிப்பர். ஆனால் பூசாரிமார்கள் பலர்சேர்ந்து உடுக்கடித்து கும்மி பாடல்கள் பாடுவது வழக்கமாக உள்ளது. மற்றைய தெய்வங்களின் வழிப்பாட்டில் நேரடியாக கும்மி பாடாது விட்டாலும் கோணேசர் கோவில், கதிர்காமம், திருகோணமலைக் காளி கோவில், வள்ளிப்புர ஆழ்வார் கோவில், கற்கோவளம் ஸ்ரீ கும்மி முத்துமாரியம்மன் கோவில், உடப்பு திரெளபதை அம்மன் ஆலயம் என அனேக கோவிலுக்கும் என்று கும்மிப்பாடல் உள்ளன.

இவை தேர்த் திருவிழாக்களில் தேருக்கு முன்னால் சிறுவர்கள் கும்மி அடித்துக் கொண்டு செல்வது மரபாக உள்ளதை இங்கு குறிப்பிடவேண்டும். பாடல் வேறுகுழுவினால் பாடப்படுகின்றது. எனவே இந்தியக் கும்மிகளில் இருந்து வேறுபட்ட நிலையில் ஆற்றுகை செய்யப்படுவதனை அவதானிக்கலாம்.

இராகம் : கல்யாணி தாளம் : திஸ்ரகதி

**பல்லவி**

கும்மியடி கும்மியடி கும்மியடி கும்மியடி....

**சரணம்**

சரசமோகனப் பெண்ணரே–நல்ல
சல்லாபத் தோழிகட்கும்பாரே
பரமநாயகி நேரிலேறி
பவனி வருகிறார் பாருங்கடி

இக் கும்மிப்பாடல் கல்யாணி இராகத்தில் அமைத்து திஸ்ரகதியில் கீர்த்தனை வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இது திருகோணமலை பத்திரகாளி அம்மன் மீது இயற்றப்பட்ட தேர்க்கும்மிப் பாடலாகும்.

❖ **கண்ணகி அம்மன் கும்மி**

'தானானே தானானே தானாதானா தந்தனத் தானானே'
'சீர்வித்த தம்பிலுவில் நகர் வாழும் பெண்கள்
செல்வியாம் கண்ணரகத் தாயால் மேல் ஏற்று
செந்தமிழால் பாட எந்தன் விநாயகன் காப்பானே.....

இக் கும்மிப் பாடலானது கிழக்கிலங்கையில் தம்பிலுவில் பிரதேச கண்ணகியம்மன் ஆலயத்திலே பாடப்படுகின்ற கும்மியாகும். இக் கும்மிப் பாடலானது பூசாரிமார்களினால் பாடப்படுகின்றது. இந்த வேளையில் உருக் கொண்ட சாமியார் கைகளில் சிலம்பு அணிந்தபடி உருக்கொண்டு ஆடுவார். இதற்கென பக்கவாத்தியமாக உடுக்கை இசைக்கப்படுவது மரபாகும். இந் நிகழ்வு இக்கோயிலில் மாத்திரமின்றி ஈழத்திலிருக்கின்ற மாரியம்மன், கண்ணகி அம்மன் போன்ற தெய்வங்களின் பெயரால் கும்மி சம்பிரதாய நிகழ்வு நடை பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இக்கண்ணகியம்மன் கோவில் ஈழத்தில் இடத்திற்கிடம் வேறுபடுகின்றது. தம்பிலுவில் பிரதேச கண்ணகியம்மன் ஆலயத்தில் பாடப்படுகின்ற கண்ணகியம்மன் கும்மியும் வெவ்வேறான தாள நடையுடன் வெவ்வேறான இசையுடன் பாடப்படுகின்றது என்பதை நம்மால அறிய முடிகின்றது.

**தம்பிலுவில் பிரதேச கண்ணகியம்மன் கும்மிப் பாடல் -**

'தானானே தானானே தானாதானா தந்தனத் தானானே'
'சீர்வித்த தம்பிலுவில் நகர் வாழும் பெண்கள்
செல்வியாம் கண்ணரகத் தாயார் மேல் ஏற்று
செந்தமிழால் பாட எந்தன் விநாயகன் காப்பானே.....

**கற்கோவள ஸ்ரீ கும்மி முத்துமாரியம்மன் ஆலயத்தில் பாடப்படுகின்ற கண்ணகியம்மன் கும்மிப்பாடல் -**

'தந்தனத் தந்தனத் தானானே தன தானதந்தனத் தானானே
தானதந்தனத் தானானே தன தானதந்தனத் தானானே
தன தானதந்தனத் தானானே
கும்மியடி பெண்கள் கும்மியடி – கரம்
கொட்டித் தொழுதுநீர் கும்மியடி
நம்மை நயந்த நாயகி கண்ணகி
அம்மன் அருள் பெறகும்மியடி'

இவ்வாறு இடத்துக்கிடம் வேறுபட்டுக் காணப்படுகின்றன.

❖ **முருகன் கும்மி**

ஈழததில் ஏராளமான முருகன் கும்மிப் பாடல்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றில் பாடலுக்கு முன்னர் சந்தங்கள் அமைக்கப்பட்டு அந்தச் சந்தங்களுக்கு பாடல்களும் பாடப்பட்டுவருவது மரபாக உள்ளதென அவதானிக்க முடிகிறது. இன்று இந்தக் கும்மிப் பாடலோடு சேர்ந்து ஆடலானது உளவியல் தன்மைகளுடன் நோக்கப் படுகின்றது.

'தென்த்தின தின்னா தெனத்தின் தின்னா
தெனத்தின தின்னா தெனானோ– ஓ
தென்னா தெனத்தின் தின்னா தெனத்தின் தின்னா தெனனோ
அருமறைகள் போற்றும் சரவணபவகுகனே
தருணமிதுன் சரிதை பாட கணபதி வாழ் துணையே'

❖ **கண்ணன் கும்மி**

ஈழத்தில் எப்பிரதேசத்திலும் பாடி ஆடப்படாத கண்ணன் கும்மி வடமராட்சிப் பிரதேசத்தில் கற்ற நகராம் கற்கோவளத்தில் உள்ள ஆலயமான ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திலும், ஸ்ரீ கும்மி முத்து மாரியம்மன் ஆலயத்திலும் பாடப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. இதில் கண்ணனின் லீலைகள் அனைத்தையும் கூறி பாடியாடுவார்கள். பெண்கள் தங்கள் சேலைத் தொங்கலை ஒருவருக்கொருவர் மாறிமாறி இழுத்து கண்ணனின் லீலை போன்றே செயல்களை செய்து வட்டமாக பாடி ஆடுவார்கள்.

'நன்னன்ன னானானே னன்னன்னா னன்னன் னானானே
னானன்னன் னானானே னன்னன்ன னானன்னன் னானானே
தூது சென்று வருவாய் ரங்கம்மா தூது சென்று வருவாயே
ஏதும் சுணக்கமின்றி ரங்கம்மா இக்கணமே வருவாய்
மாயக்கிட்டினனிடம் சிலசில வார்த்தை கேட்டு வருவாய்
நீ அவன் மாயையிலே சிக்காமல் பாயமாய் வந்திடடி'

என்று கேளிக்கையாகவும், வேடிக்கையாகவும், இறைவனைப் பேசுவதாகவும் அக் கும்மிப் பாடலில் அவனை உரிமையோடு உறவாடுவதாகவும் இப் பெண்கள் அக் கும்மிப் பாடலில் காணப்படுவதனை அவதானிக்கலாம்.

❖ **ஒப்பாரி வகையில் கும்மி**

தாலாட்டில் ஒருவர் எப்படியெல்லாம் வாழவேண்டுமென நினைத்தால் ஒப்பாரியில் எவ்வாறெல்லாம் வாழ்ந்தாய் என இறந்த காலத்தை நினைத்து வேதனைப்படும் வகையில் அமைந்துள்ளது. ஒருவரின் உயிர் போன வெற்றுடல் கிடக்கின்ற நிலையில் அவ்வுடலால் வாழ்ந்தவர்கள், வாழ்வு பெற்றவர்கள் மனம் வருந்தியும், துயரம் கரை மீற பாட்டுப்பாடி அழுகின்றனர். ஊரிலுள்ள முதிர்ந்த ஆணோ, பெண்ணோ மரணம் அடைந்துவிட்டால் திருமணமான பெண்கள் ஒன்றுகூடி இறப்பு நடந்த வீட்டின் பந்தலில் மரணம் அடைந்தவரின் பெருமைகளை கூறும் வகையில் கும்மியை நிகழ்த்துவர். இப்பாடல் சோகமான பாடலாக அமையும். இதன் தாள நடை மத்திம கதியில் அமையும். இக் கும்மியானது பிரதேசத்திற்கு பிரதேசம், இடத்திற்கு இடம் வேறுபட்டு அமைகின்றது. இது ஈழத்தில் பெரும்பாலும் வன்னிப் பிரதேசத்தில் இந்திய வம்சாவளி மக்களால் இன்றும் பின்பற்றப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

"சண்முகன் நான் வளர்த்தேன் - அம்மா
சாலையெங்கும் இரத்தமுங்க - அம்மா
சண்முகனும் மாய்ந்தானுங்க - அம்மா"

என்று ஒரு மகனை இழந்த தாயின் புலம்பல் இதுவே ஒப்பாரி வகையில் கும்மியாகும்.

மேற்குறிப்பிட்ட கும்மிப்பாடல்களை ஆராய்கின்ற போது மரபு சார்ந்த கலை அம்சங்களைக் கொண்ட சமூக சிந்தனைகளை வெளிக் கொணர்வதில் முக்கிய இடங்களை வகிக்கின்றது என்பதை இவ்விடத்தில் கூறியே ஆக வேண்டும்.

க.சஜீவன்
4ம் வருடம் - நாடகத்துறை

# வானொலி நாடகம் ஒன்றினை எவ்வாறு எழுதலாம்

**வா**னொலி நாடகமொன்றை எப்படி எழுதலாம் என்ற கேள்வி பலருக்கு எழுவதுண்டு. நல்லதொரு வானொலி நாடகமொன்றைச் செவிமடுக்கும் போது தன்னாலும் இவ்விதமான ஒரு படைப்பை உருவாக்கமுடிந்தால்.... என்ற ஆதங்கம் எழுவதுண்டு. சில நல்ல கருக்கள் உருவாகும் போது அதனை வானொலி நாடகமாக வடிவமைப்பது எப்படி என்ற கேள்வி எழுவது இயற்கையே. இங்கே நாம் வானொலி நாடகமொன்றை எப்படி எழுதலாம் என்ற கேள்விக்கு விடையாக சில குறிப்புக்களைத் தருகிறோம்.

வானொலி நாடகமொன்று உருவாவதற்கு பல அம்சங்கள் அவசியம்.அவை
(1) நல்லகதை (2) நடிகர்கள் (3) தயாரிப்பாளர்



தன்னைத் தாக்கிய ஒரு சம்பவம் நாடகத்திற்கு கருவாகலாம். அந்தக் கருவைச் சுற்றியே நாடகம் ஆரம்பித்து-வளர்ந்து- முடிவடையும். நாடகத்தினை எழுத ஆரம்பிக்கும் முன் தனக்குள்ளேயே கதையினை அனுபவித்து-உணர்ந்து-பாதிக்கப்பட்டு- அசைபோட்டு, ஒரு முதிர்ச்சியடைந்த பருவத்துக்குத் தயாராகிய பின்பு நாடகத்தினை எழுதலாம். கருவொன்று கிடைத்தவுடனே அதனை நாடகமாக்க முயலுவோரும் உண்டு. இது அனுபவத்தைப் பொறுத்து வெற்றி அடையும். ஆனாலும் புதிதாக நாடகம் எழுதுவோர் ஒரு கதையினை அனுபவித்து தன்னோடு அதனை வாழவைத்து பல நாட்கள் அதனுடன் வாழ்ந்து தன்னை அதனுடன் இணைத்து—ஒரு முடிவுக்கு வந்தபின் நாடகத்தினை எழுத ஆரம்பிக்கலாம்.

நாடகத்தினை எழுத ஆரம்பிக்கும் முன்னர் அதனை எங்கிருந்து ஆரம்பம் செய்வது என்பது கேள்வி. எப்போதும் வானொலி நாடகத்தில் ஆரம்பம் மிகவும் முக்கியம். நாடக அறிமுக இசைக்குப் பின்பு ஆரம்பிக்கப்படும் முதல் வார்த்தையே கவர்ச்சிகரமாக இருக்க வேண்டும். எனவே கதையினை ஒரு முக்கிய பிரச்சினையிலிருந்து ஆரம்பம் செய்தால் நல்லது. வானொலி நாடகம் நேரத்தினை அடிப்படையாக வைத்து எழுதப்படுவதால் அதற்கேற்ற விதத்தில் கதையினையும் மாற்றிக்கொள்ள வேண்டும். 15 நிமிட நாடகத்திற்கு 30 நிமிட நாடகத்திற்குப் பொருத்தமான ஒரு பெரிய கதையினைத் தெரிவுசெய்து கொள்ள முடியாது.

நாடகத்தினை எழுதும் முன்னர் இந்தக் கதைக்கு எத்தனை பாத்திரங்கள் முக்கியமாகத் தேவைப்படுகின்றன என்பதைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். ஒரு நல்ல நாடகத்திற்கு எத்தனை பாத்திரங்களைத் தெரிவு செய்ய வேண்டுமென்பது எழுதுபவரையும் அவரின் அனுபத்தினையும் பொறுத்தது. இதில் பல்வேறு அபிப்பிராயப் பேதங்களும் உண்டு. இருந்தாலும் ஒரு அரைமணி நேர நாடகத்திற்கு 5 - 7 வரையிலான பாத்திரங்களைத் தெரிவு செய்து கொண்டால் போதும். பதினைந்து நிமிட நாடகத்திற்கு அதனைவிட குறைவாகவும் - ஒரு மணிநேர நாடகத்திற்கு இதே அளவில் அல்லது அதைவிட ஓரிரு பாத்திரங்கள் அதிகரித்தாலும் பரவாயில்லை. ஆனால், பாத்திரங்களைக் கட்டுப்படுத்தி எல்லோருக்கும் நடிப்பதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும். அதிகமான பாத்திரங்களைக் கையாள்வதால் பாத்திரங்களை நினைவில் வைத்திருப்பது சிலவேளை சிரமமாகலாம். ஆனால், நாடகத்திற்கு அவசியம் என்ற நிலை வந்தால் மட்டுமே பாத்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். நாடகமொன்றினை எழுதத் துணைநிற்பது மொழி. இது உரையாடலாக இருப்பதனால் இலக்கண வரம்புகளைப் பற்றிக் கவலைப்படவேண்டிய அவசியமில்லை. உரையாடல்களுக்கு எழுத்துருவம் கொடுக்கக் கூடியவர்கள் எழுதலாம். பேச்சுமொழிகள் வித்தியாசப்படுவதால் எழுத்தாளர் தனக்கு நன்கு பரிச்சயமான மொழிநடையைத் தெரிந்து கொண்டு எழுதலாம். தனக்கு நன்கு பழக்கமில்லாத மொழியில் நாடகத்தினை எழுதக்கூடாது.

நாடகத்தின் திருப்புமுனைகளை அல்லது மாற்றங்களைக் காட்சிகளாகப் பிரித்து மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். அல்லது குறித்து வைத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு காட்சி மாற்றத்திலும் நாடகத்தினை நகர்த்திச் செல்லக் கூடிய திருப்பங்கள் வேண்டும். சொன்ன விசயத்தினைத் திரும்பத் திரும்பப்

பேசக்கூடாது. ஒவ்வொரு காட்சியிலும் ஒரு புதிய விசயமும் கதையோடு சம்பந்தப்பட்ட உபசம்பவமும் இருக்க வேண்டும்.

வழக்கமாக நாடகத்தின் கருவினை சுமந்து செல்லும் பாத்திரம் சில இருக்கும். இருந்தாலும் கதைக்குத் தேவைப்படும் போதே இவை வரவேண்டும். திரும்பத்திரும்ப ஒரே பாத்திரம் பேசுவது களைப்பையும் - நாடகத்திற்கு தொய்வையும் தோற்றுவிக்கும். இரண்டு பாத்திரங்கள் ஆள்மாறி ஆள் பேசுவது, அடுத்த காட்சியிலும் அதே பாத்திரங்கள் வருவது போன்றவற்றினைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். கதையைப் பொறுத்து பாத்திரங்கள் பேசினாலும் மீண்டும் மீண்டும் ஒரே குரல் கேட்பது ரசிப்போருக்கு களைப்பினை உண்டாக்கலாம்.

சரித்திர - இலக்கிய- சமூக- கவிதை நாடகங்கள் என்று பொதுவாக வானொலி நாடகங்களை பிரித்துக்கொண்டாலும் வேறுவிதமான நாடகங்களையும் அறிமுகப்படுத்தலாம். ஆனால், இப்போதெல்லாம் புது முயற்சிகளில் எழுத்தாளர்கள் முயலுவதில்லை. உரையாடல்களை எழுதும் போது இயற்கையாகவும் தாக்கமுள்ளதாகவும் இருத்தல் வேண்டும். பக்கங்களை நிரப்பும் விதத்தில் உப்புச்சப்பற்ற உரையாடல்களை எழுதுவது தவிர்த்துக் கொள்ள வேண்டும். பாத்திரங்களை உணர்ந்து அவற்றுக்கு ஏற்ற விதத்தில் உரையாடல்களை எழுதுதல் வேண்டும். சிலவேளைகளில் ஒரு சாதாரண பாத்திரம் பெரும் அறிவாளியைப் போல் பேசுவதும் - ஒரு குழந்தை பெரியவர்களுக்கே புரியாத தத்துவம் பேசுவதும் வழக்கமாக நாடகத்தில் வரும் தவறுகளாகும். அந்தந்த பாத்திரத்தின் தன்மைக்கேற்பவே வசனங்கள் எழுதப்படுதல் வேண்டும். வசனங்களை எழுதும் போது உணர்ச்சிகளைக் குறிப்பிடல் வேண்டும். உதாரணமாக சோகமாக-கோபமாக- வீரமாக- திக்கித்திக்கி- குரல் தழு தழுகக- போய்க்கொண்டு- வந்துகொண்டு - மௌனமாக-என்றெல்லாம் அவசியமாக உள்ள இடங்களில் குறிப்பிடல் நடிப்பவர்களுக்கு வசதியாக இருக்கும்.

நாடகத்தில் ஆளப்படும் உரையாடல்கள் சுருக்கமாக இருப்பதும் பந்தியாக பேசாமல் இருப்பதும் நல்லது. அவசியமாக இருக்கும் இடங்களில் மட்டும் ஒலிக் குறிப்புக்களை மறக்காமல் எழுதவேண்டும். சில சந்தர்ப்பங்களில் ஒலிக்குறிப்புக்கள் (சவுண் எபெக்ட்ஸ்) கூட பாத்திரங்களின் அந்தஸ்தைப் பெறுவது உண்டு. உரையாடல்களால் செய்ய முடியாத தாக்கங்களை ஒலிக் குறிப்புக்கள் உணர்த்தவல்லன.

நாடகத்தினை எழுதும் போது அந்தச் சம்பவம் நடைபெறும் இடத்தினைக் குறிப்பிட வேண்டும். இது 'களம்'எனப்படும். இந்தக் களத்தினைக் காண்பிக்க

பின்னணி ஒலிக் குறிப்புக்களைக் கையாள்வது, நாடகத்தில் இலயித்துப் போக வசதியாக இருக்கும். இல்லையென்றால் உரையாடலின் போது அது குறிப்பிடப்படலாம்.

நாடகத்திற்கு உயிரூட்ட பின்னணி இசை வழங்கப்படுவதும் உண்டு. ஆனால், இது தயாரிப்பாளருக்குத் தயாரிப்பாளர் வித்தியாசப்படலாம். ஆனால் பின்னணி இசையைப் பாவிப்பதால் நாடகத்தின் ஆளப்படும் வசனங்களுக்கு உணர்ச்சி ஊட்டப்படும் என்று தயாரிப்பாளர் நினைத்தால் அப்படி செய்வதில் தவறொன்றுமில்லை.

சில எழுத்தாளர்கள் நாடகத் திணைக்களம் எதுவென்று எழுதாமல் வீட்டுக்குள்ளேயே கதை நடைபெறுவதாக எழுதிச் செல்வார்கள். பொதுவாக நாடகத்தினை வெளியே எடுத்துச் செல்லவும் வேண்டும். அப்போதுதான் நாடகத்தினை நன்கு அனுபவித்து ரசிக்கலாம். நாடகத்தினை ஒரே எல்லைக்குள் வைத்துக்கொண்டு எழுதுவது தவிர்க்கபடல் வேண்டும். நாடகத்தின் கதையினை அதற்கேற்ற விதத்தில் மாற்றிக் கொள்ளவும் முடியும். வீட்டுக்குள் பேசும் ஒரு விசயத்தை வெளிப்புறத்தில் அல்லது கடற்கரையில் அல்லது ஒரு நதியோரத்தில் பேசலாம். இது நாடகத்தினை கேட்போருக்கு இன்பமாக இருக்கும்.

வசன அமைப்புக்கள் நாடத்திற்கு ஏற்றவிதத்தில் மாறுபடலாம். சமூக-நகைச்சுவை- சரித்திர- இலக்கிய - கவிதை நாடகங்களின் வசனங்கள் மட்டுமல்ல நாடகத்தின் வெளி-உள் உருவங்களும் மாறி அமையும்.

ஒரு நல்ல வானொலி எழுத்தாளன் தான் எடுத்துக்கொண்ட கதையினைத் தங்குதடையின்றி எடுத்துச் செல்ல பலவிதமான உத்திகளைக் கையாள்வான். தான் எடுத்துக்கொண்ட கதையினை எவ்வாறு மற்ற நாடகங்களிலிருந்து வித்தியாசப்படுத்தி எழுதலாம் என்று சிந்தனை செய்து புது உத்திகளைக் கையாண்டு எழுதுவது வரவேற்பான ஒரு விசயம்.

பர்நாந்து றொக்சவதி
4ம் வருடம் - இசைத்துறை.

# கர்நாடக இசை வரலாறு





**க**ர்நாடக சங்கீதம் என இன்று அழைக்கப்படுவது தென்னக சங்கீதம் என்னும் பொருளில் தான். அவ் இசை தனித்தன்மையுடன் உருவான காலகட்டத்தில் அதாவது 13ம் நூற்றாண்டுக்குப் பிந்தைய 300 வருடங்களில் இந்தியாவில் முகலாயர் ஆட்சி நிலவியது. அவர்களின் ஆவணங்களில் தென்னக இஸ்லாமிய ஆட்சியாளர்கள் கர்நாடக நாவாப்கள் என அழைக்கப்பட்டனர்.

13ம்நூற்றாண்டின் இறுதி முதல் 17ம் நூற்றாண்டின் இறுதிவரை 500 ஆண்டு காலம் கர்நாடக சங்கீதத்தின் உருவாக்க காலகட்டம் எனலாம். அதாவது சாரங்கதேவர் என்ற இசையிலக்கண அறிஞர் (1210-1247) தென்னகத்தில் நிலவிய இசைமரபுகளை எல்லாம் தொகுத்து சங்கீத ரத்னா கரகம் என்னும் நூலை உருவாக்கியதை அதன் தொடக்கப் புள்ளியாக கொள்ளலாம்.

அதன் பின் 500 ஆண்டுக் காலத்தில் தென்னகத்தில் பல இடங்களில் ஒரு வட்டாரத் தனித்தன்மையுடன் உருவாகி பல்வேறு குரு மரபுகள் வழியாக நீடித்து இக்காலகட்டத்தை வந்தடைந்துள்ள கர்நாடக இசையின் முன்னோடி வடிவங்கள் பல உண்டு. பொதுவாக ஆய்வாளர்களின் முடிவு என்னவென்றால் அவற்றில் மையமானது சங்ககாலம் முதல் தமிழகத்தில் இருந்து வந்த பண்ணிசை மரபு என்பது தான். அதைப் பாடியவர்கள் பாணர்கள். இவர்கள் நாடோடி கலைஞர்களாக சங்ககாலத்தில் பெருமதிப்புடன் இருந்தார்கள்.

சங்கமருவிய காலகட்டத்தில் அதாவது கி.பி 2ம் நூற்றாண்டு முதல் பௌத்த சமண மதங்களின் ஆதிக்கம் மேலோங்கிய போது மெல்ல மெல்ல அவர்கள் சமூக முக்கியத்துவம் இழந்தனர். காலப்போக்கில் தாழ்த்தப்பட்ட தீண்டத்தகாத மக்களாகவும் ஆக்கப்பட்டனர். அவர்கள் சோழர் காலத்தில் பறையர்களின் ஒரு பகுதியாக கருதப்பட்டனர்.

பௌத்தமும் சமணமும் வலுவிழந்து பக்தி இயக்கம் மேலெழுந்த

$7^{ம்}$ நூற்றாண்டில் மீண்டும் பண்ணிசை புத்துயிர் பெற்றது. சைவ நாயன்மார்களும் ஆழ்வார்களும் அதை பக்தியின் முதன்மை ஊடகமாகக் கொண்டனர். சேர சோழ பாண்டியர்களால் பெரும் ஆலயங்கள் உருவாக்கப்பட்ட போது அங்கே பண்ணிசையைப் பாட ஓதுவார் மரபு உருவாக்கப்பட்டது. பண்ணிசை இலக்கணங்கள் மீண்டும் வகுக்கப்பட்டன.

இவ்வாறு வாழ்ந்த பண்ணிசை மரபுக்கு மீண்டும் மிகப்பெரிய வீழ்ச்சி $12^{ம்}$ நூற்றாண்டில் இஸ்லாமிய படையெடுப்புக்களால் நிகழ்ந்தது. சேர சோழ பாண்டிய அரசுகள் அழிந்தன. ஏராளமான ஆலயங்கள் இடிக்கப்பட்டன. இருந்த ஆலயங்கள் புரவலின்றி கைவிடப்பட்டன. அது பண்ணிசை மரபை பேணுவாரின்றி அழியச் செய்தது.

அதன் பின்னர் உருவான நாயக்கர் ஆட்சிக் காலத்தில் இடிக்கப்பட்ட ஆலயங்கள் மீண்டும் கட்டியெழுப்பப்பட்டன. ஆலய வழிபாடும் பக்தி இயக்கமும் மீண்டும் எழுந்தது. இக்காலகட்டத்தில் வட இந்தியாவிலிருந்து வந்த இசை மரபுகள் தெற்கே பெரிதும் பரவின. இங்கிருந்த பண்ணிசை மரபும் அந்த வடஇந்திய இசை மரபுகளும் கலந்தன. அந்தக் கலவை இசையின் அடுத்த மறுமலர்ச்சிக்கு வழிவகுத்தது. அவ்வாறு உருவான புதிய இசை மரபைத்தான் கர்நாடக இசை என்கின்றார்கள். சாரங்கதேவரின் நூலை ஒரு இசைக் கணப்கெடுப்பு என்று கொள்ளலாம். அன்றிருந்த எல்லா மரபுகளையும் அவர் தொகுக்கிறார். அதன் பின் தென்னக இசைமரபு மெதுவாக மேலெழுந்தது. சாரங்கதேவர் யாதவ மன்னர்களின் அரசசபையில் இருந்தவர்.


இந்தியா முழுக்க உருவாகி வந்திருந்த பொதுவான இசை மரபில் இருந்து வேறுபடுத்தும் பொருட்டு கர்நாடக சங்கீதம் என்னும் பொருளில் ஹிந்துஸ்தானி இசை என்று அழைக்கப்பட்டது. கர்நாடக சங்கீதம் என்னும் மரபு மக்களிடம் சென்று சேரவும் நிலைபெறவும் பஜனை மரபு பெரிதும் உதவியது. பஜனை மரபு வழியாக கர்நாடக சங்கீதத்தில் நாட்டார் அம்சங்கள் வந்து கலந்தன. கர்நாடக சங்கீதத்தில் $19^{ம்}$ நூற்றாண்டில் ஒரு மேடை முறைமை உருவானது வரை பஜனை போலவே இருந்தது. பழைய கர்நாடகசங்கீத கச்சேரிகளைக் கேட்டால் பஜனை போல பலர் கூடி பாடுவதைக் கேட்க முடியும். இன்று கூட கர்நாடக சங்கீதத்தில் இருந்து பஜனை அம்சத்தை நீக்க முடியவில்லை.

ஆகவே கர்நாடக இசை என்பது பழந்தமிழ் பண்ணிசையின் கூறுகளும், இங்கிருந்த நாட்டாரிசை கூறுகளும், வடஇந்திய ஹிந்துஸ்தானி கூறுகளும் ஆக்கபூர்வமாக கலந்து உருவான ஒரு தனிக்கலை வடிவம் என்று இந்த கர்நாடக இசையை சொல்லலாம்.

மெற்றோ நியூஸ்

# எச்.ஐ.வி தொற்றிலிருந்து பாதுகாத்துகொள்ள சில அறிவுரைகள்





சமூகத்தின் தேவை கருதி இச் செய்தியை எமது சஞ்சிகையில் பிரசுரிக்கின்றோம். ஏனெனில் சமூகத்தை வழிநடத்த வேண்டியவர்களாக பல்கலைக்கழக மாணவர்கள் இருக்கிறார்கள் என்பதனை முன்நிறுத்தி தகவலை பரிமாறிக் கொள்கிறேன். எச்.ஐ.வி. தொற்றானது ஒரு வைரஸாகும். மருந்துகளை சரியான முறையில் அருந்தினால் எய்ட்ஸ் வராமல் சாதாரண மனிதனைப் போல நீண்டகாலம் வாழலாம் என்கிறார். தேசிய பாலியல் எயிட்ஸ் ஒழிப்பு பிரிவின் வைத்திய நிபுணர் சிசிரலியனகே.


## எச்.ஐ.வி இலங்கையரின் தற்போதைய நிலை.

இலங்கையின் முதன்முதலாக 1986 ஆம் ஆண்டு எச்.ஐ.வி. கண்டறியப்பட்டது. இவர் வெளிநாட்டவராக 1987 ஆம் ஆண்டு எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளானவராக இலங்கையில் இனங்காணப்பட்டார். அதன் பிறகு 1989 ஆம் ஆண்டு இலங்கையர் ஒருவர் இந்த தொற்றுக்கு உள்ளானவராக அடையாளம் காணப்பட்டார். அதன் பிறகுதான் எச்.ஐ.வி. தொற்று இலங்கையில் பரவ ஆரம்பித்தது. 2014 ஆம் ஆண்டு எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளானவர்களில் 228 பேர் மாத்திரமே கண்டறியப்பட்டனர். 2015 ஆம் ஆண்டு 236 பேர் எச்.ஐ.வி தொற்றுக்குள்ளானவர்களாக் கண்டறியப் பட்டனர். Unaid நிறுவனத்தின் மதிப்பீட்டின்படி எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளானவர்களில் 3600 பேர் வரையில் உயிருடன் இருக்கிறார்கள். ஆனால் நாங்கள் எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளானவர்களில் 2310 பேரை மாத்திரம் இனங்கண்டுள்ளோம். இதில் 308 பேர் மரணித்துள்ளார்கள். மீதம் எஞ்சி உள்ளவர்கள் உயிருடன் வாழ்கிறார்கள் என நினைக்கிறோம். எங்களிடம் சிகிச்சைபெற வருபவர்களின் எண்ணிக்கை 17 சதவீதமாக அதிகரித்துள்ளது. 750,800 பேர் மாத்திரம் எங்களிடம் சிகிச்சைபெற வருகிறார்கள். நாங்கள் கண்டறிந்த எண்ணிக்கையை போல நாங்கள் இன்னும் அதிகமானோரைக் கணடறிய வேண்டியுள்ளது. ஒரு கிழமைக்கு 7 பேர் எச்.ஐ.வி. தொற்றுக்கு

உள்ளாகின்றனர். ஆனால் எங்களுககு குறைந்தபட்சம் ஒரு நாளைக்கு ஒருவரை -யேனும் இனங்கண்டுகொள்ள வேண்டும. நாங்கள் அப்படி இணங்காணும் பட்சத்தில் அனைத்து எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளானவர்களையும் இனங்கணடு கொள்ள முடியும். 2030 ஆம் ஆண்டுகளில் எச்.ஐ.வி. தொற்று இல்லாமல் ஒழித்து விடுவதற்கு Vdusaid நிறுவனமும் உலக சுகாதார நிறுவனமும் சீரியஸ் முயற்சித்து வருகின்றன.

**எயிட்ஸ் என்றால் என்ன ?**






எச்.ஐ.வி என்பது ஒரு வைரஸாகும். இந்த வைரஸ் ஆனது எங்களின் உடலில் உன 4 என்ற இடத்தில் உட்புகுந்து தங்கிவாழ்ந்து அதன் பெருக்கத்தை அதிகரித்துக் கொள்கிறது. மனித உடலில் மாத்திரம் இந்த வைரஸ் வாழ முடியும். இதனால் மனிதனில் இருந்து மனிதனுக்கு பரவ அதிக வாய்ப்புக்கள் உள்ளன. வைரஸ் உட்புகுந்த பிறகு எம் அனைவருக்கும் உடலில் DNA சேர்ந்து உடலிலே இருந்துவிடும். அதன் பிறகு அவற்றை அகற்ற முடியாமல் போய்விடும். ஒருநாளைக்கு மில்லியன் கணக்கில் வைரஸ் பெருகும். இவ்வாறு பெருகுவதால் பெரும் பிரச்சினை ஏற்படும். DNA சேர்வதால் வைரஸை அகற்ற முடியாமல் போய்விடும். நாங்கள் இந்த நோய்க்கு மாத்திரைகள் வழங்கினாலும் உடலில் இந்த வைரஸை நிரந்தரமாக விடுவிக்கக்கூடிய மாத்திரைகளை யாரும் இன்னும் கண்டுபிடிக்கவில்லை. ஆனால் எச்.ஐ.வி. கட்டுப்படுத்த கூடிய மாத்திரைகள் கண்டுபிடித்துள்ளனர். இதில் பலவிதமான மாத்திரைகள் உள்ளன. இலங்கையை பொறுத்தமட்டில் இந்த மாத்திரைகளை இலவசமாக நோயாளிகளுக்கு வழங்கி வருகின்றனர். முன்னைய காலங்களில் மூன்று மாத்திரைகளை வெவ்வேறாக உட்கொள்ள வேண்டும். ஆனால் இப்போது ஒரு மாத்திரையாக தயாரிக்கப்பட்டு வருகின்றது. ஒருநாளைக்கு ஒரு மாத்திரை மட்டும் உட்கொள்ள வேண்டும். இந்த கண்டுபிடிப்பால் அதிகளவு பக்க விளைவுகளை குறைத்துகொள்ளக்கூடியதாக உள்ளது. எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளான பிறகு என்ன நடக்கும்? எயிட்ஸ் ஏற்பட்டால் இறந்துவிடுவார்கள். என்ற நிலை ஆரம்ப காலங்களில் இருந்தது. ஆனால் இன்றைய காலகட்டத்தை பொறுத்தமட்டில் கட்டுப்படுத்தக்கூடிய மருந்து மாத்திரைகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. எச்.ஐ.வி தொற்றுக்குள்ளானவர்கள் இனம் காணப்பட்டு அவர்களுக்குறிய மாத்திரைகளை வழங்கி எச்.ஐ.வி தொற்றை கட்டுப்படுத்தி

எயிட்ஸ் ஏற்படாமல் அவர்கள் சாதாரண மனிதனைப் போல் வாழமுடியும். சாதாரண மனிதனைப் போல தொழில் செய்து வாழமுடியும்: உடலில் எந்தப் பாதிப்பும் ஏற்படாது. ஆனால், மனதளவில் பாதிக்கக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. சமூகத்தினர் இவர்களை கொச்சைப்படுத்துதல், இழிவான வார்த்தைகளால் இவர்களின் மனங்களை சொல் அம்புகளால் காயப்படுத்துகின்றனர். எச்.ஐ.வி தொற்றுக்குள்ளானவர்களுக்கு அருகே செல்ல பயம், தொடுவதற்கு பயம், அருகே அமர்வதற்கு பயம், வைத்தியசாலைக்குச் சென்றால் அங்கேயும் இதே பிரச்சினைக்குட்படுவார்கள். ஒருநாள் எச்.ஐ.வி தொற்றுக்குள்ளான ஒருவர் அறுவைச் சிகிச்சைக்காக வந்திருந்தபோது, 'ஓ' என்று சத்தமிட்டுக் கொண்டு வைத்தியசாலையில் ஊழியர்கள் கலவரத்தை ஏற்படுத்தினார்கள். நான் அவர்கள் அனைவரையும் அழைத்து இதற்கு பயப்படவேண்டிய அவசியம் இல்லை என பல ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் கூறிய பிறகு நாங்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து அறுவைச் சிகிச்சை செய்தோம். இவர்கள வைத்தியர்கள். இவர்களே அவ்வாறு நடந்துகொண்டால் பொது மக்கள் எவ்வாறு செயற்படுவார்கள்.

இதற்குக் காரணம் முறையற்ற பாலியல் உறவினால் தான் 100/95 சதவீதம் எச்.ஐ.வி தொற்றுக்குள்ளாகிறார்கள். ஒரு ஆணொருவர் பெண் ஒருவரிடம் பாலியல் உறவுகொள்ளும் போது ஒருவருக்கு எச்.ஐ.வி தொற்று இருப்பின் மற்றவருக்கு எச்.ஐ.வி தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது. பெண் ஒருவருக்கு எச்.ஐ.வி தொற்றின் போது தாய்மையடைவதால் மற்றது தாய் கர்ப்பம் தரித்த பிறகு தாய்க்கும் எச்.ஐ.வி தொற்று ஏற்பட்டால் குழந்தைக்கு 100/45-50 சதவீதம் வாய்ப்புள்ளது.

இரத்தப் பரிசோதனையினாலும் மற்றையது போதைப்பொருள் பயன்படுத்துபவர்கள் ஒருவர் ஊசி மூலம் போதையை ஏற்படுத்துவதன் மூலம் எச்.ஐ.வி பரவ அதிக வாய்ப்புக்கள் உண்டு. அதாவது ஒருவருக்கு எச்.ஐ.வி தொற்று இருந்தால் போதைப் பொருட்ளை ஊசியில் ஏற்றும் போது குருதி சிறிது சிதறலாம். அவ்வாறு பலர் அந்த ஊசியின் மூலம் எச்.ஐ.வி தொற்று குருதி மூலம் பரவ அதிக வாய்ப்புக்கள் உண்டு.

இலங்கையில் 2310பேர் எச்.ஐ.வி தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இவர்களில் 603 பேர் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். 366 எச்.ஐ.வி தொற்றுக்குள்ளானவர் இறந்துள்ளார்கள். ஆண்கள் தான் அதிக எச்.ஐ.வி தொறறுக்குள்ளாகிறார்கள். தவறான பாலியல் உறவின் மூலம் தான் அதிகமான ஆண்கள் எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளாகிறார்கள். விபச்சார விடுதிகளுக்குச் சென்று தவறான பாலியல் உறவில ஈடுபடுவதாலும். ஆணும், ஆணும் பாலியல்

உறவு கொள்வதாலும் எச்.ஐ.வி தொற்றுக்குள்ளாகிறார்கள். ஆண்கள் குதம் வழியாக உறவில் ஈடுபடும் போது காயம் அடைந்து இரத்த சிதைவு ஏற்படலாம். இதனால் எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளாக அதிக வாய்ப்புள்ளது. அநேக குடும்பங்களைப் பார்த்தால் கணவர்களால் அதிக குடும்பப் பெண்கள் எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளாகிறார்கள். இதற்குக் காரணம் தவறான பாலியல் உறவில் ஆண்கள் ஈடுபடுவதால் தனது மனைவியர்கள் துரதிஸ்டவசமாக எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளாகிறார்கள். ஒருவருக்கு குருதி வழங்குவதற்கு முன்பு அவரின் குருதி எச்.ஐ.வி தொற்றுக்குள்ளானதா என அறிந்த பின் குருதி வழங்க வேண்டும். கடந்த வருடம் நான்கு லட்சமானவர்களுக்கு குருதிப் பரிசோதனை செய்து பார்த்தோம.

சகல தாய்மார்களையும் எச்.ஐ.வி பரிசோதனை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம். சிபிலிஸ் இருக்கிறதா என பரிசோதனை செய்கிறோம். இது தாய்க்கு இருந்தால் குழந்தைக்கு சென்று குழந்தை குறை மாதத்தில் பிரசவித்தல், உடலில் குறைபாடுகள் ஏற்பட்டால் பாரம் குறையலாம் போன்ற பாதிப்புக்குள்ளாகலாம். 2015ம் ஆண்டில் 17 பேர் எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளாகியிருப்பது தெரியவந்துள்ளது. சிப்பிலிஸ் 3,50,000 எச்.ஐ.வி 1,75,000 பரிசோதனை செய்துள்ளோம். எச்.ஐ.வி தொற்றுக்குள்ளான தாய்மார்கள் 17 பேரை கண்டறிந்துள்ளோம். இவர்களுக்கு சிகிச்சை வழங்கி அவர்கள் பெற்றெடுக்கும் ஒரு குழந்தைக்கேனும் தொற்றாவண்ணம் சிகிச்சை வழங்கியுள்ளோம். அரசாங்கம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. 25-49 வயதுக்குட்பட்டவர்களுக்குத்தான் அதிக பாலியல் ரீதியான உணர்வு தோன்றும். அதனால் எச்.ஐ.வி தொற்றுக்குள்ளாகிறார்கள்.

சாதாரணமாக இலங்கையைப் பொருத்தமட்டில் 25-26 வயதுக்கு உட்பட்டவர்கள் தான் திருமணம் செய்கிறார்கள். அதற்குப்பிறகு அதிக பாலியல் உணர்வுக்குட்படுகிறார்கள். இந்த அட்டவணையைப் பார்த்தால் உங்களுக்கு விளங்கும். 15-24 வயதுக்குட்பட்டவர்கள் அதிகம் எச்.ஐ.வி தொற்றுக்குள்ளாகிறார்கள்.

ஆண்களுடன் ஆண்கள் உறவுகொள்ளும் போது எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளாகிறார்கள். பொதுவாக 9 வயதுக்கும் 10 வயதுக்கும் உட்பட்டவர்கள் பாலியல் தொடர்பான ஆசைகள் வரலாம். இந்த காலகட்டத்தில் அதிக பாதிப்புக்குள்ளாகிறார்கள். பிள்ளைகள் பாடசாலைக்கு செல்கிறார்கள். பிரத்தியேக வகுப்புகளுக்கு செல்வதால் தாங்கள் இவர்களை எமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தால் இவர்களுக்கு கிடைக்கும் சந்தர்பத்தில் சுதந்திரமாக செயற்பட்டு எச்.ஐ.வி தொற்றுக்குள்ளாகிறார்கள்.

"முன்னைய காலங்களில் ஒரு ஆண், பெண் பிள்ளையை சந்தித்தால் விருப்பப்பட்டு முகவரியை வழங்கி தொடர்புகொள்ள பல நாட்கள் செல்லும். ஆனால் இன்றைய காலத்தில் கையடக்கத் தொலைபேசி, பேஸ்புக், வட்ஸ்அப் என பல புதிய முறைகளில் மிக விரைவில் மிக குறுகியகால இடைவெளிக்குள தொடர்பு கொண்டு தவறான முறையில் ஈடுபட்டு எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளாகிவிடுவார்கள்" என்கிறார் வைத்தியர் சிசிரலியனகே. எச்.ஐ.வி தொற்றில் இருந்து எவ்வாறு விடுபடலாம் என்பது பற்றி பிள்ளைகளுக்கு தெரியப்படுத்த வேண்டும். இவ்வாறு நாம் செயற்படாமல் விட்டுவிட்டால் இளைஞர் சமூகத்தைப் பாதுகாக்க முடியாமல் போய்விடும். இதனால் "வெள்ளம் வருமுன் அணைகட்ட வேண்டும்" என்ற மூத்தோரின் முதுமொழிக்கு ஏற்ப நாம் செயற்பட்டு நமது இளைஞர் சமூகத்தைக் காப்பாற்ற வேண்டும்.

எச்.ஐ.வி தொற்றின்போது தொண்டைவலி போன்ற சாதாரண அறிகுறிகளைக் காட்டும் வேறு எந்தவிதமான பாதிப்புக்களையும் ஏற்படுத்தாது. ஆனால் எயிட்ஸ் நோய்க்குள்ளான பிறகு நிமோனியா, டி.பி, புற்றுநோய், வயிற்றோட்டம் போன்ற நோய்க்குள்ளாகி தீவிரமான பாதிப்புக்குட்படுத்தப்பட்டு மரணம் மரணிக்க அதிக வாய்ப்புள்ளது. இப்போது எந்த நோயாளிகளாக இருந்தாலும் அவர்களுக்கு எச்.ஐ.வி பரிசோதனை செய்யுமாறு வைத்திய சாலைகளுக்கு கட்டளையிட்டுள்ளோம். பாலியல் உறவு மேற்கொள்ளும் போது (கொண்டம்) பாதுகாப்பு உறையைப் பயன்படுத்தினால் எச்.ஐ.வி தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம். இலங்கையைப் பொருத்தமட்டில் அதிகளவு எச்.ஐ.வி தொற்றினால் பாதிக்கப்பட்டவர்கள் வெளிநாடுகளுக்கு தொழில் நிமித்தம் சென்றவர்கள் என அறிக்கைகள் தெருவிக்கின்றன.

**எச்.ஐ.வி தொற்று ஒரு வைரசாகும் :**

- இந்த வைரசானது மனித உடலில் மாத்திரமே வாழ முடியும்.
- எச்.ஐ.வி வைரசானது மனித உடலில் சேர்வதால் மனிதன் பிறக்கும் போது இருந்த அனைத்து சக்திகளும் இழக்கப்பட்டு உடல் பலவீனமடையும்.
- பலவீனம் அடைந்த உடலில் பலவிதமான நோய்த்தொற்றுக்கள் இலகுவில் தொற்றிக்கொள்ள வாய்ப்பு அதிகம் உள்ளது.
- எயிட்ஸ் என்பது உடலில் இயல்புநிலை மாற்றமடைந்து உடல் பலவீனம் அடைந்திருப்பதால் உடலில் பலவிதமான நோய்கள் ஏற்படலாம்.

**எச்.ஐ.வி பரவும் முறை :**

- முறையற்ற உடல் உறவினால் ஏற்பட வாய்ப்புள்ளது.
- பெற்றோர்களால் குழந்தைகளுக்கு பரவுதல் (தாய் கருவுற்ற நிலையில், தாய் குழந்தைக்கு பாலூட்டுவதன் மூலம்)
- எச்.ஐ.வி தொற்றுக்குள்ளானவர்கள் குருதி வழங்குவதன் மூலம் பரவலாம்.

**எச்.ஐ.வி பரவாத நிலை**

- கைகுலுக்கல்
- அருகில் அமர்தல்
- நுளம்பு, ஈக்களால்
- ஒரே பீங்கான் கோப்பைகளைப் பாவித்தல்
- ஒரே நீர்த்தடாகத்தில் நீராடல்
- பொதுமலசல கூடங்களைப் பாவித்தல்

**எச்.ஐ.வி வராமல் பாதுகாத்தல்**

- முறையற்ற பாலியல் உறவை தவிர்த்தல்
- திருமணத்திற்கு முன் பாலியல் உறவில் ஈடுபடுவதைத் தவிர்த்தல்.
- ஒரு ஆணிடமோ அல்லது பெண்ணிடமோ மாத்திரம் நிரந்தரமாக பாலியல் உறவில் ஈடுபடுதல்.
- சரியான முறையில் (கொண்டம்) பாதுகாப்பு உறையை பாவித்தல்.

**எச்.ஐ.வி தொற்றை எவ்வாறு அறிந்து கொள்ளளாம் ?**

- எச்.ஐ.வி தொற்றை இரத்த பரிசோதனை மூலம் அறிந்துகொள்ளலாம்.
- உங்களுக்கு சந்தேகம் எழும் பட்சத்தில் பாலியல் பரிசோதனை தொடர்பாக பிரதேசத்தில் பெரிய வைத்தியசாலைக்குச் சென்று மிகவும் ரகசியமான முறையில் பரிசோதனை செய்து பார்க்கலாம்.
- எச்.ஐ.வி தொற்று இருக்குமானால் உடனடியாக மருந்தை எடுத்து சிகிச்சை பெற்றுக் கொள்ளுங்கள்.
- எச்.ஐ.வி தொற்று பற்றிய விபரத்தை இரகசியமாக பாதுகாத்துக் கொள்ளலாம்.

எச்.ஐ.வி தொற்று ஏற்பட்டுள்ளது என சந்தேகம் கொள்ளும் நபருக்கு எச்.ஐ.வி இரத்த பரிசோதனையோ அல்லது அதுபற்றிய விளக்கமோ இலவசமாக வழங்கப்பட்டு இரகசியம் பேணப்படும்.

உங்களின் பெயர், முகவரி, அறிவிக்கலாம். உங்களிடம் பிரத்தியேக இலக்கம் வழங்கப்படும். அவனோ, அவளோ எச்.ஐ.வி தொற்றுக்குள்ளானால் அவர்களுக்கு தேவையான சகல வசதிகளும் செய்து உபதேசம் வழங்கப்பட்டு அனைத்து விடயங்களும் இரகசியமாகப் பேணப்படும்.

அ. அருள் சஞ்ஜித்
தற்காலிக விரிவுரையாளர்,
கற்புலனும் தொழில்நுட்பத்துறையும்
கிழக்குப் பல்கலைக்கழகம்.

# Painting and Photograph - ஓவியமும் ஒளிப்படவியலும்

கலை உலகைப் பொறுத்தவரை ஒளிப்படவியலும், ஓவியமும் மிகவும் சக்திவாய்ந்த ஒன்றாகவும், மக்களின் அன்றாட வாழ்வியலுடன் இணைந்துபோகின்ற முக்கியமானதொன்றாகவும் விளங்கிவருகின்றன.




ஒரு காட்சியைப் ஒளிப்படக்கருவியால் பதியும் போது அதன் அனைத்து அம்சங்களும் ஒரே நேரத்தில் பதிவு செய்யப்பட்டுப் பின்னர் Develope பண்ணபபடுகின்றது. ஓவியமானது ஆரம்பத்தில் புலப்படாமலிருந்தாலும் பின்னர் வெளிச்சத்தில் படிப்படியாக Develope பண்ணப்படும். ஆனால் அது எப்போதும் புலப்படக்கூடியதாகவே இருக்கும்.

பல விடயங்கள் திருசியம் என்று சொல்லப்படுகின்ற ஒளிக்கற்றையில் ஒரே இடத்தினையே வகிக்கின்றது. ஏனெனில் நாம் அவற்றை நேரம் காலத்தை அனுபவரீதியாக உணரும்போது அவற்றிற்கிடையில் முக்கிய வேறுபாடுகள் இல்லை. எவ்வாறாயினும் உருவாக்கக் கட்டத்தில் சுவாரஸ்யமான வேறுபாடுகள் உள்ளன.

ஒளிப்படம் மூலம் பெறக்கூடிய அனைத்து விளைவினையும் ஓவியத்திலும் பெறலாம். இவ்வாறு ஓவியத்தில் பெற்றுக்கூடிய விளைவுகள் அனைத்தையும் புகைப்படவியலிலும் பெற்றுக்கொள்ளலாம்.

உதாரணமாக இங்கு பல்லின வெளிப்பாடுகள் ஒளிப்படவியலில் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் இதன்மூலம் உருவாக்கப்படும் தோற்றப்பாடு அதே வினைத்திறனுடன் ஓவியத்தினாலும் முன்வைக்க முடியும்.

ஓவியம் மற்றும் ஒளிப்படவியலுக்கும் இடையில் பல ஒருமைப்பாடுகள் காணப்படுகின்றன. முதலாவதாக ஒளிப்படவியலிலும் ஓவியத்திலும் ஒரு



விடயம் நடைபெறும்போது அதற்குரிய சரியான கணத்தில் அந்நிகழ்வைப் பதிவு செய்கின்றது.

ஒளிப்படவியலில் ஒரு நிகழ்வை உண்மையாக அப்படியே பதிவு செய் கின்றோம். இதேபோல்தான் ஓவியத்தில் உரிய • நிகழ்வில் இருந்தோ அல்லது வேறொரு ஒளிப்படத்திலிருந்தோ பதிவு செய்யக்கூடியதாக இருக்கின்றது. அவை இரண்டுமே அவற்றின் செயற்பாடுகளை திறமையாகக் கையாள்கின்றன. அதேபோல் தற்கால ஒளிப்படத்தில் அவை மிகவும் தெளிவாகவும் முக்கியமாகவும் வெளிப்படுத்தப் படுகின்றன. அவர்கள் எதை நினைக்கின்றார்களோ அவற்றை இவை இரண்டின் மூலமாகவே பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். அவை இரண்டின் மூலமும் சுருக்கியோ நேரடியாகவோ மறைமுகமாகவோ அல்லது அப்படியே பெற்றுக்கொள்ள முடியும். ஓவியத்திற்கும் ஒளிப்படவியலுக்கும் இடையிலான பிரதான வேறுபாடு என்னவெனில் ஒன்றின் விம்பத்தை ஓவியம் மறைமுகமாகவும், புகைப்படம் நேரடியாகவும் பெற்றுக்கொள்கின்றது. எவ்வாறாயினும் இதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏனெனில் நவீன காலத்தில் ஒளிப்படம், ஓவியம் ஆகியவற்றைப் புதியமுறையில் வடிவமைப்பதற்கு நவீன வழிகளைக் கண்டுள்ளார்கள்.

ஒளிப்படம் மற்றும் ஓவியங்களுக்கான அமர்வுகள் உயிருள்ள மாதிரிகளுக்கு (live models) மிகவும் கடினமானதாகும். வடிவமைப்புச் செயறபாடுகளில் கலைஞர்களால் அனுபவிக்கப்படும் கஷ்டங்களை குறிப்பிட்டுச் சொல்லத் தேவையில்லை (அதாவது உண்மையில் அவை அவ்வளவு கடினமானதல்ல). மிகச் சரியான - சரி நுட்பமான படங்களை பெறுவதற்கு ஒளிப்படக்காரருக்கு உதவும் முகமாக உருவாக்கப்படுகின்ற அமைப்புக்கள், மேடைகள் மற்றும் செயற்கை ஒளி அமைப்புக்கள் என்பன மிக நுண்மை ஆனவையாகவும் தனித்துவமானவையாகவும் காணப்படுகின்றன. ஓவியந் தீட்டும் கலைஞர் ஒருவரால் ஒரு படத்தை வரைய அதிக நேரம் செலவிடப் படுகின்றது. ஓவியங்கள், கட்டடங்கள், இயற்கைக் காட்சிகள், குடும்பம் ஆகிய எதுவாக இருந்தாலும் அவற்றை அப்படியே புகைப்படமும் ஓவியமும் உள்வாங்குகின்றது.

ஓவியமும் ஒளிப்படமும் ஒன்றையொன்று பகிர்ந்துகொள்கின்றன. அதாவது ஓவியத்தில் ஒளிப்படத்தின் தன்மைகள் இணைந்ததாகவும்,

ஒளிப்படத்தில் ஓவியத்தின் தன்மைகள் இணைந்ததாகவும் காணப்படும். ஆனால் தற்போது பெரும்பாலான ஓவியங்கள் டிஜிற்றல் தொழில்நுட்பத்துடன் செய்யப்படுகின்றன.





சில Studioகளும் கலைஞர்களும் அவர்களுடைய ஒளிப்படங்களை ஓவியம் மூலம் பழைய காலத்து வடிவமைப்புக்களில் செய்ய விரும்புகின்றார்கள். ஆனால் தற்காலத்தில் டிஜிற்றல் தொழில்நுட்பத்தின் மூலம் ஒளிப்படங்கள் ஓவியங்களையும் மெருகூட்டப்படுகின்றன. (touchup) அத்துடன் நவீன கலைஞர்களின் தேடல்களை வளப்படுத்துவதற்காக ஊடகங்களில் பல நிகழ்ச்சிகள் காண்பிக்கப்பட்டு வருகின்றன.

ஒளிப்படத்திலும் ஓவியத்திலும் பல ஒற்றுமையான விடயங்களை கொண்டுள்ளன. ஆனால் அவற்றைத்தனித்துவமான ஊடகமாக பேணுவதற்கு உதவி செய்கின்றன. அதே வேளையில் அவை வரலாற்றின்மூலம் ஒன்றை ஒன்று இணைத்துக்கொள்கின்றன.

தற்காலத்திலும் அவை இரண்டு ஊடகங்களும் வேறு ஊடகங்களில் வேறுபடுத்தப்படுவதுடன் பெறுமதியையும் குறைத்துக்காட்டுகின்றபோதும் அவை இரண்டும் நம்பமுடியாத அளவுக்கு முக்கியத்துவமானதாகக் கடந்த காலத்தில் விளங்கியதுடன், தற்காலத்திலும், எதிர்காலத்திலும் அவ்வாறே முக்கியத்துவமானதாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

**கைக்கூ**

**கைம்பெண் தலையில்**


**பூ விழுகிறது....**

**கணவன் படத்திலிருந்து.**

**பா.தா**

பீனிட்லஸ் விஜி

# பனைமரத் தோட்டத்து பச்சைக்கிளியே!



**பா**தைகள் மாறி பயணமும் மாறி பல்கலைக்கழகம் புகும் வெள்ளைப் புறாக் கூட்டங்கள். அவைகளைப் போல திரண்டன மாணவர் பட்டாளம். ஆறுதல் பாதையில் அரவணைக்கும் கூட்டங்களோடு ஆயிரம் கனவுகளை சுமந்தவளாய் காகிதத தோட்ட கப்பலிலே காரேன பெய்யும் மழைத்துளியின் நடுவே மெல்லிய குடையின் விழிம்புதனில் மழைநீர் பட்டுத் தெறிக்க மெல்லிய முகம் நனைய உள்ளே புகுந்தால் 'கயல்'. அரவணைத்த கூட்டம் ஆரோக்கியமாக வாழ உடைப்பழக்கி, ஊண் பழக்கி, கரம் கூப்பி வணங்கினாள். எதிரே 'கணணன்' இவனும் புதுமுகம் என்பதை உணராமல் முதலில் கூறிய வார்த்தை வணக்கம் சீனியர்..... காலிலே கரைந்த பாட்டா தோளிலே வரைபடம் இல்லா உடை. தலையோ உரித்த கோழிக்கூட்டம் போல இருபக்கம் பார்த்தான். நானும் உங்களைப் போலத்தான் என்றுகூறி நடையைக் கட்டினான்.

காலம் மெல்ல மெல்ல நகர்ந்தது. பனைமரத்து காற்றோடு தன் எதிர்கால நினைவுகளை கோபுரமாய் கட்டிய கயலுக்கு வாழ்க்கை தத்துவம் புரியவில்லை. எதிர்பார்த்த கனவுகள் வெறும் கற்பனையாகிறது. இதற்கு எதிர்மாறாக கண்ணன் கடைசி கோட்டாவில் தப்பித்தால் போதும் என வந்தவனுக்கு எதிர்பார்ப்பு ஏதுமில்லை. தன்னுடைய முதல் சந்திப்பில் பார்பட்ட கயலையே Friend ஆக்கிக் கொண்டான். பயணங்கள் நடந்தன. சீனியர் கூட்டங்களோ வெறும் கடலையோடு நிப்பாட்டாமல் இந்த Batchல் ஆவது நமக்குனு ஒருத்தியை தேடும் முனைப்போடு கடலைபோடும் கூட்டங்களாகவே திரிந்தன சிலது மாட்டிக்கொண்டது. சிலது காலை வாரியதுமுண்டு. நாலு மாதம் நகர்ந்த பின்னே தாடி வைத்த கூட்டங்களும் தாவனியுடன் கைக்கோர்த்த கூடடங்களும் காலப்போக்கில் தானாய் கலண்டு கொண்ட கூட்டங்களுமாய் ஆயிரம் ஜோடிகளுக்கு அத்திவாரம் போட்ட நாவல் மரம் ஆயிரம் ஜோடியை சேர்த்த பெருமையைப் பெற்றது என்றுதான் கூறவேண்டும். காலம் கடந்த அகதியைப் போல அடைக்கப்பட்ட சிறைகள் தானாக நகர்ந்தன. நாளை 'பங்சன்' என்ற அறைக்கூவல் மட்டுமே எட்டிப் பார்த்து இன்று Brake என்றது தான் படைக்கூட்டம் பதறியது.

புலி மானை வேட்டை ஆடுவது போல மான் கூட்டங்கள் இராசதுரை அரங்கில் அடைபட்டன. புலி கூட்டங்கள் சகலரும் உள்ளே நுழைந்தன. ஆரம்பத்தில் அகிம்சை வழியை கையாணடு Fun ஆன விளையாட்டுக்கள் அரங்கேறியது. அதனைத் தொடர்ந்து பலி கொடுக்கும் இராட்சத வளையாட்டும் அரங்கில் அடையாளம் செய்யப்பட்டது. ஒரே பபில்கம் ஓராயிரம் உதடுகளை ருசிபார்த்தது இறுதியில் ஆட்டம் பாட்டம் கொண்டாட்டமாக Brakeக்கு முற்றுப்புள்ளி வைத்தார்கள்.

மறுநாள் புத்தாடை உடுத்தி புதுவருடம் போல் எல்லோரும் மணமகள், மணமகன் போல காட்சியளித்து வாண வேடிக்கையில் நடுவே அன்றைய நாளும் ஆட்டம் பாட்டமாய் நகர்ந்தது. முதல் நாளிலிலே கயலுடன் கண்ணன் முதல் போட்டோவினை சரஸ்வதி சிலைக்கு அருகில் நின்று எடுத்தான். முதலில் மறுத்த கயல் இரண்டாவது தடவையில் இணைந்து கொண்டாள். நான்கு ஐந்து நாட்கள் கழிந்தன. விதவிதமாய் உடுத்திய ஆடைகள் விடைகொடுத்து எல்லோரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் போல காட்சியளித்தன. கயலைச் சுற்றி எப்போதும் நான்கு தோழிகள். மெல்ல நடை அளவான கதை தேவையின் பொருட்டு மட்டுமே வாயை திறந்து மூடும் ஒரு மௌனராகம் என்றுதான் கயலை கூறவேண்டும். இதற்கு எதிர்மறையானவன் கண்ணன். பல்கலைக்கழக சூழலிலுள்ள அனைவரிடமும் சகஜமாகப் பழகும் தன்மை கொண்டவன். வார்த்தைகள் தான் இவனுக்கு சாப்பாடு என்று வாழ்பவன். இப்படிப்பட்ட இரு துருவங்களும் நட்பு எனும் அதிகாரத்தில் சங்கமமாயிற்று. இருவருக்கும் இடையில் சின்ன சின்ன தட்டுமுட்டு அடிபாடுகளும் வாய்ப் பேச்சுக்களும் அவர்களது நட்பை நங்கூரமிட்டு காத்தது. ஆரம்பத்தில் அடிபாடுகள் இருந்தாலும் காலம் செல்லச் செல்ல சில மாற்றங்கள் இருவரிடமும் ஏற்பட்ட வண்ணமாய் தான் இருந்தன.

கண்ணன் கவிதை எழுதுவதில் கொஞ்சம் ஆர்வம் உள்ளவனாக இருந்தான். அதனை நிரூபிக்கும் பொருட்டு தன்னால் எழுதப்பட்ட நினைவு உருவங்களை தன் நண்பியிடம் காட்டி அடையாளப்படுத்த வேண்டுமெண்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தான். இதனைப் போலவே கயலும் இவனுடைய வெளிப்பாட்டிற்கு பக்கபலமாய் இருந்தாள். இப்படியான சந்தர்ப்பத்தில் கயலுக்கு Phone வருகிறது. போனில் "அம்மாக்கு Accident ஆகிவிட்டது. ICUல இருக்கிறா" என்று Phone வருகிறது விடிந்தால் கண்ணனின் படைப்பு வெளியீடு இனனொரு பக்கம் அம்மா.... என்ன செய்வது என்று தெரியாமல் முழித்தாள். காலை பஸ் ஏறிவிட்டதாக Phone செய்கிறாள் நேரமோ 8.00 மணி. ஆனால் கண்ணனின் வெளியீட்டுக்காக நிற்கிறார் 8.30 மணிக்கு அவனது படைப்பு வெளியீடானது அதிலே அவனுக்கு பாராட்டுக்கள் நிரம்பி வழிந்தன. தன்னோடு துணை நின்றவள் தன் துணைவி என்று வாயில் வந்த வார்த்தையை மளுப்பி தனது நண்பி என்று சமூகத்திற்கு அடையாளம்

காட்டினான். அவளது பெயரின் முன்னெழுத்தால் தான் 'கணையாழி' என்று கயலின் முன்னெழுத்தை சூட்டினேன் என்றான். மேடையில் இவளது போனிற்கு மேல் போன். "எங்கே அம்மா வாராய்? சாப்பிடியா?" என்று தகப்பன் நலம் விசாரித்த வண்ணமே இருந்தார். இவளும் பொய்களின் மேல் பொய் மூட்டையை சுமந்தால் நன்றியுரை முடிந்தது. கயல், கண்ணா! எனது அம்மா Accident பட்டு ICUல இருக்கிறா. நான் போகனும். நான் வாரான்... யார் கூட போற....ம்.... சரி பத்திரமா பாத்துப்போ. ஏதும் எண்டால் போன் பண்ணு" என்று கூறு என்று தலையை ஆட்டியவள் கண்ணில் சில தடுமாற்றத்துடன் பஸ்ஸில் பயணம் வைத்து பஸ் ஸ்டாண்டை அடைகிறாள். பஸ்சில் ஒரே முணுமுணுப்பு.... நண்பி கஸ்டப் படுராலே, சரி வீடுவரை வராட்டியும் டவுன் வரையாச்சும் வந்துவிடலாமே...."

"அம்மா Hospital-லு தெரிஞ்சும் அவண்ட படைப்புக்காக நான் நிண்டனே. அத அவன் யோசிச்சானா?" என்று நினைத்த வண்ணம் தோளில பேக்கை கொளுவிய வண்ணம் தனது யாழ்ப்பாண பஸ்சில் ஏறியவாறு "உனக்கு தேவடி. பிரண்டு பிரண்டுனு திரிஞ்சியே. உனக்கு நல்லா தேவடி... கண்டறியாத பிரண்ட்ஸிப்பு....". "அண்ணே டிக்கட் அண்ணே.... அப்ப எடுத்த டிக்கட்டுல யார் போறது...? எண்ட மத்த Girl friend எல்லாம் Sviasலதான் இருக்காங்க" என்கிறான் கண்ணன். கயல் பார்க்கிறாள் கண்ணன் இரண்டு டிககட்டை காட்டுகிறான். "உன்ன...." எண்டு கொண்டுவந்த Bag ஐ அவனது தலையில் போடுகிறாள். "என்னடா சொன்ன.... தனியா... போன்னு சொன்னியே... பிறகு ஏண்டா.... வந்த.. போவன் சனியனே... நான் எப்படி போறன்னு பாக்க வந்தியா...."

"அம்மாலாச்சி தாயே கத்தாத எல்லோரும் நம்மளதான் பாக்கி ராங்க. சீற்றில இரு" என்றவுடன், கயல் சுத்தி பார்த்துவிட்டு தலையை மெதுவாக குனிகிறாள். வெக்கப்பட்டு சீற்றில இருக்கிறாள். அவன் பக்கம் திரும்பாமல் எதிர்பக்கம் பார்க்கிறாள்... "ஏண்டா வந்த அங்க இருந்து கடல போட்டு இருக்கலாம் தானே. ஏன் வார போ.... இவருக்காக நாங்க பகல் இரவு பாக்காம வேலை பார்த்து சொந்த அம்மாவுக்கு Accident-னு கேள்விப்பட்டதும் போகாம, நம்மல நம்பி ஒரு நாயி இருக்கேனு நிண்டா போனு சொல்லிவியாடா.... சொல்லுவியா...". "அண்ணே...குண்டு கடல ஒரு பெக்கட் பார்சல். அண்ணே அப்படியே மிளகாய் கெஞ்சமும் வெங்காயமும், தூள் லைட்டா காட்டி Mix பண்ணி தாங்க அண்ணே."

"வாய் நம நமக்குது. நான் என்ன கதைக்கிறேன். என்ன பாக்க லூசு மாதிரி தெரியுதாடா?". "ம் டெபினல்டி...." கடலையை எடுத்து சாப்பிட்டான். "என்ன டேஸ்டு மெடம் கடலை. கடலை....". "அ....நீ தானே நல்லா கடல போடுவ எனக்கு வேணாம்..." என்று திரும்பியிருந்து வாயில் ஏதோ முணுமுணுக்கிறாள். "என்ன டேஸ்டு" என வாயை இழுக்கிறான்.

திடீர் என்று திரும்பியவாறு சடாரென அவன் கன்னத்தில் அறைந்து விட்டு "தனியா திண்ணுவியா நாயே" என பேசிவிட்டு பரித்து கயல் மளமளவென சாப்பிடுகிறாள். இதனைப் பார்த்த கண்ணன் "அண்ணே இன்னொரு குண்டு கடலை பார்சல். அப்படியே தண்ணிபோத்தல் ஒன்று. இந்தாங்க அண்ணே" கணக்கு முடிக்கிறான். கண்ணன் போகும் வழியில் கண்டதையும் வாங்கிக் கொடுக்கிறான். எல்லாத்தையும் திண்டு கடைசியாக வாமிட்டில் முடிக்கிறாள் கயல். உடனே தனது கர்சிப்பால் அவளது முகத்தை வாங்கிய தண்ணியால் துடைத்து சைட்சீட்டில் சாயும்படி செய்கிறான். வாகனம் ஆடி அசைந்து கண்ணனின் ஊரை கடந்து, கயலின் ஊரை வாகனம் தொட்டது. கயலின் அப்பா ஆட்டோவில் தன் மகளை கூட்டிப் போக வந்திருக்கார். அவளுடன் கண்ணனும் வந்திருப்பதைப் பார்த்தார். "ஆ... வாங்க தம்பி. அம்மாக்கு ஒன்றுமில்லடா. சும்மா லேசான அடிதான். அப்பறம், தம்பி எவடம் ஊரு?" என மெதுவாய் விசாரித்த வண்ணம் வீட்டை வந்தடைந்தார். வீடு சென்றது பாச மழையில் பொழிந்து நாட்டரிசி சாப்பாட்டுடன் விருந்தளிக்கப்பட்டு மறுநாள் 4 மணி பஸ்சில் அவனது வீட்டிற்குச் சென்றான்.

பின்னர் நிலைமை 2 நாளில் சரியாக, முதலில் கயல் வருகை தர அதனைத் தொடர்ந்து கண்ணனும் இணைந்து கொண்டான். எல்லாக் காதுகளிலும் கண்ணன் கயல் கதைதான் கிசுகிசுவென தீயாய் பரவியது. கண்ணனும் கயலும் காதலிக்கிறார்கள் என்று Svias முழுக்க இதுதான் பேச்சி. ஆனால் சம்பந்தப்பட்ட இருவரும் இதனைப் பொருட்படுத்தாமல் வழமைபோல இருந்தனர். காலமும் மெல்ல நகர்ந்து ஓடின. கயல் "கண்ணா நீ செய்ய வேண்டிய கடமை எவ்வளவோ உள்ளது. ஆனால் விளையாட்டுப் பிள்ளைப்போல இருக்காதே". "ஹலோ மெடம், நாங்க விளாட்டா இருந்தாலும் காரியாலயத்தில் தலையமாதிரி அலாட்டா இருப்போம் புள்ள மெடம்" என்று நெற்றியில் தட்டிவிட்டு தன் நண்பர்கள் பட்டாளத்துடன் விடை பெற்றான். கயல் இருக்குமிடம் நோக்கி அவளது நண்பிகள் வருகிறார்கள். "கண்ணனுடைய பேச்சுவழக்கு சரியில்லை கயல். போரவள் வாரவள் எல்லாத்தையும் Wife என்கிறான். அவண்ட பிரண்சிப்பை குறைத்துக்கொள்ளு. அவனுக்கும் மாயாவிற்கும் அதுவாமுனு கதைக்கிறாங்க, நீ கொஞ்சம் விளத்தி நில்லு" என்று ஒவ்வருத்தரும் ஒவ்வொரு கதையை கொலுத்திப் போடுகிறார்கள். எல்லாவற்றையும் இந்தக் காதால் வாங்கி மத்த காதால் விடுவது போல கணக்கெடுக்காமல் இருந்தாள் கயல். தண்ட நண்பன் இப்படி செய்யமாட்டான் என நம்பினாள். மறுநாள் கண்ணன் "கயல் உன்னிடம் ஒன்று சொல்லனும். நான் வந்து... வந்து... இல்ல...". "சொல்லுடா". "இல்லடீ மாயா கூட நல்லா பழகினன். இப்ப திடீர் என அவளுக்கும் எனக்கும் கருத்து முரண்பாடாச்சி... அதுதான் அவள விட்டுடலாமுனு தோனுச்சி. அதுதான் உன்னிடம் சொல்லனுமுனு சொல்லுறன் டாலிங்" என்று வெளியேறுகிறான். கண்ணன் அப்போதுதான் கயலுக்கு தன் நண்பிகள் கூறியது உண்மை போல் என நினைத்துக்

கொள்கிறாள். தோழிகள் உள்ளே நுழைந்து "என்னவாம் உண்ட அருமை நண்பன். நான் சொல்லுறத சொல்லிட்டன். அப்புறம் நீயாச்சும் அவனாச்சும்" என்று கூற, இதுவரை நம்பிய கயல் கண்ணன் மீது சற்று தயக்கம் காட்டத் தொடங்குகிறாள். நண்பர்கள் பட்டாளத்துடன் இருந்த கண்ணன் காதுக்கு "மச்சான் நீ கயலை விரும்புகிறாய்தானடா? பார்டி எப்படா?" என்கிறார்கள். "அப்படியெல்லாம் ஒன்றுமில்லடா. உங்களுக்குச் சொல்லாமலாடா" என்று கூறி கயலைப் பார்க்கிறான்.

கன்னக் குழியில் அருகே சுருண்ட மயிர் மெல்லிய காற்றில் நடனம் புரிய சற்றே தடுமாறிப் போகிறான். "என்ன புதுப் பழக்கம் கண்ணா" என அவனது மனதை தட்டிக் கொள்கிறான். "கண்ணா யார் காதுல பூ வைக்கிறாய்... உனக்காக நோட்ஸ் எழுதிறாள், உனக்காக அசைமென்ட் போடுறாள். உனக்காக Sign வைக்கச் சொல்லுறாள், இவ்வளவுக்கும் அவள் வேற டிப்பாட்மென்ட். அதுமட்டுமா, வருங்கால மாமியாரிடம் மணிக்கணக்கா கதைக்கிறாள். உனக்காக எதுவும் செய்யிறாள் அவள மிஸ் பன்னிடாத மச்சான்" என்று ஒரு குண்டைப் போட்டுவிட்டு எல்லோரும் நகர்ந்து கொள்கின்றனர்.

தனிமையில் இருந்தவன் Canteen-ல் உள்ள டிவியின் சனல்கள் அழும் அளவிற்கு காதல் பாடல்களில் பயணமானது. அதுதான் அவனுடைய பயணம் தடுமாற்றமான யோசனை அவனை நிலைகுலைய வைத்துக் கொண்டே இருந்து 'உன்னுடையதுதான்' என்று அவனது மனசாட்சி சொன்னாலும், 'நண்பன் என்று இருக்கிற அவளுக்கு இது நீ செய்யும் துரோகம்' என்று இன்னொரு பக்கம் உருத்தியது. இறுதியில் காலை கதிரவன கதை கூறி அவனை எழுப்பியது மட்டும்தான் உண்மை. விடிந்ததும் தெரியவில்லை. இந்த மாது மயக்கம் ஆயிரம் கேள்விகள் அவன் மனதை வண்டு போல குடைந்தன. பார்க்கும் முகம் எல்லாம் அவள் தானே. ஐயோ காக்கும் கடவுளே! உனக்கு கருணை இல்லையா! நேற்று வரை கேட்காத கேள்வி ஒன்று என் நெஞ்சறையை கீற்றுப் போல் பதம் பார்க்கிறதே...? பாவிமான தேசத்து பனைமரக் கூட்டங்களே! என் பதர் உயிர் கதிராகும் நன்னாள் என்னாளோ. கண்மூடி திறந்தான். பார்த்தால் முன்னே கயல் விழி கதை கூற ஆரம்பித்து வளவள கதையால் வார்ததை பேசிய கண்ணன் அவ் ஒரு விழி பதிவால் ஊமையானான். நேற்றுவரை பதியப்படாத இவனது இருப்பு கயலுக்கு ஒரு மாறுபாட்டைக் காட்டியது. இவளும் மெதுவாக கதைக்கிறான். "என்றுமே மாறாத ஒன்று என்றால் அது மாற்றம் தானே கயல்" என்கிறான். 'ஏன் இப்படி பேசுகிறான். யாரையோ பார்கிறானோ. அதுதான் நம்மிடமே அளவாக கதைக்கிறான்' என நினைக்கிறாள். ஆனால் தன்னைத்தான் பார்கிறான் என்பதை அறியாமல் நிற்கிறது இந்த பதர். 'நான் விலத்தியிருப்பது தான் நல்லது' என்று நினைத்துக் கொண்டு, இனி நானும் கொஞ்சம் தள்ளியிருப்பது தான் நல்லது' என்று

Hostel நோக்கி பயணிக்கிறாள். அவளுடைய தோழியில் ஒருத்தி "என்னடி கண்ணனை ok சொல்லிட்டியா? எல்லோருமே ஆரவாரமாய் இருக்கிறானுகள். அங்க ஒரே அபிசேகம் தான் கண்ணனுக்கு". மெல்லிய புன்னகையுடன் தன்னை சுதாகரித்தவளாக தோழிக்கு காட்டிக்கொள்ளாமல் நகர்கிறாள். பாதை மாறி பயணம் மாறி படிகளில் நடக்கிறாள். சற்றே தடுமாற, தாங்கிப் பிடிக்கிறாள் இன்னொரு தோழி. "பார்த்து கயல் படிகளில் தவறினால் தாங்குவதற்கு நான் இருக்கின்றேன். வாழ்க்கையில் தவறிவிடாதே... நீ கண்ணனை விரும்புதாக Campus கதை கூறுகிறது. அவன் பார்வைக்கு வேண்டுமானால் நல்லவனைப் போல் இருக்கலாம். ஆனால் அவன் நல்லவனல்ல" என்றவுடன், இன்னொரு தோழி "என்னடி கண்ணனைப் பத்தி கதைக்கிறீங்க. ஏற்கனவே மாயா கூட சுத்தினான். கடசில அவளையும் வெட்டிவிட்டுட்டான். அவன் உண்மையில் கண்ணன் தான்". படியில் தாங்கியவள் "இப்போது நீயும் அவன் வலையில் மாட்டிக் கொண்டாய்" படி இறங்கியவள் படியிலே இருந்து கொண்டாள். இருகொல்லி உயிராக அவனை பற்றி யோசிக்கிறாள். தன் தாய்க்காக தன்னுடன் தன் வீடுவரை வந்தவன் வீட்டில் உள்ளவரிடமும் நல்ல அபிப்பிரயாயம் இருந்தாலும் ஆயிரம் பெண்களுடன் கதைப்பதில் அவனும் இன்னொரு கண்ணனே! என்ற கேள்வி இவளை பதம் பார்த்தது. ஆயிரம் சிந்தனையில் லயித்துக் கொண்டிருந்தவளுக்கு தீடீர் பரிசாக யாரோ கதைப்பதும் போல கேட்டது. கண்ணனா, அவனே சரியான பொம்பல பொறுக்கி. அவன் கயல விரும்புறானாம். கடவுளே! அந்த பிள்ளையை காப்பாத்தப்பா... கயல் எதை கேட்டாலும் எல்லாக் கேள்விக் கணைகளுடன் மட்டுமே நின்று விடுகிறது. கயல் எங்கிருந்தாலும் தன் நண்பன் என்ற அடை மொழியோடு கூவி வந்த குயில் இவ்வளவு வார்த்தையை கேட்டும் அமைதியாய் இருப்பதுதான் ஏனோ...

கண்ணனுக்கு 'இவள் ஏனோ நம்மை விட்டு சற்று விலத்தி நிற்கிறாள் போல, ஒருவேளை என்னை அவளிற்கு பிடிக்கவில்லைப் போல, நான் தான் அவசரப்பட்டு விட்டேனோ? இல்லை அப்படி இருப்பதற்கு வாய்ப்பேயில்லை. எனக்காக அவள் காட்டிய அன்பை என் ஆயுள் முடியும் வரை வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறா. சரி எதுவாக இருந்தாலும் நாளை அவளது பிறந்தநாள் அன்று அவளை புரபோஸ் பண்ணுவோம்' என்று நினைத்தவன் அவளுக்காக Gift வாங்குறான். முதல் முதலில் ஒரு பெண்ணுக்காக Gift கொடுக்கிறான் என்றால் அது அவளிற்கு தான் என்பதை மனதில் வைத்தவனாய் சரியாய் 11.59க்கு Call செய்கிறான். முதலில் Wishing. அவன் தான் வாழ்த்து தெரிவித்தவன். "வானத்தைப் பார்" என்று வானவேடிக்கைக் காட்டுகிறாள். தனது பரிசை கொடுக்கிறான். "நாளைக்கு விடிய வா. உன்னை சந்திக்கனும். கிளாஸ் போகாதே" என்று கதைகூறி விடைப் பெறுகிறான். கதைக்கும் போது ஆசையாய்

இருந்தாலும் அவனைப் பற்றிய சிந்தனைகள் அவளைப் பதம் பார்த்தது. இவன் தான் என்று இருந்தவளுக்கு இவனா? என்பது போல இருந்தது.

காலை உதயமாகியது. முதல் வேலையாய் கண்ணன் தன் கயலை எங்கு கண்டானோ அதே வீணை அறையில் நின்றான். அவள் தன்னுடைய வார்த்தைக்கு என்ன கூறப் போகிறாளோ... என்ற பதட்டம் இருக்கிறது. இன்றுவரை கடவுளை கூட வெறுத்தவன் முதல்முதல் அவளிற்காக சரணடைகிறான். பாரடா எதற்காகவும் தன்னை மாற்றாதவன் முதல்முதல் ஒரு பெண்ணுக்காக தன்னை மாற்றிக் கொள்கிறானே என்று சற்றே புன்னகைக் கொள்கிறான் கடவுள். நேரம் சுழன்று மழையாகியது கயல் நேர்முகப் பரீட்சைக்காக வருகிறாள். சில தடுமாற்றத்துடன் "தன் பாதையை உருவாக்க துணைவியாக வருவாயா...? எப்போதோ சந்தித்தோம். சிந்திப்பதற்குள் சினேகிதரானோம். இன்ப துன்பங்களைப் பகிர்ந்தோம். உன்னுடைய அன்பு என் கல்லறைப் பயணம் மட்டும் தேவை என நான் நம்புகிறேன். புதிதாக இணையப்போகும் காதல் பறவையாய் வாழ நான் விரும்பவில்லை. என்னை புரிந்தவளுடன் என் மிச்ச காலத்தை வாழத் துடிக்கிறேன். கயலே உன் கயல்விழிப் பார்வையால் என்னையும் ஏற்றுக் கொள்ளன் Please" என முட்டுக்காளில் நிற்கிறான்.

சட்டென உதறியவளாய் "உன்னை என்னுடைய நண்பனாய் தான் பார்த்தேன். என் வாழ்க்கையை தெரிவு செய்ய என் தாய் தந்தையர் இருககிறார்கள். அவர்கள் பார்ப்பார்கள்... உனக்கு தான் தகப்பன் இல்லையே. அதுதான் தடுமாறுகிறாய். முதலில் உன் நிலையை உயர்த்திக் கொள், பிறகு உன்னை நேசிப்பவரைக் கண்டுகொள்" வார்த்தை முட்டிய கண்ணனின் கண் ஏனோ கலங்கியது. "உன் ஒவ்வொரு கேள்விகளும் என்னை சுடுகிறது கயல்" என்கிறான். அவளோ... அவனை பார்க்காமல் நெடுதூரம் நடந்துவிட்டாள். உள்ளே அழுகிறது. கண்ணா உன் நெஞ்சம் பாசறை! குமுறும் சத்தம் கேட்கவில்லையா! ஒன்றாய் படித்தவள் உன் அருமை தெரிந்தவளுக்கு உன் வறுமை மட்டுமே அடையாளப் புள்ளியாய் இருக்கிறதே! கண்ணன் கயலிடம் செல்கிறான். "கயல் உன்னுடைய கேள்விகள் எல்லாவற்றிக்கும் விடையைக் கொண்டு வந்தால் என்னை நீ ஏற்றுக்கொள்வாயா" என்று கேட்க, மௌனமாக அவள் செல்கிறாள். மௌனம் பயணத்தை சம்மதம் என எடுத்துக் கொள்கிறேன் கயல். இவனும் தனது கேள்விக்கான பதிலைத்தேடி இரவோடு இரவுப் பயணமாய் அவள் வீடு நோக்கி நகர்கிறான். எப்போதுமே சிரித்த முகம் முதல் முதலாய் தன்னால் வாடியது என்றிருந்தால் கயல். யாருக்காகவும் மாறாத அவன் தனக்காக மாறினானே என்று சிந்தித்துக் கொண்ட அவளுக்கு போன் வருகிறது. போனில் அவளது அம்மா "என்னடி கயல, கண்ணன் வீட்ட வந்து கயல எனக்கு கட்டித் தாரிங்களா? அவள எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு. நீங்க ஓம் என்றால் நானும் அம்மாவிடம் சொல்லுறன் உங்கட

வருப்பத்தோடதான் நான் கட்டுவதாய் இருந்தால் கட்டுறன். இல்லாட்டி வேணாம் என்று கூறுரான்டி. என்ன நடக்குது? முதல்ல படிங்க புரியுதா? உங்கள செல்லமா வளத்தது தப்பாப்போச்சி. படிக்க கஸ்டமுணா வாங்க புரியுதா..." என்று போனை Cut பண்ணுகிறா. உடனே கண்ணனுக்கு போன் செய்கிறாள். "ஏன் இப்படி வேலை பாக்கிறாய். எனக்கு உன்னை பிடிக்கவில்லை. சொன்னால் புரிந்துகொள். இனிமேல் என்னுடன் கதைப்பது கூட வேண்டாம்....". "கயல்... கயல் நான் உன்னுடன் கதைக்க வேண்டும்... சரி அப்படி என்ன தவறு செய்தேன் என்று கூறு. நானாய் விலகிக் கொள்கின்றேன். நீ தான் கூறினாய் என்னுடைய வாழ்க்கையை முடிவு பண்ண அம்மா அப்பா இருக்காங்க என்று. அதுதான் சென்றேன். தப்பா....? எனக்கு சரினு பட்டத செய்வேன் அவ்வளவுதான்". "பிளிஸ் கண்ணா, வேண்டாம் கண்ணா, உன்னையே எனக்கு பிடிக்கல. உண்ட நினைவுகள் ஒன்றுமே என்னிடம் இல்லை. பிளிஸ் என்னைத் தொந்தரவு செய்யாதே" என்று கூறி போனை கட் செய்கிறாள். கண்ணனும் "கயல் கயல்" என்பவனாய் போனைத் தூக்கி அடிக்கின்றான். விம்மி கதைத்த கயலோ கண்ணீர் துளிகள் சொரிந்தவண்ணம் "உன்னை ஏண்டா சந்தித்தேன்" என்று கண்ணை கசக்கினாள். அவளுடைய தோழியரில் ஒருவர் "இப்போதாவது புரிந்து கொண்டாயே" எனக் கூற இன்னொருத்தி, "சும்மா இருடி. நீ சும்மா இரு. பட்டாத்தான் புத்தி வருகுது" என்று கூறி அவரவர் வேலையைப் பார்க்கிறார்கள். அவனை அவ்வளவு தூரம் நேசித்த பெண் மனம் அவள் இடத்தில் இன்னொருத்தி என்றவுடன் உடைந்து கொள்கிறாளே. எல்லாவற்றையும் பகிர்ந்து கொண்ட கயலுக்கு அவனிடம் உண்மையை கேட்பதில் மட்டும் தயக்கம் காட்டுவது தான் ஏனோ அவனும் பார்க்குமிடமெல்லாம் 'கயல் கயல்' என்று பித்துப் பிடித்தவன் போல அலைய ஆரம்பித்தான். அவளும் அவனை காலப்போக்கில வெறுத்தே ஒதுக்கிவிட்டாள். தன் நிலை தெரியாமல் தடுமாறினான். கண்ணன் தன்னைத்தானே மீட்டுப்பார்த்தான். தான் கடந்துவந்த பாதையில் யாருக்காகவும் - இவ்வளவு இறங்கிப்போனது கிடையாது. விளையாட்டா இருந்தாலும் தனது காரியத்தில் கண்ணாய் இருப்பாய் என்பாயே. அந்த கண்ணா எங்கேடா.... இப்ப ஒன்றுமே இல்லாமல் மொத்தமாய் மாறி இருக்கிறாயே! விளங்கிக் கொள். யாரை நீ வேண்டும் என்று ஆசைப்பட்டு அவளுக்காக நீ இறங்கிய எல்லையில் நீ இறந்து விட்டாய். இனியும் வாடாதே. எஞ்சியிருப்பது உன் உடல் மட்டும்தான் எல்லோருக்கும் ஒரு திருப்புமுனை வரும் அப்போது உன்னை நீ அறிந்து கொள்வாய். அடி - பனைமரத் தோட்டத்து பச்சைக்கிளியே! என் பதிலுக்கு ஏனடி பறையடித்துச் சென்றாய். இங்கு பாவி மனது குமுறுதடி. கண்ணாடித் தோட்டத்து காகித மலரே - உன் முன்னாடி உள்ள ஆயிரம் மலர்களிற்காய் காகிதம் அனுப்பினேன் இல்லையே! உன் ஒருத்தி உயிரை கேட்க வந்தேன். படிந்த பாரிச்செடியே, நீ மருந்தாய் இல்லாமல் உயிர் கொல்லும பருந்தாய் மாறியதுதான் ஏனோ?


"காலங்கடந்த சுவராய் வெள்ளையடிக்கும் என் மனதிற்கு உண்மையடிக்க மறந்தது தான் ஏனோ? ஆயிரம் கேள்விகளை பகிர்ந்து உனக்கு என்னைப் புரிந்துகொள்ள முடியவில்லையே... பார்த்துப் பழகிய முகம். அதுதான் இன்னும் ஜீவன் போக மறுக்குதடி. அடையப்படாத ஆசைக்காய் இன்னும் உயிர் கட்டை எரிய மறுக்குதடி" என்று தன்னைத் தானே வருத்தியவனாய் மனதிற்குள் குமுறி நாவல் மரத்தடியில் தஞ்சம் அடைந்தான். அப்போது ஒரு நிகழ்வு வண்ணாத்திப்பூச்சிக் கூட்டமாய் பறந்தது. அதில் ஒன்று மட்டும் கீழே வீழ்ந்தது. உடனே இரண்டு வண்ணாத்திப் பூச்சிகள் உதவியது. இருந்தும் பயனில். அவையும் பறந்தது. தனித்துப் போனது வண்ணத்துப்பூச்சி. மெதுமெதுவாக நகர்ந்தது. கனதூரம் பறந்திருக்கும் போல களைப்பால் வீழ்ந்துவிட்டது. அருகிலுள்ள பூமரத்தில் உள்ள பூவை ருசி பார்த்து மீண்டும் அதே வேகத்துடன் பறந்தது. தனது நிலையும் இப்படித்தானே என கண்ணனுக்கு புத்தியில் ஏறியது. வாழ்க்கை -யில் தத்துவம் புரிந்தவனாய் எல்லோரிடமும் பழையபடி பழகினான். பூட்டிவைத்த பரம ரகசியங்கள் கொஞ்சம் கொஞ்சமாய் வெளிப்பட ஆரம்பித்தது. நீ மாயாவை ஏமாற்றிவிட்டதனால் தான் அவள் உன்னை விட்டு விலத்திக் கொண்டாள் என்ற ஒரு பதில், நீ கயலின் வீட்டில் சாப்பிட்டுவிட்டு சண்டை போட்டதாகவும், அவளுக்கு விருப்பமே இல்லையாம். நீதான் லவ் பண்ணு லவ் பண்ணு என்று கட்டாயம் செய்தாயாமே என்று எல்லாமே சேர்ந்த ஒரு வினாவாக விடை வந்தது. கண்ணனுக்கு பல்கலைக்கழக வாசலும் இன்றோ நாளையோ இவர்களிற்கு விடை தருவோம் என்றிருந்தது. கண்ணன் "கயல் கடைசி சந்திப்பு உன்னோடு கதைக்க வேண்டும் வா...." என்று குறுஞ்செய்தியை அனுப்ப அவளும் தன் பரிபாரத்துடன் வருகிறாள். அவளைப் பார்த்தாலே வாயை குழையும் கண்ணன் இல்லை. இவன் பேசசிலே நிதானம், "உன்னோடு இரு வருடம் பழகிய பழக்கத்தை வைத்து சில கதைகள் கதைக்கலாம் என நினைக்கிறேன். நீ ஏன் வெறுத்தாய், எதற்கு வெறுத்தாய் எனத் தெரியாமல் இருந்தது. இப்போது முழு விடயமும் தெரிந்தது. உன்னையே உன்னால் புரிந்துகொள்ள முடியாத உன்னால் கடைசிவரை முடிவுகளையும் முன்மொழிய முடியாது. ஒன்று சொல்புத்தி இருக்கணும். இல்லை சுயபுத்தி இருக்கணும். இரண்டும் இல்லாட்டி கஷ்டம்தான். ஒரு பெண்ணை நம்பின அளவுக்கு நீ என்னை ஏன்டி நம்பவில்லை என்பது தான் வருத்தம். எனக்கு Ok. இறுதியில் 'பெண்புத்தி பின்புத்தி' என்று நிரூபித்துவிட்டாயே. உன் கூட இருப்பவர் களை நம்பிய அளவு நீ என்னை நம்பவில்லையே. சரி எல்லாத்தையும் விடு. நீ கேட்ட லொஜிக் இல்லாத கேள்விகளுக்கு நான் விடையைத் தேடிவிட்டேன். என்னை நானும் அடையாளம் காட்டிவிட்டேன். இப்போ அடையாளம் காட்ட அத்திவாரமாய் இருந்த உன்னை விட்டுப் போகின்றேன். நமக்கு பிடித்தவர்களை எப்போதுமே நம் கூடவே வைத்துக்கொள்ள கற்றுக்கொள் கயல். இல்லாவிட்டால் கடைசிவரை முடிவுகள் எனும்

பாதையில் முற்றுப்புள்ளி வைக்க இடம் இல்லாமல் போய்விடும். ஏதோ கூற்றுபோல தோனும் பட்ட அறிவு. சரி வாரன். கூட வந்த நண்பர்களைப் பார்த்து அருமை நண்பர்களே! இதில் யாருக்கேனும் என்னால் பழிவந்தது கிடையாது. இந்த முகங்களை என்னுடைய மீதிக் காலத்தில் எப்போதுமே பார்க்க ஆசைப்படவில்லை. எங்கு பார்த்தாலும் எம்மை அடையாளம் காட்ட நாலுபேர் வேணும். இல்லையே கடைசிக்காலத்தில் உங்கள் நாலு பேருக்கும் நீங்கள் நால்வருமே உறுதியாக இருக்கவேண்டிவரும்". சற்று நகர்ந்தவன் "இந்தா கயல் உன்னுடைய முதல் பரிசு பலுாடா. என்னிடம் பொக்கிஷமாய் இருந்தது போதும். உன்னையே திருப்பித்தந்த எனக்கு உன்னுடைய நினைவைத் தருவது கஸ்டமா" என்று அவளிடம் கொடுத்து விட்டு விடைபெறுகிறான்.

அவள் கொடுத்து இரண்டு வருடமாய் பெக்கட் உடைக்காமல் ஒரு டின்னில் வைத்திருந்தான். அதே நேரம் மாயாவும் அவளை தாண்டி செல்கிறாள். அவளிடம் கேட்கணும் போல தோனியது கயலிற்கு, அவளிடம் கதைக்கிறாள். "இருவருக்கும் கருத்து முரண்பாடு மட்டும் தான். வேறு ஒன்றுமில்லை. அதனால் பிரிந்து கொண்டோம். அவ்வளவு தான்" என்று முற்றுப்புள்ளி வைக்கிறாள். இதுவரை இருந்த வேகம் உடைந்து மனதால் நொந்து கொள்கிறாள். கண்ணை கட்டுப்படுத்து கிறாள். அது அத்துமீறிய வெள்ளமாய் உடைந்து ஓடுகிறது. எல்லா விடயத்தையும் நேருக்குநேர் கேட்டவள் இந்த விடயத்தில் மட்டும் ஏனோ சறுக்கிவிட்டாள். 'தனக்குத்தானே புழுவாய் துடிதுடித்தால் எப்போதும் இல்லாத அளவிற்கு யாரும் காட்டாத அளவிற்கு நான் தானே என்று சுத்தி வந்தவனுக்கு நான் காட்டிய வரம் இதுதானே. இன்றைக்கு என்னையே நிலைகுலைய வைத்துவிட்டதே. ஆயிரம் கேள்விகளை கேட்டேனே, இனறு ஒரு கேள்வியை விட்டதால் என் ஆயுளே முடிந்துவிட்டதே' என்று தனக்குத்தானே புழுவாய் துடித்தாள். யாரிடம் தன் இன்ப துன்பத்தைப் பகிர்ந்து கொள்வது எனத் தெரியாமல் திகைத்தாள். தடுமாறி மனம் மாறி தன் நிலையைக் கூற அவள் சென்றபோது கனவாய் சூரியனும் கரைந்துவிட்டான். பல்கலைக்கழக பயணமும் முடிந்தது. அவனும் தன் பயணப் பாதையை முடித்துக்கொண்டான். காத்திருந்தாள் கயல். எப்படியாவது தன்னை முதல் முதலில் சந்தித்த இடத்திற்கு வருவான் தன்னை மன்னித்துக் கொள்வான். அவனுக்கு நான் என்னையே கொடுக்கப் போகின்றேன். அவன் என்னை மன்னிப்பான் என வீணை வகுப்பிற்கு சென்று காலையிலிருந்து மாலைவரை இருந்தாள். கண்ணனோ வரவில்லை. சோகம் தனை தீர்க்கத் தன் வீணையின் அருகே போய் அமர்ந்தாள். அவனது வீணையின் கீழ் ஒரு காகிதம் பார்த்தாள். கண்ணனின் கையொப்பம் ஒன்றுமே எழுதாத வெள்ளைத் தாளில் அவனுடைய கையொப்பம் அதை ஒட்டிய அடிக்குறிப்பும். "எல்லோருக்கும் எல்லாமே ஆசைதான். அது சிலரை மட்டுமே சந்தோசப்படுத்தும். இன்னும் சிலரை

காயப்படுத்தும். இவ் மடல உன் கையில் கிடைக்கும் போது என்னுடல் கரையில் மிதக்கும்" என்று கதை கூற, நான் கதாநாயகன் இல்லையே. உனக்கு வில்லன்தானே நான். கயல் அன்பை தருபவர்களை அரவணைக்கக் கற்றுக்கொள். இல்லையேல் வாழ்க்கையில் இறுதிச்சுற்று இருண்டதாய் போய்விடும். இப்படிக்கு உன் முகவரி தேட விரும்பாத கண்ணன்" என்கின்ற மடலில் அவளது கண்ணீர் கரைகின்றது. முடிவை பிழையாக்கிவிட்டேனே என குமுறுகிறாள்.

காலமும் மெல்லமெல்ல கடந்து மூன்று வருடம் கழித்து கயலுக்கு ஆசிரியர் நியமனம் கிடைத்தது. பாடசாலை அதிபரை சந்தித்து பாடசாலையில் இணைந்து கொள்ள பாடசாலைக்குச் செல்கிறாள். அங்கு தான் கண்ணனும் ஒரு வருடமாய் வேலை செய்கிறான். இது அறியாத இருவரும் காலச்சக்கரத்தில் உருண்டோடுகின்றன. கண்ணன் தனது திருமண அட்டையுடன் அதிபரின் அறையை நாடுகின்றான். "சேர்" என்றவுடன் திரும்பிப் பார்த்தாள் கயல். அதிபர் உடனே கயலை அறிமுகம் செய்து வைக்கிறார். இரண்டு முகமும் மௌனமாகியது. தலைகள் கீழே குனிந்தது. "இவர் பெயர் கண்ணன். நல்லா கதைப்பாரு. நாளை முதல் இவரும் ஜெயில் வாழ்க்கையில் அடையப் போகிறார்" என்று கூறி "இவங்களுக்கும் காட் கொடுங்கள் கண்ணா". "Ok சேர். அடையாளங்களை எப்போதுமே அழிக்க முடியாது. இந்த Cart மாதிரி Sir" என்று கூறி, Cardஐ கொடுத்து விடைபெறுகிறான். மறுநாள் கண்ணனின் கல்யாணம் அரங்கேற ஆரமபித்தது. அவனது தாலி ஏறும் வரை தன்னைப் புரிந்துகொள்வான் என்றிருந்த கயலுக்கு கடைசிப் பிடியும் பறிபோனது. தாலி கழுத்தில் ஏறியதுதான் தாமதம், கயல் தனது கல்யாணப் பரிசை முதல் ஆளாய் கொடுத்துவிட்டு வெளியேறினாள். திருமணம் முடிந்த பின்னர் அவள் தந்த பரிசை பார்க்கிறான். அது கண்ணன் கயலுக்கு வழங்கிய அதே பரிசு. "கண்ணா! உன் வாழ்க்கையை தேடிவிட்டாய். அதுபோல உனக்கு சொந்தமானதை உனனிடம் ஒப்படைத்துவிட்டேன். என்னை மன்னித்துக்கொள். உன் முகவரி தேட எனக்கு மூன்று வருடம் தேவைப்பட்டது. தாமதமாய் கிடைக்கும் எந்த பொருளும் மதிப்பில்லாத பூச்சியம் போல என்பதை புரிந்துவிட்டேன். உனக்கு திருமணப் பரிசாக எனது ரிசைன் லெட்டரை தருகிறேன்... நீ சந்தோசப்பட வேண்டும் என்பதற்கில்லை, உன் வாழ்க்கையை நீ விரும்பிய படி வாழ்வதற்கு எப்போதும் உறுத்திக்கொள்ளாது என்பதற்காய். வருகிறேன்" என்று மடலை முடிக்கிறாள். சற்று சிந்தித்தவன் "நாமதிக்கப்பட்டவை மறுககப்பட்டவையே கயல்" என்று காகிதத்தை கசக்கி போடுகிறான். எம்மை நம்புபவர்களின் நம்பிக்கையை எப்போதும் ஏமாற்றிவிடக்கூடாது. நான் இப்போது வேறு ஒருவருக்கும் சொந்தம். மன்னித்துக்கொள் கயல்" என்று தனது பாதையில் நகர்ந்து கொள்கிறான் கண்ணன். 1000 காதல் புறாக்களைக் கண்ட Svias-ன் நாவல் மரம் இன்று அடுத்த காதலுக்கு பச்சைககொடி காட்டி நிழலை வாரி வழங்குகிறது. மெல்ல மறைந்த ஒளியுடன் வாழ்க்கை சக்கரம் உருண்டோடுகிறது.


paradise
BAKERS $ CAFE
Our Products
No : 21 main street,
Kattankudy - 02
Tel : 077 6015584
065 2248044

Best compliment from

NILAM®

nether wear specialists

நலம் பேண நாடுங்கள்

அகம் பேணும் ஆடைகள்

NILAM®

nether wear specialists

179,181,Trinco Road, Batticaloa

Need Sales Assistants

Contact

NILAM

Tel : 0652228999,0777890040

E: info@nilamtrades.com / W: www. nilamtrades.com

DEVA'S MULTI CENTER

**No.322, New Kalmunai Road,**
**Nochchimunai,**
**Batticaloa.**

Mob: 077 9003265 Tel : 065 2050642




ஒரே கூரையின் கீழ்

ஸ்ரூடியோ, போட்டோ பிரதி, Milk Items,
பாடசாலை உபகரணங்கள், மற்றும் பல...

**இல.322, புதிய கல்முனை வீதி,**
**நொச்சிமுனை, மட்டக்களப்பு..**
**Mob: 077 9003265 Tel : 065 2050642**


Welcome Motors
386A,MAIN STREET,NAVATKUDHA, BATTICALOA
TEL : 0652059999
CAR SALES
Ravi
077 3138331
UN REGISTAR $ REGISTAR VEHICLES

## எமது சஞ்சிகை வெளிவர உதவிய அனைத்து அன்பார்ந்த நெஞ்சங்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகள்!

- எமது நிறுவக பணிப்பாளர், சிரேஸ்ட உதவிப் பதிவாளர், பிரதிப் பதிவாளர் மற்றும் நாடகத்துறை, நடனத்துறை, இசைத்துறை, கட்புலத்துறை, விரிவுரையாளருக்கும் தகவல் தொழில்நுட்ப விரிவுரையாளருக்கும், ஆங்கில விரிவுரையாளர்கள், நூலகச் செயற்பாட்டாளர்கள், கல்வி சாரா ஊழியர்கள் போன்றோரிற்கும் எமது "கலைகோபுரம்" சஞ்சிகை சார்பாக நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

- நாங்கள் சோர்ந்துகொள்ளும் போதெல்லாம் எங்களைத் தட்டிக்கொடுத்து ஊக்குவித்த LG முகாமையாளர் முஹமட் சம்சுதீன் அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள் "இப்படைத் தோற்கின் எப்படை வேல்லும்" என்று எம் உறவினை போல எம்மை வழிநடத்தினார் என்றால் மிகையாகாது.

- DFCC வங்கி காத்தான்குடி கிளை (றொசான் கேமேந்திரா, அரசரெத்தினம் கிருபானந்தன், யோகராஜா சுலக்ஷன், F.ஜெயந், E.கீர்த்திகா, வி.குபேந்திரன், வி.விஜயநதன், T.சிந்துஜன்) MAG அங்கததவர்கள், கி.செந்தூரன், ம.லாவண்யா, சி.துயான் அவர்களுக்கும் எங்கள் உடன்பிறப்புக்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து கொள்கின்றோம். அதுமட்டுமன்றி, சஞ்சிகையினை உரியநேரத்தில் செய்து தந்து உதவிய ஷெரோணி பிரிண்டர்ஸ் உரிமையாளருக்கும், ஊழியர்களுக்கும் எமது நன்றிகள்.

- பாராட்டுக்களை விரும்பாத மனிதன் இல்லை. அதேபோல் தன் குறையை திருத்த மற்றவர்களிற்கு வாய்ப்பளிக்காதவன் மனிதனே இல்லை. இதனைக் கொஞ்சம் புரிந்து கொண்ட சராசரி மனிதன் நான். தயவுசெய்து தவறுகளைச் சுட்டிக்காட்டுங்கள். நிறைவுகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

- அன்பான வாசகர்கள், விளம்பரதாரர்களிடமிருந்து அடுத்த இதழிற்கான ஆக்கங்கள், விளம்பரங்களை வேண்டி நிற்கின்றோம்....

தொடர்புகளிற்கு : 0770321209

SPECIAL OFFER

## ADMISSION

Make Informed Admission Choices

# INSTITUTE OF MEDIA STUDIES

Batticaloa


TV Production


Radio Jockey


Documentary


Photography


Journalism


Media Technology

**BE THE BEST MEDIA PERSON**

VOICE of media NETWORK

VOICE OF MEDIA NETWORK

**065 222 2832 / 071 216 4061**


Call and Enrolment Now

Centre for Media Career and Media Research Resource.

Life's Good LG

இனிதான + மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு


LG (life's Good) Products are Best




Abans is Sri Lanka's No.1 IT retailer and offers an unmatched 4 years warranty and many more options. So, don't be duped, think befor you buy!

Simple & Reliable



Everyday Computing Now with Latest 6th Gen Processor

அபான்ஸ் காட்சியறை

பிரதான வீதி, கல்லடி நாவற்குடா.

(சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகம் முன்பாக)

075 5531187, 077 1320703

065 2229798, 065 5776096

Abans


Printed by : Sheroni Printers : Koolavady, Batticaloa. 065 2228660